www.Padasalai.Net



# Winmeen's

# 12th Std தமிழ்

# Book Back + Important Questions

## New Book

www.winmeen.com

# 12th Tamil Book Back Questions – [New Book]

## [ Book Back + Important Questions ]

### இயல் – 1 - மொழி

### 1. இளந்தமிழே!

**- சிற்பி பாலசுப்ரமணியம்**

இப்பாடலை இயற்றியவர் சிற்பி பாலசுப்பிரமணியம் ஆவார். இவர்தம் 'நிலவுப்பூ' என்னும் கவிதைத் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது. கவிதையாக்கம், பேராசிரியப்பணி, மொழிபெயர்த்தல் எனப் பல்துறை வல்லுநராய் இவர் திகழ்கிறார். இவர் இருமுறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றவர். ஒளிப்பறவை, சர்ப்பயாகம், ஒரு கிராமத்து நதி எனப் பல கவிதைநூல்களை அளித்தவர்.

I. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**செம்பரிதி** (செம்மை + பரிதி), **செந்நிறம்** (செம்மை + நிறம்), **செந்தமிழ்** – (செம்மை + தமிழ்) - பண்புத்தொகைகள்

**முத்துமுத்தாய், வாவா** – அடுக்குத்தொடர்கள்

**சிவந்து, நோக, ஈன்று, கூவி** – வினையெச்சங்கள்

**வியர்வை வெள்ளம்** ( வியர்வை ஆகிய வெள்ளம்) தமிழ்க்குயில் (தமிழாகிய குயில்) – உருவகங்கள்

**குளிர்பொதிகை** – வினைத்தொகை

**இயம்பிடாய்** – முன்னிலை ஒருமை நிகழ்கால வினைமுற்று.

**தந்தாய்** – முன்னிலை ஒருமை இறந்த கால வினைமுற்று

**சாய்ப்பான்** – படர்க்கை ஆண்பால் எதிர்கால வினைமுற்று

**விம்முகின்ற** தோள் – நிகழ்காலப் பெயரெச்சம்

**வீற்றிருக்கும்** – 'செய்யும்' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று

II. **புணர்ச்சி விதி கூறு.**

**முத்தமிழ்** – மூன்று + தமிழ்

'ஆறுஏழ் அல்லவற்றின் ஈற்றுஉயிர் மெய்ஏகும்' என்னும் பொதுப்படி, நிலைமொழி ஈற்று உயிர்மெய் (று) கெட்டு, 'மூன்+ தமிழ்' என்றானது. பின் 'மூன்றன் உறுப்பு வந்தது ஆகும்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள னகரம், வருமொழி மெய்யெழுத்தாகி (த் +அ- த்) 'மூத்+தமிழ்' ஆனது. பின் 'மூன்று ஆறு ஏழு குறுகும்' என்னும் விதிப்படி நிலைமொழி முதலெழுத்து 'மூ' 'மு' எனக் குறுகி, முத் +தமிழ்- 'முத்தமிழ்' என்றானது.

**தெந்தமிழ்** – தெற்கு +தமிழ்

'திசையோடு பிற சேரின் நிலை ஈற்று உயிர்மெய் நீங்கலும்' என்னும் விதிப்படி, 'தெற்கு' என்னும் திசைப்பெயரோடு பிற சொல்லாப 'தமிழ்' சேர்ந்ததால் , நிலைமொழி ஈற்று 'கு' என்னும் உயிர்மெய் கெட்டு ,


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

'தெற்+தமிழ்' என்றானது. பின், 'ற' கரம் னலவாகத் திரிதலும் ஆம்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ற' கரம் 'ன' கரமாய்த் திரிந்து (தென்+தமிழ்) – தென்தமிழ் ஆனது.

**உன்னையல்லால்** – உன்னை + அல்லால்

நிலைமொழி ஈற்றிலும் (ஐ) வருமொழி முதலிலும் (அ) உயிர் வந்தமையால் அவற்றினை உடம்படுத்த, 'இஈ ஐவழி யவ்வும்' என்னும் விதிப்படி 'ய்' தோன்றி 'உன்னை+ய்+ அல்லால்' – உன்னைய் + அல்லால் என ஆனது. பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும் (ய்) வருமொழி முதல் உயிரும் (அ) புணர்ந்து (ய்+அ=ய) 'உன்னையல்லால்' என்றானது.

**செந்தமிழே** – செம்மை + தமிழே

'ஈறு போதல்' என்னும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு. 'செம்+தமிழே' என ஆனது. பின், 'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ம' கர மெய் வருமொழி 'த' கரத்திற்கு இனமான, 'ந' கரமாய் மாறி, செந்+ தமிழ் – செந்தமிழே என்றானது.

III. **உறுப்பிலக்கணம் எழுதுக.**

**சாய்ப்பான்** – சாய் + ப் + ப் + ஆன்

**சாய்** – பகுதி ; **ப்** – எதிர்கால இடைநிலை ; **ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று.

**விம்முகின்ற** – விம்மு + கின்று + அ

**விம்மு** – பகுதி, **கின்று** – நிகழ்கால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.

**வியந்து** – விய + த் (ந்) + த் +உ

**விய** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி.

**இருந்தாய்** – இரு +த்(ந்)+ த்+ ஆய்.

**இரு** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை; ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று

IV. மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு – கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது.

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது.

அ. க மட்டும் சரி ஆ. க, உ இரண்டும் சரி

இ. ங மட்டும் சரி **ஈ. க, ங இண்டும் சரி**

## 2. தமிழ்மொழியின் நடை அழகியல்

**- தி.சு. நடராசன்**

I. **பவுள் தெரிவு**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ. யாப்பருங்கலக்காரிகை ஆ. தண்டியலங்காரம்

**இ. தொல்காப்பியம்** ஈ. நன்னூல்

2. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2: தொடரமைப்பு , சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ. கருத்து 1 சரி ஆ. கருத்து 2 சரி

இ. இரண்டும் கருத்தும் சரி ஈ. கருத்து 1 சரி, 2 தவறு

3. பொருத்துக.

அ) தமிழ் அலகியல் – பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - தி.சு. நடராசன்

இ) கிடை - சிற்பி பாலசுப்ரமணியம்

ஈ) உய்யும் வழி - கி. ராஜநாராயணன்

அ. 4, 3, 2, 1 ஆ. 1, 4, 2, 3 இ. 2, 4, 1, 3 **ஈ. 2, 3, 4, 1**

4. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தரும் நூல் _____

அ.நன்னூல் ஆ. சிலப்பதிகாரம்

இ. தண்டியலங்காரம் **ஈ. தொல்காப்பியம்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ________ சார்ந்த கருத்து நிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும்.

**விடை :** அறிவியல்

2. கவிதையின் இயங்காற்றல் ___________. **விடை :** நடை

3. வன்மையான உணர்ச்சிகளைக் காட்டுபவை ___________ மெய்கள்.

**விடை:** வல்லின

4. முல்லைக்கலியில் ___________ பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

**விடை:** காளைகளின்

5. ___________ ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.

**விடை :** சொல்வளம்

6. சங்கப்பாடல்கள் பலவற்றில் தொடர் அமைப்பு முறை பிறழ்ந்து வருவதை _________ தொடர் என்பர்.

**விடை:** மறுதலைத்

7. இடுக வொன்றோ, சுடுகவொன்றோ – இச்சங்கப்பாட்டடி _____ பிறழ்வோடு அமைந்திருக்கின்றது.

**விடை:** தொடரியல்

## 3. தன்னோர் இலாத தமிழ்

### (தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்)

**I. இலக்கணக்குறிப்பு எழுதுக.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**உயர்ந்தோர்** – வினையாலணையும் பெயர்

**ஏங்கு ஒலி** – வினைத்தொகை

**ஒலி நீர்** ( ஒலி**யைக் கொண்ட** நீர்) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடந்தொக்க தொகை

**நீர்** – தானியாகுபெயர்

**நீர் ஞாலம்** (நீரி**னால் சூழப்பட்ட** ஞாலம்) – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**தொழ**- வினையெச்சம்

**ஆழி** – சினையாகுபெயர்

**வெங்கதிர்** – பண்புத்தொகை

**இலாத** தமிழ் – எதிர்மறைக் குறிப்பு பெயரெச்சம்

**இடை** – ஏழாம் வேற்றுமை உருபு

**இலாத** (இல்லாத) – இடைக்குறை

**II. புணர்ச்சி விதி கூறுக.**

**தன்னேர்** – தன் + நேர்

'னலமுன் தநக்கள் றனவும் ஆகும்' என்னும் விதிப்படி, நிலைமொழி 'ன' கர மெய்யீற்றுக்குமுன் வருமொழி முதலில் வந்த 'ந' கரம் (ந்+ஏ=நே) 'ன' கரமாய்த் திரிந்து (ன்+ஏ-னே) 'தன்னேர்' என ஆனது.

**ஆங்கவற்றுள்** – ஆங்கு +அவற்றுள்

'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்' என்னும் விதிப்படி, வருமொழி முதலில் 'அ' என்னும் உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்று 'உ' கரம் (க்+உ) கெட்டு 'ஆங்க்+அவற்றுள்' என்றானது. பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும்(க்) வருமொழி முதல் உயிரும் (அ) புணர்ந்து (க்+அ-க) ஆங்கவற்றுள் என்றானது.

**தனியாழி** – தனி +ஆழி

'இஈ ஐவழி யவ்வும்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று உயிரையும் (னி –ன்+இ) வருமொழி முதல் 'ஆ' வையும் இணைக்க 'ய' கரமெய் தோன்றி 'தனிய்+ஆழி' என்றானது. பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும் (ய்) வருமொழி முதல் உயிரும் (ஆ) புணர்ந்து (ய்+ஆ-யா) 'தனியாழி' என்றானது.

**வெங்கதிர்** – வெம்மை + கதிர்

'ஈறு போதல்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று 'மை' விகுதி கெட்டு, 'வெம் +கதிர்' என்றானது. பின், 'முன் நின்ற மெய்திரிதல்' என்ற விதிப்படி, வருமொழி முதல் 'க' கரத்திற்கு முன் உள்ள 'ம' கரம் 'க' கரத்திற்கு இனமான 'ங' கரமாகி, 'வெங்+கதிர் – வெங்கதிர்' என்றானது.

**III. உறுப்பிலக்கணம் எழுதுக.**

**உயர்தோர்** – உயர் +த் (ந்)+த்+ஓர்.

**உயர்** – பகுதி; த் – சந்தி, 'த்' 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; ஓர் – 'ஆர்' என்பது 'ஓர்' எனத் திரிந்தது; பலர்பால் வினைமுற்று விகுதி.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**வந்து** – வா(வ) + த் (ந்)+ த் +உ

**வா-** பகுதி, 'வ' எனக் குறுகியது; த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

IV. **பலவுள் தெரிவு**

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னோர் இலாத தமிழ்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம் _________
   அ. அடிமோனை, அடிஎதுகை ஆ. சீர்மோனை, சீர்ஏதுகை
   **இ. அடிஎதுகை, சீர்மோனை** ஈ. சீர்எதுகை, அடிமோனை
2. 'தன்னோர் இலாத தமிழ்' என்னும் பாடலில் அமைந்துள்ள அணி _____
   அ. வேற்றுப்பொருள் வைப்பணி **ஆ. வேற்றுமையணி**
   இ. செம்மொழிச் சிலேடையணி ஈ. பிரிமொழிச் சிலேடையணி
3. 'தன்னோர் இலாத தமிழ்' என்னும் தலைப்பின்கீழ் உள்ள பாடல் இடம் பெற்றுள்ள நூல் ______
   அ. தொல்காப்பியம் ஆ. நேமிநாதம்
   இ. நன்னூல் **ஈ. தண்டியலங்காரம்**
4. தமிழ் தோன்றிய மலை _________
   அ. இமயமலை **ஆ. பொதிகைமலை**
   இ. யானைமலை ஈ. சுவாமிமலை
5. பொதிகைமலையில் தமிழ் தோன்றியது என்று கூறுதற்குக் காரணம் அம்மலையிலிருந்த _______ முனிவரால் தமிழ் போற்றி வளர்க்கப்பட்டதால்.
   அ. கௌத ஆ. விசுவாமித்ர
   **இ. அகத்திய** ஈ. மிருகண்ட
6. தமிழில் அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள்:
   தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்
7. அணியிலக்கணத்தையும் கூறும் தமிழ் இலக்கண நூல்கள்:
   தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்

## 4. தம்பி நெல்லையப்பருக்கு

**- பாரதியார்**

I. **பலவுள் தெரிவு**

1. பழங்காலத்து மூடரைக் கண்டு _____________ குலுங்கச் சிரி.
   அ. உடல் **ஆ. குடல்** இ. வயிறு ஈ. மார்பு
2. தமிழ்நாட்டில் வீதிதோறும் __________ பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.
   அ.ஆங்கிலப் ஆ. நர்சரி **இ. தமிழ்ப்** ஈ. இந்திமொழிப்
3. ஆணும் பெண்ணும் ஓரியிரின் இரு _________ என்றெழுது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அ. கண்கள் ஆ. கைகள் இ. கால்கள் **ஈ. தலைகள்**

4. __________ அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.

அ. ஆணை **ஆ. பெண்ணை** இ. குழந்தையை ஈ. முதியோரை

5. சக்தி, சக்தி, சக்தி என்று பாடு – இவ்வாறு கூறுபவர் _________

அ. பாரதிதாசன் **ஆ. பாரதி**

இ. சிற்பி ஈ. சோமசுந்தரபாரதி

## 5. தமிழாய் எழுதுவோம்

**I. இலக்கணத் தேர்ச்சி கொள்**

1. **பிழையான தொடரைக் கண்டறிக.**

அ. காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்

ஆ. மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

**இ. காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

ஈ. நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

2. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடர்**

**அ. அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்**

ஆ. புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ. வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ. மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் –இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் யாவை?**

1. முடிந்தால் தரலாம் – இயன்றால் தரலாம்.

2. முடித்தால் தரலாம் – சொன்னபடி முடித்தால் தரலாம்.

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்: மொழியின் இயல்பை உணர்த்தும் இலக்கண விதிகளை அறிந்தும் கவனத்துடன் எழுத வேண்டும். மேலும், தவறில்லாமல் எழுத சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் வேண்டும்.

5. **எழுதும்போது குறில் நெடில் எழுத்துப்பிழை ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம்?**

எழுதும்போது குறில் நெடில் எழுத்துகளை மனதளவிலோ வாய்விட்டோ உச்சரித்துக்கொண்டே எழுதினால் குறில் நெடில் பிழைகளைத் தவிர்த்துவிடலாம். 'வாடை' என்னும் சொல்லில் முதல் எழுத்தான நெடிலை நீட்டி உச்சரித்துக்கொண்டே எழுதினால் 'வா' என்னும் நெடிலுக்குப் பதில் 'வ' என்னும் குறிலை எழுதமாட்டோம்.

6. **உயிர் எழுத்துகளை எவ்வாறு கற்க வேண்டும்?**

உயிர் எழுத்துகளை 'அ' னா 'ஆ' வன்னா எனக் கற்க்க் கூடாது. 'அ' என்பதைக் குறுகிய ஓசையுடனும், அதைவிடச் சற்று நீண்ட ஓசையுடன் 'ஆ' என்னும் எழுத்தை உச்சரித்தும் பழக வேண்டும். இவ்வாறு வாய்விட்டு


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

உச்சரித்துப் பழகுவதால், குறில், நெடில் எழுத்துக்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு எளிதில் புலப்பட்டுவிடும். அதனால் 'வடை' எனும் சொல்லை 'வாடை' என எழுதமாட்டார்கள்.

7. **கன்று – கண்று, வண்டி – வண்டி- இவற்றுள் எவ்விருசொற்கள் சரியானவை? எவ்வாறு?**

இதற்கு விடை காண , மெய்யெழுத்து வரிசை எழுத்துகளை எழுத அறிந்திருக்க வேண்டும். க், ங்,ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துக்களாகும். இவற்றுள் 'ற்', 'ன்' ஆகியன இன எழுத்துகளாகும். அதேபோல், 'ட்', 'ண்' ஆகியன இன எழுத்துகளாகும். எனவே, றகர ஒற்றான எழுத்துக்கு முன் அதன் இன எழுத்தாகிய னகரத்தையே இட்டுக் 'கன்று' என எழுத வேண்டும். 'ட' கரத்துக்கு முன் அதன் இன எழுத்தான 'ண' கரத்தை இட்டு 'வண்டி' என எழுத வேண்டும். அதனால்தான் மெய்யெழுத்து வரிசையில் 'ட' வுக்கு அடுத்துள்ள 'ண' கரத்தை 'ட' ண்ணகரமென்றும், 'ற' கரத்திற்கு அடுத்துள்ள 'ன' கரத்தை 'ற' ன்னகரம் என்றும் வழங்குகிறார்கள்.

8. **'நிர்வாகம்' என எழுதுதல் தவறு, 'நிருவாகம்' என எழுதுதலே முறையானது- விளக்குக.**

தமிழில் தனிக்குறிலை அடுத்து ஒற்று எழுத்து வராது. அதனால் , பிற மொழிச் சொல்லான 'நிர்வாகம்' என்பதை, தமிழ் இலக்கண விதிக்கு ஏற்ப 'நிருவாகம்' என எழுதுதலே முறையானது ஆகும்.

9. **எகர ஏகார உயிர்மெய்யெழுத்துகளையும் ஒகர ஓகார உயிர்மெய்யெழுத்துகளையும் வேறுபடுத்தி அறிவது எவ்வாறு?**

'எ' கர 'ஏ'கார உயிர்மெய்யெழுத்துகள் இருவடிவமாய் (கெ, கே) இருக்கும், 'ஒ' கார, 'ஓ'கார மெய்யெழுத்துகள் மூன்று வடிவமாய் (கொ, கோ) அமைந்திருக்கும். இவற்றை நினைவில் கொண்டால் பிழைகளைத் தவிர்க்கலாம்.

10. **க, ச, ட, த, ப, ற ஆகிய வல்லின எழுத்துகளுள் ஒன்றை ஒருசொல் இடையில் கொண்டிருந்தால் அதற்கு முன் எந்த மெய்யெழுத்து வரும்?**

க,ச,ட,த,ப,ற ஆகிய வல்லின எழுத்துகளுள் ஒன்றை ஒருசொல் இடையில் பெற்றிருந்தால் அதற்கு முன் அதே வல்லின எழுத்தோ அல்லது அந்த வல்லின மெய்யெழுத்துக்கு இனமான மெல்லின மெய்யெழுத்தோ வரும்.

(எ.டு): ப – (க்+அ)ம்- ப**க்**கம்: வல்லினமெய் பெற்றது.

ப – (க்+அ)ம் – ப**ங்**கம் : இனமான மெல்லின மெய் பெற்றது.

11. **சொல்லில் ஈரொற்றாய் வரும் தமிழ் எழுத்துகள் எவை? எடுத்துக்காட்டு தருக.**

சொல்லில் ஈரொற்றாய் வரும் தமிழ் எழுத்துகள் ய், ர், ழ் ஆகிய மூன்று மெய்யெழுத்துகள் மட்டுமே.

எ.கா. பா**ய்ச்**சு, ஈ**ர்க்**கும், வா**ழ்க்**கை

12. **'ஒரு', 'அது' என்னும் சொற்களை அடுத்து உயிரெழுத்தை முதலாய்க் கொண்ட சொற்கள் வந்தால் ஏற்படும் மாற்றம் யாது?**

'ஒரு'. 'அது' என்னும் சொற்களை அடுத்து உயிரெழுத்தை முதலாய்க் கொண்ட சொற்கள் வந்தால், 'ஒரு' என்பது 'ஓர்' எனவும், 'அது' என்பது அஃது எனவும் மாற்றமுறும்.

(எ.கா): ஓர் அணில், ஒரு வீடு, அஃது உரிமையானது, அது மாடு

13. **ந், ண், ன், ற், ர், ல், ள், ழ்- இவ்வெழுத்துகள் சொற்களில் எவ்விடத்தில் இடம் பெறும்?**

ந், ண், ன், ற், ர், ல், ள், ழ் – இவற்றுள் 'ந்' மட்டும் சொல்லின் தொடக்கத்தில் இடம் பெறும்.

(எ.கா): நண்டு – ந (ந்+அ)ண்டு.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

'ற'கர மெய், சொல்லின் இறுதியில் இடம் பெறாது; மற்ற மெய்கள் (ண், ன், ற், ர், ல், ள், ழ்) சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் இடம் பெறும்.

(எ.கா): சொல்லின் இடையில் வ**ண்**டு, ஒ**ன்**று, ப**ற்**று, வா**ர்**த்து, கா**ல்**, கொ**ள்**வது, புக**ழ்**வது.

ண், ன், ர், ல், ள், ழ் ஆகிய மெய்கள் சொல்லின் இறுதியில் இடம் பெறும்.

(எ.கா): சொல்லின் இறுதியில் பெ**ண்**, சிவ**ன்**, நா**ர்**, வா**ல்**, கொ**ள்**, இக**ழ்**.

14. **காட்ச்சி, முயற்ச்சி – இவ்வாறு எழுதுவது முறையா?**

முறையன்று. ஏனெனில் 'ட்', 'ற்' ஆகிய மெய்களை அடுத்து மற்ற மெய்கள் வாரா. ஆதலால், 'காட்சி', 'முயற்சி' என எழுதுவதே முறையானது.

15. **சொல்லில் ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு எம்மெய்யெழுத்துகள் இடம் பெறும்?**

சொல்லில் ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசை எழுத்துகளும் க், ச், ப் என்னும் எழுத்து வரிசை எழுத்துகளும் இடம் பெறும்.

(எ.கா): ட், ற் என்னும் எழுத்து வரிசையே இடம் பெறல் : பா**ட்** (ட்+உ)டு, காற்**(ற்**+உ)று.

(எ.கா) : க,ச, ப என்னும் எழுத்து வரிசை இடம் பெறல். வெ**ட்(க்**+அ)கம், கா**ட்(ச்**+இ)சி, தி**ட்(ப்**+அ)பம்.

(எ.கா): கற் +(க்+அ)க – கற்க.

கற்+(ச்+இ)சி+லை – கற்சிலை

கற்+(ப்+அ)ப+வை – கற்பவை

16. **'க்,ச், த், ப்' ஆகிய வல்லினமெய்களுக்குப் பிறகு எம்மெய்கள் இடம் பெறும்?**

க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்களுக்குப் பிறகு அவ்வவ்வெழுத்து வரிசை எழுத்துகளே இடம் பெறும்.

(எ.கா): பா**க்(க்**+உ)கு, க**ச்(ச்**+ஐ)சை, ம**த்(த்**+உ)து, உ**ப்**(ப்+உ)பு

17. **மெய்யெழுத்துகளைத் தொடக்கமாய்க் கொண்டும், சொல்லின் ஈற்றில் மெய்யெழுத்தைக் கொண்டும் தமிழ்ச்சொற்கள் அமையுமா?**

மெய்யெழுத்துகளைத் தொடக்கமாய்க் கொண்டும், சொல்லின் ஈற்றில் மெய்யெழுத்தைக் கொண்டும் தமிழ்ச்சொற்கள் அமையா. அவ்வாறு அமைந்திருந்தால் அவை தமிழ்ச்சொற்கள் அல்ல, பிற மொழிச் சொற்கள் எனத் தெளியலாம்.

(எ.கா) : ப்ரியா , பார்க் – இவை பிறமொழிச் சொற்கள்,

18. **வேற்றுமைப்புணர்ச்சியில் (1) 'ல' கரத்தினைத் தொடர்ந்து வல்லினம் வந்தால், (2) 'ல' கரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வந்தால், (3) 'ள' கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வந்தால், (4) 'ள' கரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வந்தால் எவ்வாறும் திரியும்?**

'ல' கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வந்தால் 'ல' கரம் 'ற' கரமாய்த் திரியும்: கடல் +கரை – கடற்கரை.

'ல' கரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் 'ல' கரம் 'ன' கரமாய்த் திரியும்: பல்+முகம் – பன்முகம்.

'ள' கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வந்தால் 'ட' கரமாய்த் திரியும். மக்கள் +பேறு – மக்கட்பேறு.

'ள' கரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வந்தால் 'ள' கரம் 'ண' கரமாய்த் திரியும்: நாள் +மீன் – நாண்மீன்.

19. **தொழில்+துறை , பல் + நூல் – எப்படி இணைந்தன?**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

தொழில் + துறை – இதில் வருமொழி முதல் தகரம் (த்+உ-து) ஆனதால் நிலைமொழி. ஈற்று 'ல' கரம் 'ற' கரமானது. (தொழில்+துறை- தொழிற்துறை) பின், வருமொழி முதல் 'த' கரம் (த்+உ-து) 'ற' கரமாய் மாறி (தொழிற்+துறை) 'தொழிற்றுறை' ஆனது.

பல் +நூல் – இதில் வருமொழி முதலில் 'ந'கரம் வந்ததால், நிலைமொழி 'ல' கரம் 'ன' கரம் (பல்+நூல் – பன்+நூல்) ஆனது. பின், வருமொழி முதல் 'ந'கரமும் (ந்+ஊ) 'ன' கரமாகி (னூ) 'பன்னூல்' என்றானது.

20. **இயக்குநர்- இயக்குனர் : இவற்றுள் எது சரியான் சொல்? எவ்வாறு?**

இயக்குநர் – இயக்குனர்: இவற்றுள் 'இயக்குநர்' என்பதே சரியான சொல். அதில் உள்ள 'இயக்கு' என்னும் வினைச்சொல் 'ந்' என்னும் பெயரிடை நிலையினையும் , 'அர்' என்னும் ஆண்பால் விகுதியையும் பெற்று, (இயக்கு +ந்+அர்) 'இயக்குநர்' எனப் பெயர்ச்சொல்லாயிற்று.

21. **'உறுப்பிநர்' என எழுதலாமா?**

தவறு; உறுப்பினர் என எழுத வேண்டும். 'உறுப்பு' என்பது பெயர்ச்சொல். அது, 'இன்' என்னும் சாரியையும், 'அர்' என்னும் பலர்பால் விகுதியையும் பெற்று (உறுப்பு+இன்+அர்) உறுப்பினர் ஆனது.

22. **அல் +திணை = அஃறிணை- இதற்கு விதிகள் கூறுக.**

அல்+திணை = அஃறிணை – அல்வழியில், தனிக்குறிலை அடுத்த 'ல' கரம், வருமொழியில் 'த' கரம் வந்ததால், அஃது ஆயுதமாய் மாறியது (அல்+திணை – அஃ +திணை). பின், வருமொழியில் உள்ள 'த'கரம் 'ற'கரமாகி (அஃ+றிணை) 'அஃறிணை' ஆயிற்று.

23. **பிழைகளைத் தவிர்க்க நாம் செய்ய வேண்டுவன யாவை?**

எழுத்துகளைத் தெளிவாய் உச்சரிக்கப் பழக வேண்டும்.

மயங்கொலி எழுத்துகளான ந, ண, ன; ல, ள, ழ; ர, ற ஆகியவற்றிற்கிடையேயுள்ள ஒலிப்பு வேறுபாட்டை அறிந்து ஒலிக்க வேண்டும்.

மேற்குறித்த மயங்கொலி எழுத்துகள் தமிழில் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தினையும் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும்.

தொடக்கத்தில் வாய்விட்டோ மனத்துக்குள்ளோ உச்சரித்துக்கொண்டு எழுதுவது நல்லது.

விரைவாய் எழுதினால் பிழை ஏற்பட வாய்ப்புண்டு. நிதானத்தோடு எழுதுவது நல்லது.

கெ, கே, கொ, கோ போன்ற கொம்பு கொண்ட சொற்களின் குறில் நெடில் வேறுபாட்டினை[ புரிந்துகொண்டு எழுத வேண்டும்.

24. **ஓசையில் குறையாது ஒலிக்கும் முற்றாய்தம் எவ்வாறு வரும்?**

மூன்று புள்ளி (ஃ) வடிவினது முற்றாய்தம். அது குற்றெழுத்துப் பின்னும், உயிரோடு கூடிய வல்லின எழுத்துகள் ஆறனுள் முன்னுமாய் நடுவிலேயே அமையும். (எ.டு): அஃது.

## II. பலவுள் தெரிவு

1. ஆங்கில ஆண்டில் வரும் 'மே' மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தை ____ என எழுத வேண்டும்.

அ. ஜின் ஆ. ஜீன் இ. ஜுன் **ஈ. ஜூன்**

2. தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் _________


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அ. 120 ஆ. 116 இ. 136 **ஈ. 126**

3. ந, ண, ன; ற, ர ; ல, ள, ழ – இவ்வெட்டு மெய்யெழுத்துகளுள் ஒன்று சொல்லின் கடைசியில் வாராது. அது _________

அ. ல **ஆ. ற** இ. ன ஈ. ர

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நாளை நான் ஜப்பானுக்குச் செல்வேன் – இத்தொடரில் உள்ளது __________ பிழை.

**விடை:** சொற்பிழை

2. தமிழில் சொல்லின் முதல் எழுத்தாய் மெய்யெழுத்து அமையாது; அமைந்தால் அது தமிழ் ______

**விடை:** அன்று.

3. 'ட' கர வரிசை எழுத்துகளுக்குமுன் 'ந், ன், ண்' ஆகிய மெய்யெழுத்துகளுள்________ எழுத்து அமையும்.

**விடை:** ண்

4. ஆய்த எழுத்து ஒரு சொல்லின் ________ மட்டுமே வரும்.

**விடை:** இடையில்

5. ஒரு சொல்லின் இடையில் வல்லினத்திற்கு முன் அவ்வல்லின மெய்யோ, அதன் இனமான ________ மெய்யோ வரும்.

**விடை:** மெல்லின

6. வரும் சொல்லில் முதல் எழுத்து உயிரெழுத்தாயின் அதன் முன் வரும் ஒரு _________ என மாறும்.

**விடை:** ஓர்

7. அது அஃது என மாறும். எப்போதெனில், 'அது' என்பதன் முன் வரும் சொல்லின் முதல் எழுத்து _________ எழுத்தாய் இருக்கும்போது.

**விடை:** உயிர்

8. வருமொழி 'த' கரமாயின் 'ல' கரமாய் மாறுவதோடு 'த'கரமும் 'ற' கரமாய் மாறும். இதற்கு எழுத்துக்காட்டு _________

**விடை:** சொல் + துணை- சொற்றுணை

**IV. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere.
கற்றல் என்பது ஒரு புதையல் போலக் கற்பவரை அது தொடர்ந்து செல்லும்.
2. A new language is a new life.
புதுமொழி என்பது புது வாழ்க்கையைப் போன்றது.
3. If you want people to understand you, speak their language.
மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் நீ, அவர்கள் மொழியில் பேச வேண்டும்.
4. Knowledge of languages is the doorway to wisdom.
பன்மொழி அறிவு என்பது ஞானவீட்டின் வாயில் ஆகும்.
5. The limits of my language are the limits of my world.
என்னுடைய மொழியின் வரம்பு என்பது எனது உலகின் வரையறையைப் போன்றது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**V. கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கரிவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே. – மொழி வரலாறு (மு. வரதராசனார்)

**வினாக்கள்:**

1. எது அரியதொரு கலை?
2. மொழி எத்தகைய அரிய கருவியாய் உள்ளது?
3. தாயின் வேட்கை, அவள் கொள்ளும் மகிழ்ச்சி ஆகியன குறித்து எழுதுக.
4. மன வளர்ச்சி, மொழி வளர்ச்சி ஆகியவைபற்றி ஆசிரியர் குறிப்பிடுவன யாவை?
5. மக்கள், மொழி ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவு நிலைபற்றிக் குறிப்பிடுக.

**VI. இலக்கிய நயம் பாராட்டுக.**

முச்சங்கங் கூட்டி
 முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
 அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
 சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதற்க ளெல்லாம்
 அமைத்த பெருமாட்டி!

- **கண்ணதாசன்**

ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப்பாடல்களை எழுதியுள்ள கண்ணதாசன், சொற்சுவையும் பொருட்சுவையும் தத்துவக் கருத்துகளும் நிறைந்த எளிய இனிய கவிதைகள் புனையும் ஆற்றல் பெற்றவர். இவரை மக்கள், கவியரசு எனப் போற்றினர். இவர் தமிழ்நாட்டு அரசவைக்கவிஞராய் இருந்து பெரும்புகழ் பெற்றார். மத்திய அரசுகளின் விருதுகள் பலவற்றைப் பெற்றவஎ.

**திரண்ட கருத்து**

தலைவியாய் விளங்கும் தமிழரசியே! பாண்டியர்களைக்கொண்டு முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று தமிழ்ச்சங்கங்கள் மதுரையில் அமைந்திடச் செய்தாய். அச்சங்கங்களில், அறிவிலும் வயதிலும் முதிர்ச்சி பெற்ற புலவர் பலநூறு பேரைப் பங்கு கொள்ளச்செய்தாய். அவர்களைக் கொண்டு, அளவற்ற பலவித உட்பொருள்களைக் கொண்டு இனிமை துலங்கிடும் கவிதைகளை படைத்திடுமாறு செய்தவளே! வாழ்க.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**மையக் கருத்து**

பாண்டியர்களைக் கொண்டு முச்சங்கம் அமைக்கச்செய்து, பொருள்வளமும் சொல்நயமும் பொருந்திய பலநூறு பாடல்களைப் பல நூறு புலவர்கள் ஆக்கி அளித்திடச் செய்த தமிழரசி, வாழ்க!

## தொடை நயம்

**எதுகை:** அடிதோறும் முதற்சீரின் முதலெழுத்துத் தம்முள் அளவொத்து, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி எதுகையாம்.

கவிதையில் மு**ச்**சங்கம் – அ**ச்**சங்கம்; சொ**ற்**சங்கம் – அ**ற்**புதற்களெல்லாம் என முதலெழுத்துத் தம்முள் அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து எதுகைத் தொடைநயம் அமைந்துள்ளது.

**மோனை:** அடிதோறும் **மு**ச்சங்கம் – **மு**துபுலவர், **அ**ச்சங்க – **அ**ளப்பரிய, சொற்சங்க – **சு**வை மிகுந்த, **அ**ற்புதங்க – **அ**மைத்த என முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவந்து, சீர் மோனைத் தொடைநயம் பெற்று வந்துள்ளது.

**இயைபுத்தொடை:** ஓரடியின் சீர்தோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றிவரத் தொடுப்பது சீர் இயைபுத் தொடையாகும். தமைக்கூட்டி, பொருள்கூட்டி, கவிகூட்டி, பெருமாட்டி என அடிதோறும் ஈற்றுச்சீரின் இறுதிக்கண் சொல்லும் எழுத்தும் ஒன்றி வந்து சீர் இயைபுத்தொடை அமைந்துள்ளது. இயைபுத்தொடையால் பாடலின் ஓசை நயம் சிறப்புற்று விளங்கும்.

**சந்தம்:** 'சந்தம்' என்னும் சொல்லுக்கு இசை, இனிய ஓசை, பண் என்னும் பொருள்களைத் தரும், இப்பாடலில் வல்லினமும் மெல்லினமும் இணைந்து 'ஓசை' நயத்தைத் தருகின்றன.

**அணி:** இக்கவிதையில் தமிழின் பெருமை உள்ளபடியே கூறப்பட்டிருத்தலால், இஃது இயல்பு நவிற்சியணி அமைந்த பாடலாகும்.

**VII. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

1. **தாமரை இலை நீர்போல –** பண்பற்றவர்களிடம் பழக நேரிட்டாலும், தாமரை இலைத் தண்ணீர் போல, பட்டும் படாமலும் பழக வேண்டும்.
2. **கிணற்றுத்தவளை போல –** உலகத்தோடு ஒட்டி உறவாடாமல் சிலர், தங்கள் உண்டு தங்கள் வாழ்க்கை உண்டு தங்கள் வாழ்க்கை உண்டு எனக் கிணற்றுத்தவளை போல வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.
3. **எலியும் பூனையும் போல –** ஒருதாய் வயிற்றில் பிறந்திருந்தும், மாறுபட்ட கருத்தால் எலியும் பூனையும் போலவாழ்தல் முறையன்று.
4. **அச்சாணி இல்லாத தேர் போல –** அழகு, அறிவு செல்வம் ஆகியவை இருந்தும் பிறரை மதித்துப் பேசும் குணமின்மையால், அச்சாணி இல்லாத தேர் போல அவள் மணமின்றித் தன் வீட்டிலே இருக்க நேரிட்டது.
5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல –** தீவிரவாதச் சக்திகளின் இருப்பிடமாய் பாகிஸ்தான் இருப்பது உலகத்திற்கே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலப்பட்டிருந்தும், அந்நாடு இந்தியாமீது வீண்பழி சுமத்துகிறது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**VIII. ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தாய்மொழிக்கல்வியின் சிறப்புகள்.**

**முன்னுரை:** நாடோடிகளாய் வாழ்ந்த மக்கள் , பின்பு ஓர் இடத்தில் ஒன்றுகூடி நிலைத்து ஒரு சமுதாயமாய் வாழத் தலைப்பட்டனர். அக்காலத்தில் தோன்றியது. மொழி. கொள்கை, குறிக்கோள், சமயம், குலம், தொழில் முதலியவற்றால் மக்கள் வேற்றுமைப்பட்டாலும் அவர்கள் ஒன்றுபடுவது அவர்கள் பேசும் மொழியால் ஆகும். அம்மொழியால்தான் மக்கள் தம் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர்.

**சிந்தனை, மொழி- இரட்டைக் குழந்தைகள் :** சிந்தனையும் அதை வெளியிடும் மொழியும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க இயலாதவாறு நெருங்கிய தொடர்புடையனவாய் உள்ளன. ஆதலால், சிந்தனை வளர அதை எடுத்தியம்பும் மொழியும், மொழி வளர எடுத்து மொழிவதற்குரிய சிந்தனையும் ஒருங்கே வளர வேண்டும். ஒன்றை விட்டு மற்றொன்றனைப் பிரித்தால் எதுவும் வளராது தளர்ந்திடவே நேரும். எனவே, வாழ்ந்தால் இரண்டுக்கும் ஒருங்கே வாழ்வு; தாழ்ந்தால் இரண்டுக்கும் ஒருங்கே தாழ்வு, இதனை உணர்ந்து சிந்தனை, மொழி ஆகிய இரண்டையும் ஒருங்கே வளர்க்க வேண்டும், அவ்வாறு வளர்க்கப்படும் மொழியே தாய்மொழி.

**தாய்மொழி என்பது யாது? :** ஒரு குழந்தை தன் தாயின் கருவில் இருக்கும்போதே தாயின் ஊனிலும் உள்ளத்திலும் உயிரிலும் ஒன்றுபட்டு, அவள் வழியாக அம்மொழியினரின் நடை, உடை , எண்ணங்கள், பண்பாடு, நாகரிகம், குறிக்கோள் முதலியவற்றைத் தன் ஊனிலும் உயிரிலும் உள்ளத்திலும் பெற்றுக் கொண்டு பிறப்பதால் அக்குழந்தையின் மொழி, தாய்மொழி எனப்படுகிறது.

**அறிவுக்கண்ணைத் திறக்கும் ஆசான்கள்! :** தாயே குழந்தைக்கு முதல் ஆசிரியர் ஆவாள். குழந்தை தாயிடம் மழலைமொழி பேசுகிறது. பின் தந்தையாலும் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராலும் வரிவடிவில் பயிற்றப் பெற்று அறிவு விரிவு எய்தப்பெறும். இவ்வுலகக் கல்வியை மட்டுமன்றி மெய்யுணர்வு அடைவதற்குரிய கல்வியைப் பெறுவதற்கும் உரிய மொழி, தாய்மொழியாகும்.

**உயர்தனிச் செம்மொழியால் கற்பிக்க இயலாதா? :** தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையும், அவற்றினும் மிகுந்த தகவுடைமையும் உள்ள மொழி **உயர்மொழி**யாகும். மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கும் வல்லமை பெற்றது, **தனிமொழி** ஆகும். திருந்திய பண்பும் சிறந்த நாகரிகமும் பொருந்திய மொழி **செம்மொழி**யாகும். இம்மூன்று இலக்கணங்களையும் தமிழ் குறைவறப் பெற்றுள்ளமையால் அது **உயர்தனிச் செம்மொழி**யாகும். இத்தகைய சீரிய தமிழ்மொழிமூலம் உயர்கல்வி வரை கற்றலே பயனும் பண்புடைமையும் ஆகும்.

**அறிவின் வாயிலை அகலத்திறந்து வைக்கும்! :** தமிழ், பயிற்சி மொழியானால், அஃது ஒருவருக்கொருவர் தம் கருத்துகளை வாய்மொழி, எழுத்து ஆகிய இருவழிகளாலும் வெளியிடவும் உட்கொள்ளவும் இயலும். கருத்துகளை மட்டுமின்றி உணர்ச்சிகளையும் மனவெழுச்சிகளையும் பண்படுத்த இயலும். பன்முக அறிவை மிக உயர்ந்த நிலைவரையில் திரட்டிக்கொள்வதற்கு அறிவு வாயிலாகவும் அமையும்.

மொழியறிவு வளர, இலக்கியச்சுவைஉணர் ஆற்றலும் இலக்கியத்தைத் திறனாயும் ஆற்றலும் உண்டாகும்; இலக்கியப்பற்று, தாய்மொழிப்பற்று ஆகியவற்றை உண்டாக்கிக் கல்விக் கழகங்களை விட்டு நீங்கிய பின்பும் அவை நிலைத்திருக்குமாறு செய்யும்.

**அந்நியர் அகன்ற பின்பும் அந்நிய மொழியிடம் அடிமைப்படுவதா? :** நீண்ட காலம் நம்மை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தவர், ஆங்கிலேயர். அவர்களிடம் அலுவலகப்பணியில் சேர இந்தியர் ஆங்கிலம் பயின்றனர். அதற்கு மெக்காலே


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

கல்வி தேவைப்பட்டது. ஆங்கிலத்தை ஒருபாடமாய் மட்டும் படித்துத் தேர்ச்சி பெறுவது என்னும் நிலை மாறி, அனைத்துப் பாடங்களையுமே ஆங்கில மொழியின் வாயிலாய்ப் பயிலும் நிலை ஏற்பட்டது. இன்று நம்மை ஆள்பவர் யார்? அந்நிய நாட்டாரா? அன்று, அன்று. நம்முள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளும் நிலையில் அமர்த்தப்பட்டிருப்போரிடம் தொடர்பு கொள்ள அந்நிய மொழியை ஏன் பயன்படுத்த வேண்டும்? இங்கேயே கற்று ஆசிரியரானவர் பாடம் நடத்த ஏன் வேற்று மொழியை நாட வேண்டும்?

ஆங்கில வழியில் கற்று உயர்ந்தவர்கள், தாய்மொழியில் சிறந்த கருத்துகளைச் சிந்தனை செய்ய இயலாது; சிந்தித்தவற்றை வெளியிட இயலாது என்கின்றனர், வெட்கமின்றி.

**தாய்மொழிக் கல்விபற்றிக் காந்தியடிகளின் கருத்து:** ஆனால், இந்தியத்தந்தை காந்தியடிகள் ஆங்கிலக்கல்வி குறித்துக் கூறுவது யாது? அவர், "இந்திய மக்களுள் சிலர் தாய்மொழியை மறந்தனர்; அதைப் புறக்கணித்தனர். அவர்கள் தங்கள் தாய்மொழியில் சிறந்த கருத்துகளைச் சிந்தனை செய்திடவும் இயலாது. சிந்தித்தவற்றை வெளியிடவும் இயலாது என்கின்றனர். இது சரியன்று. ஆங்கிலப் படிப்பின்மீது நமக்கு யோகம் ஏற்பட்டுவிட்டது. ஆங்கிலக்கல்வி காரணமாய் நாம் ஆண்மையை இழந்துவிட்டோம்; அறிவும் குன்றிவிட்டது. அந்தக் கல்விமுறையால் பேடிகளாகிவிட்டோம்," என்கிறார்.

**நீரில் இறங்கினால்தான் நீந்த இயலும்! :** இந்தியா விடுதலை பெற்று எழுபதாண்டுகள் ஆன பின்பும் ஆங்கில மோகம் இன்னும் நம்மைவிட்டு அகலவில்லை. ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் அறிவுப்பகலவன் உதிக்கவே மாட்டான் எனத் தவறான கருத்தைப் பரப்பிக்கொண்டிருக்கின்றனர். நமக்குப் பின் விடுதலை பெற்ற மலேசியா, தம் மலாய்மொழிவழிக் கல்வியைக் கொண்டுவந்துவிட்டது. ஆனால், தமிழால் முடியுமா என்று நாம் இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**முடிவுரை:** தமிழ்ப்பற்று மிக்க அனைவரும் ஒன்றுபட்டு போராடினால்தான் தமிழ்நாட்டில் அனைத்துக் கல்வித்துறைகளிலும் தமிழ்வழிக் கல்வியை நிறுவிட இயலும். அதன்மூலம் அன்னை தமிழ், பன்முகச் சிறப்பினைப் பெற்று, உயர்புகழ் பெற்று விளங்குவாள் என்பதில் ஐயம் இல்லை.

**IX. மொழியோடு விளையாடு**

**a) அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி

**விடை:**

உயிரின் ஒலியே தாயின் மொழி
தாயின் மொழியே தமிழ்மொழி!

b) **மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

(எ-டு: கவிஞர் சொல்லால் அணிகலன் செய்யலாம் – கவிமணி

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். **- மறைமலை அடிகள்**
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். **- தமிழ்ஒளி**
3. சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம். **- புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். - **கோதை**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

## இயல் – 1

## இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

### 1. பெருமழைக்காலம்

**I. பலவுள் தெரிவு.**

1. வெள்ளச்சமவெளிகள் அழியக் காரணம்

அ. பருவநிலை மாற்றம் **ஆ. மணல் அள்ளுதல்**

இ. பாறைகள் இல்லாமை ஈ. நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

2. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது

அ. கார்பன் அற்ற பயன்பாடே தேவையாகிறது

**ஆ. பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகின்றன.**

இ. காலநிலை மாறுபடுகிறது.

ஈ. புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

3. '___________ யல்லது காரியமில்லை' என்பது முன்னோர் மொழி.

அ. காரி ஆ. ஓரி இ. பாரி **ஈ. மாரி**

4. நிஷா, வர்தா, கஜா – இப்பெயர்கள் __________ குறிக்கின்றன.

அ. பெண்களை ஆ. குழந்தைகளை

**இ. பெரும்புயல்களை** ஈ. பெரும்மழையை

5. பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாக அதிகமாகப் புவி ________

அ. குளிர்ச்சி அடையும் **ஆ. வெப்பமடையும்**

இ. மழை பெறும் ஈ. சுனாமியால் தாக்கப்படும்

6. புவியின் வெப்பம் ஆண்டிற்குஆண்டு உயர்ந்துகொண்டிருந்தால் __________

**அ. கடல்நீர் மட்டம் உயரும்** ஆ. பெரும்புயல் வீசும்

இ. தாங்க இயலாப் பனி பொழியும் ஈ. தண்ணீரின்றி வாட நேரும்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இயற்கையானது சமநிலையை இழக்கும்போது _______ மாற்றம் ஏற்படும்.

**விடை:** பருவநிலையில்

2. கார்பண்டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றை ___________ வாயுக்கள் என்கிறார்கள்.

**விடை:** பசுமைக்குடில்

3. வெள்ளச்சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய _________


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**விடை:** காப்பரண்

4. நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்க வைத்துக்கொள்வதில் _________ பங்கு இன்றியமையாதது.

**விடை:** மணலின்

5. கடற்கரை ஓரங்களில் _________ காடுகளை வளர்க்க வேண்டும்

**விடை:** சதுப்புநிலக்

## 2. பிறகொரு நாள் கோடை

இப்புதுக்கவிதையை எழுதியவர், அய்யப்பமாதவன் ஆவார். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நாட்டரசன்கோட்டையைச் சார்ந்தவர், இவர். இவர் இதழியல் துறை, திரைத்துறை ஆகியவற்றிலும் ஈடுபாடுள்ளவர். 'இன்று' என்னும் கவிதைக் குறும்படத்தைத் தயாரித்து வெளியிட்டார். இவர் எழுதி வெளியிட்ட கவிதைநூல்கள் 'மழைக்குப் பிறகும் மழை', 'நானென்பது வேறொருவன்', 'நீர்வெளி' முதலானவையாகும்.

**I. பலவுள் தெரிவு**

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது ________

அ. சூரிய ஒளிக்கதிர் ஆ. மழைமேகங்கள்

**இ. மழைத்துளிகள்** ஈ. நீர்நிலைகள்

2. தலையசைத்து உதறுகிறது மீதமான சொட்டுகளை – எது?

அ. ஆடு ஆ. மாடு **இ. மரம்** ஈ. குருவி

3. _________ கண்ட பறவைகள் உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன.

அ. வெயில் **ஆ. மழை** இ. குளிர் ஈ. உணவு

4. ___________ பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகி.யது.

அ. வீடு ஆ. காடு இ. நாடு **ஈ. நகரம்**

## 3. நெடுநல்வாடை

**பெயர்க்காரணம்:** நெடுமை + நன்மை + வாடை – நெடுநல்வாடை. வடதிசையிலிருந்து வீசும் காற்று, வாடையாகும். கூதிர்ப்பருவத்தில் (ஐப்பசி கார்த்திகை மாதகாலத்தில்) வீசும் வாடைக்காற்று தலைவனைப் பிரிந்து தனிமைத்துன்பத்தில் வருந்தும் தலைவிக்கு நெடுவாடை ஆயிற்று. (வருந்தும் தலைவி நெடுஞ்செழியன் மனை)

படையோடு சென்று பாசறையில் தங்கி, இன்பத்தில் மனம் செலுத்தாமல் தான் மேற்கொண்ட வினையை முடிக்க ஏதுவாய் இருந்ததனால் தலைவனுக்கு நல்வாடை ஆயிற்று. (தலைவன் – நெடுஞ்செழியன்)

எனவே, இப்பாட்டுக்குத் தலைப்பு நெடுநல்வடை எனப் பொருத்தமாய் அமைந்தது. இப்பாட்டு நூற்று எண்பத்தெட்டு அடிகளைக் கொண்டதாகும்.

இந்நூல் அகப்பொருள் செய்திகளைக் கூறினும் பாட்டிடையே "வேம்பு தலையாத்த" எனப் பாண்டியன் அடையாளப்பூவினைக் குறித்து வருதலின் புறத்திணை ஆயிற்று. புறத்திணையில் வாகைத்திணை என்பர்.

**நூல் வகை:** எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன சங்க இலக்கியங்கள் ஆகும். அவற்றுள், மிக நீண்ட பாக்கள் பத்தினைத் திரட்டித் தொகுத்த நூலே பத்துப்பாட்டாகும். அப்பத்துப்பாட்டினுள் ஒன்று நெடுநல்வாடையாகும்.

பத்துப்பாட்டுள் நக்கீரர் திருமுருகாற்றுப்படையையும் நெடுநல்வாடையையும் இயற்றியுள்ளார்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**பாட்டுடைத்தலைவன் :** இப்பாட்டின் பாட்டுடைத்தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். மேற்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு, அவ்வருத்தம் தீரும்படி, அவன், பகையை வென்று விரைவில் வருவானாக எனக் கொற்றவையைப் பரவுவாள் கூற்றில் வைத்து நக்கீரனார் பாடியுள்ளார்.

**நூலாசிரியர்:** இந்நூலாசிரியர் நக்கீரர் என்னும் நல்லிசைப்புலவர் ஆவார்; மதுரை கணக்காயனார் மகனார். நக்கீரன் எனவும் வழங்குவர். அகநானூறு முதலிய தொகைநூல்களிலும் இவர் பாடிய பாடல்கள் உள்ளன.

## மழை பொழிந்தது!

### பதவுரை

**பொய்யா வானம் –** பருவம் பொய்யாது மழையினை[ பொழியும் மேகம்,

**வலர் ஏர்ப்பு வளைஇ –** வலமாய் எழுந்து பின் உலகை வளைத்துக்கொண்டு

**வையம் பனிப்ப –** உலகமெல்லாம் குளிர்ச்சியடையும்படி,

**புது பெயல் –** புதிய மழையை,

**பொழிந்து என –** பெய்ததாக,

II. **இலக்கணக் குறிப்பு எழுதுக.**

**பனிப்ப, ஏர்ப்பு** - வினையெச்சங்கள்

**வளைஇ** - சொல்லிசை அளபெடை

**வானம்** (முகில்) - ஆகுபெயர்

**பொய்யா** வானம் – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**புதுப்பெயல் –** பண்புத்தொகை

III. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**பொழிந்த –** பொழி +த்(ந்)+த்+அ.

**பொழி –** பகுதி; **த் –** சந்தி, **'ந்'** ஆனது விகாரம் ; **த் –** இறந்தகால இடைநிலை, **அ –** பெயரெச்ச விகுதி.

IV. **பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**வலனேர்பு –** வலன் + ஏர்பு

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும்(ன்) வருமொழி முதல் உயிரும் (ஏ) புணர்ந்து (ன்+ஏ-னே) 'வலனேர்பு' என ஆனது.

**புதுப்பெயல் –** புதுமை+பெயல்

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'மை'விகுதி கெட்டு, 'புது+பெயல்' என்றானது. பின் , 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர் (து – த்+உ) முன், வருமொழி முதல் வல்லெழுத்து (ப்+எ- பெ) மிக்கு, 'புது +ப்+பெயல் –புதுப்பெயல்' எனப் புணர்ந்தது.

## கோவலர் நிலைமை

### பதவுரை

**ஆர்கலி முனைஇய –** அம்மழைவெள்ளத்தை வெறுத்த,

**கொடும் கோல் கோவலர் –** வளைந்த கோலை உடைய இடையர்கள்,

www.Padasalai.Net

**ஏறுடை இனம் நிரை –** தம்முடைய எருதுகளையும் பசுக்களையும் ஆடுகளையும்,

**வேறு புலம் பரப்பி –** வேறு நிலமாகிய மேட்டு நிலத்தில் மேயுமாறு பரப்பிவிட்டு,

**புலம் பெயர் புலம்பொடு –** தாம் பழகிய நிலத்தை விட்டு வந்த தனிமையினால்,

**கலங்கி –** வருந்தி,

**கோடல் நீடு இதழ் கண்ணி –** தாம் சூடிய நீண்ட இதழ்களையுடைய காந்தள் மலர்களைக் கொண்டு கட்டப்பட்ட கண்ணியில்,

**நீர் அலை கலாவ –** நீர்த்துளி வீந்து அலைக்க

**மெய்கொள் பெரும்பனி நலிய-** தம் உடம்பில் கொண்ட மிகுந்த குளிர் வருத்துவதாலே

**பலருடன் கை கொள் கொள்ளியர் –** பலரும் கூடிய கையை நெருப்பில் காய்த்து, அக்கையிடத்தே கொண்ட வெம்மையை,

**கவும் புடையூஉ நடுங்க –** கன்னத்திலே சேர்த்தலை உடையராய், பற்பறை

கொட்ட நடுங்கினர்

**V. இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**கொடுங்கோல் , பெரும்பனி –** பண்புத்தொகைகள்.

**முனைஇய –** சொல்லிசை அளபெடை

**புடையூ –** செய்யூ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

**கோல் கோவலர்** (கோ**லை உடைய** கோவலர்), **இதழ் கண்ணி** (இதழ்**களைக் கொண்ட** கண்ணி) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்.

**கொள் கொள்ளி –** வினைத்தொகை

**கைக்கொள் (**கையின்**கண்** கொள்கின்ற), **புலம் பரப்பி** (புலத்தின்**கண்** பரப்பி)- ஏழாம் வேற்றுமைத்தொகைகள்.

**கொள்ளியர் –** குறிப்பு வினையாலணையும் பெயர்.

**பரப்பி, கலங்கி, நடுங்க –** வினையெச்சங்கள்.

**VI. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.**

**கோற்கோவலர் –** கோல் +கோவலர்.

'லளவேற் றுமையில் றடவும்' என்னும் விதிப்படி நிலைமொழியீற்று 'ல' கரம் 'ற' கரமாய்த் திரிந்து, கோல் +கோவலர் – கோற்கோவலர்' எனப் புணர்ந்தது.

**ஏறுடை –** ஏறு + உடை

'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்' என்னும் விதிப்படி, வருமொழி முதலில் உயிர் (உ) வந்ததால் நிலைமொழி ஈற்று 'உ'கரம் (ற்+உ – று) கெட்டு, 'ஏற்+உடை' என ஆனது. பின், 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும்(ற்) வருமொழி முதல் உயிரும் (உ) புணர்ந்து (ற் +உ –று) 'ஏறுடை' என்றானது.

**இனநிரை –** இனம் +நிரை


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று மகரம் கெட்டு, நிலைமொழி உயிரீறாய் நின்று 'இன(ன்+அ) +நிரை' என ஆனது. பின், வருமொழி முதலில் மெல்லினம் (ந்) வந்ததால் 'இனநிரை' என இயல்பாய்ப் புணர்ந்தது.

VII. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**கலங்கு** - கலக்கு + இ

**கலக்கு** – பகுதி, 'கலங்கு' எனத் திரிந்தது விகாரம்; **இ** – வினையெச்ச விகுதி.

**நடுங்க** - நடுங்கு + அ.

**நடுங்கு** – பகுதி ; **அ** – வினையெச்ச விகுதி

**அஃறிணை உயிர்களின் நிலை**

**பதவுரை**

**மா மேயல் மறப்ப** – விலங்குகள் மேய்தல் தொழிலை மறந்து ஒடுங்கவும்,

**மந்தி கூர** – குரங்கு குளிரால் மிக நடுங்கி வருந்தவும்

**படிவன பறவை வீழ** – மரத்திலே தங்கும் பறவைகள் வாடைக்காற்று மிகுதியால் நிலத்தில் வீழவும்,

**கறவை** – பசுக்கள்,

**கன்று கோள் ஒழிய** – தம் கன்றுகள் பால் உண்ணுதலை விடும்படி அவற்றினை,

**கடிய வீசி** – வேகமாய் உதைத்துத் தள்ளவும்,

**குன்று குளிர்ப்பு அன்ன** – அஃறிணையாகிய மலையையும் குளிரச்செய்வது போன்ற,

**கூதிர் பானாள்** – கூதிர்க்காலத்தின் நடுயாமத்தில்

VIII. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**மேயல்** – தொழிற்பெயர்

**மறப்ப, வீசி** – வினையெச்சங்கள்

குளிர்ப்**பன்ன** (அன்ன) – உவம உருபு

I. **பலவுள் தெரிவு**

1. **பொருத்துக.**

அ) குரங்குகள் 1. கன்றுகளைத் தவிர்த்தன.

ஆ) பசுக்கள் 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன.

இ) பறவைகள் 3. குளிரால் நடுங்கின.

ஈ) விலங்குகள் 4. மேய்ச்சலை மறந்தன.

**விடை:**

அ) குரங்குகள் 1. குளிரால் நடுங்கின.

ஆ) பசுக்கள் 2. கன்றுகளைத் தவிர்த்தன.

இ) பறவைகள் 3. மரங்களிலிருந்து வீழ்ந்தன.

ஈ) விலங்குகள் 4. மேய்ச்சலை மறந்தன.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

2. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ. வினைத்தொகை ஆ. உரிச்சொல் தொடர்

இ, இடைச்சொல் தொடர் **ஈ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

3. மா மேயல் மறப்ப – இத்தொடரில் உள்ள 'மா' என்பதன் பொருள் _________

அ. பெரிய ஆ. மாமரம் இ. யாவை **ஈ. விலங்கு**

4. கூதிர்ப்பானாள் – இதில் பானாள் என்பது __________

**அ. நடுயாமம்** ஆ. காலை இ. மாலை ஈ. அந்திமாலை

5. நெடுநல்வாடையில் குறிப்பிடப்பட்டுள்ள தலைவன்

அ. இளம்பெருவழுதி ஆ. சேரன் செங்குட்டுவன்

**இ. பாண்டிய நெடுஞ்செழியன்** ஈ. கூன் பாண்டியன்

6. நெடுநல்வாடை புறப்பாடலாய்க் கருதப்படக் காரணம் _________

அ. பனம்பூ ஆ. அத்திப்பூ இ. ஆவரம்பூ **ஈ. வேம்பு**

7. நெடுநல்வாடையை இயற்றியவர் _________

அ. கபிலர் ஆ. பரணம் இ. ஔவையார் **ஈ. நக்கீரர்**

8. நெடுநல்வாடை 188 அடிகளைக் கொண்ட _________பா ஆகும்.

அ. வஞ்சி ஆ. வெண் இ. கலி **ஈ. அகவல்**

## 4. முதல் கல்

## 5. நால்வகைப் பொருத்தங்கள்

I. **வினாவிடை**

1. **மொழியின் அடிப்படைப் பண்புகள் யாவை? அவை எவ்வாறு பயன்படுகின்றன?**

மொழியின் அடிப்படைப் பண்புகள் திணை, பால், எண் , இசம் ஆகும், இவை சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் பயன்படும்.

2. **எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெரிங்கிய இயைபு இருக்கும் – விளக்குக.**

**எ.கா:** வள்ளி பாடம் படித்தாள்.

இச்சொற்றொடரில், 'வள்ளி' என்பது பெண் ஒருத்தியின் பெயர் என்பதால் அஃது உயர்திணையாகும். பெண்ணைக் குறிப்பதால் 'வள்ளி' என்பது பெண்பாலாகும். 'வள்ளி' என்பது ஒருவரைக் குறிப்பதால் அஃது ஒருமையாகும். 'நான்' எனத் தன்மையாகவோ, 'நீ' என முன்னிலையாகவோ குறிக்காமல், 'வள்ளி' என்றதால் அது படர்க்கை எனவும் அறிகிறொம்.

இச்சொற்றொடரில் 'படித்தாள்' என்னும் வினைமுற்றில் 'ஆள்' என்னும் பெண்பால் வினைமுற்று இருப்பதால் 'படித்தவள்' என்னும் சொல் உயர்திணை பெண்பாலைக் குறிக்கிறது என அறிகிறோம்; மேலும், 'படித்தவள்' என்னும் சொல் ஒருத்தியைக் குறிப்பதால் 'ஒருமை' என அறிகிறோம்; 'படிக்கிறேன்' எனத் தன்மையாகவோ, 'படிக்கிறாய்' என முன்னிலையாகவோ இல்லாமல் 'படித்தாள்' என இருப்பதால் 'படர்க்கை' எனவும் அறிகிறோம்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

இவ்வாறு, எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே திணை, பால், எண், இட ஆகியவை நெருங்கிய இயைபுடையனவாய் இருக்கும்.

**3. இன்று வினாச்சொற்களைப் பயனிலைகளாய் அமைத்து, பொருட்குறிப்பு அடிப்படையில் திணை வேறுபாடு அறிய முடிகிறது. எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

(எ.கா): அங்கே நிற்பது யார்?

அங்கே நிற்பது யார்?

முதற்சொற்றொடரில் உள்ள 'யார்' என்னும் பயனிலைமூலம் 'நிற்பது' என்பது உயர்திணை என அறிகிறோம். இரண்டாம் சொற்றொடரில் 'யாது' என்னும் பயனிலை மூலம் 'நிற்பது' என்பது அஃறிணை என அறிகிறோம்.

**4. தமிழில் பால் பகுப்பு எவ்வாற் அமைந்துள்ளது?**

தமிழில் பால் பகுப்பு, இலக்கண அடிப்படையிலே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை ஆகிய இடத்தைத் தவிரத் தமிழில் உள்ள பெயர்கள் படர்க்கை இடத்தில் அமைந்து வரும். பயனிலை விகுதிகளான அன், ஆன், அள், ஆள், அது ஆகியவை பால் பகுப்பைக் காட்டுகின்றன.

5. **அவர் வந்தார் – இத்தொடர் ஒருமைப்பொருளை உணர்த்துகிறதா, பன்மைப்பொருளை உணர்த்துகிறதா?**

அவர் வந்தார் – இச்சொற்றொடரில் உள்ள 'அவர்' என்னும் எழுவாயில் உள்ள 'அர்' என்னும் விகுதியும், 'வந்தார்' என்னும் வினைமுற்றில் உள்ள 'ஆர்' என்னும் விகுதியும் பலர்பாலைச் சுட்டுபவையே.

6. **தன்மைப்பன்மை எத்தனை வகைப்படும்? விளக்குக.**

தன்மைப் பன்மை இருவகைப்படும். அவை உளப்பாட்டுத் தன்மைப்பன்மை , உளப்படுத்தாத தன்மைப்பன்மை என இருவகைப்படும்.

(எ.கா): நா முயற்சி செய்வோம்.

இத்தொடரில், இவ்வாறு கூறுபவர், தம்மோடு தம் முன் இருப்பவரையும் சேர்த்துக் குறிப்பிடுவதால், இத்தொடர் உளப்பாட்டுத் தன்மைப்பன்மைத் தொடராகும்.

நாங்கல் முயற்சி செய்வோம்.

இத்தொடரில், இவ்வாறு கூறுபவர், முன்னிலையில் இருப்பவரை விலக்கித் தம்மையும் தம்மோடு இருப்பவரையும் மட்டும் சேர்த்துக் கூறுவதால், இத்தொடர் முன்னிலையில் உள்ளோரை உளப்படுத்தாத தன்மைப்பன்மை எனப்படும்.

**7. தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. எவ்வாறு?**

தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. மாட்டினத்தில் பெண்பாலைக் குறிக்கப் பசுமாடு என்கிறோம்; ஆண்பாலைக் குறிக்கக் காளைமாடு என்கிறோம். பிற விலங்குகளைக் குறிக்கையில், ஆண் – பெண் என்னும் பால் பாகுபாட்டுப் பெயர்களை முன்சேர்த்து ஆண்குரங்கு, பெண்குரங்கு என்று வழங்குகிறோம்.

**II. இலக்கணத் தேர்ச்சி கொள்.**

1. தமிழில் திணைப்பாகுபாடு ____________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

**அ. பொருட்குறிப்பு** ஆ. சொற்குறிப்பு

இ. தொடர்க்குறிப்பு ஈ. எழுத்துக்குறிப்பு

2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல் ____________

அ. நன்னூல் ஆ. அகத்தியம்

**இ. தொல்காப்பியம்** ஈ. இலக்கண விளக்கம்

3. யார், எது ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே _______

அ. அஃறிணை, உயர்திணை **ஆ. உயர்திணை, அஃறிணை**

இ. விரவுத்திணை, அஃறிணை ஈ. விரவுத்திணை, உயர்திணை

4. பொருத்தி விடை தேர்க.

அ) அவன் அவள் அவர் 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ. நாங்கள் முயற்சி செய்வோம் 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ. நாம் முயற்சி செய்வோம் 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ. நாங்கள், நாம் 4. பதிலிடு பெயர்கள்

**அ. 4, 1, 2, 3** ஆ. 2,3, 4, 1 இ. 3, 4, 1, 2 ஈ. 4, 3, 1, 2

5. **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**

மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன திணை, பால், எண், இடம் ஆகும்.

6. **உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

நண்பர் உண்டனர் (அர்)

நண்பர் உண்ப(ப)

7. **இடப்பாகுபாடு எவற்றில் வெளிப்படாது, எவற்றில் வெளிப்படும்?**

இடப்பாகுபாடு பெயர்ச்சொற்களில் வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும், வினைமுற்றுகளிலுமே வெளிப்படும்.

8. **தன்மை இடம், முன்னிலை இடம் ஆகியவற்றில் எப்பாகுபாடு உண்டு, எப்பாகுபாடு இல்லை?**

தன்மை இடத்திலோ முன்னிலை இடத்திலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டு.

நான் உண்டேன் (ஏன்) - தன்மை ஒருமை

நாம் உண்டனம் (அம்) - தன்மைப் பன்மை

நீ உண்டனை (ஐ) - முன்னிலை ஒருமை

நீர் உண்டனை (ஐ) - முன்னிலைப் பன்மை

தன்மை இடத்திலோ முன்னிலை இடத்திலோ பால் வேறுபாடு இல்லை.

நான் சென்றேன் - பால் வேற்றுமை புலப்படவில்லை

நாங்கள் சென்றோம் - பால் வேற்றுமை புலப்படவில்லை

நீ சென்றாய் - பால் வேற்றுமை புலப்படவில்லை

நீர் உண்டீர் - பால் வேற்றுமை புலப்படவில்லை

9. **'தாங்கள்' என்னும் சொல், பால்பகுப்பில் எப்பிரிவைச் சார்ந்தது? அச்சொல் இன்று எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

'தாங்கள்' என்பது பால் பகுப்பில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகும். ஆனால், அச்சொல் இன்று முன்னிலை இடத்தில் வருகிறது.

(எ.கா): தாங்கள் வந்தமையால் பெருமகிழ்ச்சி கொண்டோம்.

**III. மொழிபெயர்ப்புப்பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச்சொற்களையும் அவற்றின் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக.**

| ஆங்கிலம் | தமிழாக்கம் |
|---|---|
| 1. shocked | மனம் வெதும்பி |
| 2. deforestation | காடுகள் அழிக்கப்பட்டதால் |
| 3. for thirty years | தொடர்ந்து முப்பது ஆண்டுகள் |
| 4. Plant trees | மரங்களை நட்டு |
| 5. regions | பகுதிகளில் |
| 6. food, fuel | உணவையும் எரிபொருளையும் |
| 7. soil erosion | மண் அரிப்பு |
| 8. desertification | பாலைவனமாவதை |
| 9. fruits of representative democracy | மக்களாட்சியின் பயன்களை |
| 10. generation | தலைமுறையினர் |
| 11. made a minister environment | சுற்றுச்சூழல் அமைச்சரானார் |
| 12. out standing success | தன்னலமற்ற பணி |
| 13. thirty million trees | மூன்று கோடி மரங்கள் |
| 14. social forests | சமூகக்காடுகள் |
| 15. elected | தேர்வு செய்யப்பட்டு |
| 16. Minister | அமைச்சர் |
| 17. Parliament | பாராளுமன்றம் |
| 18. movement | இயக்கம் |
| 19. halting | தடுத்து |
| 20. sustainable | நிலையான |

**IV. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. **தலை, தளை, தழை: தளை**யிடப்பட்டிருந்த மாடு அவ்வப்போது **தலை**யை அடைத்துத் **தழை**யைத் தின்றது.
2. **கலை, களை, கழை: களை**யான முகம் கொண்ட அந்த இளம்பெண், **கழை**மீது கட்டப்பெற்ற கயிற்றில் ஏறி ஆடிய ஆட்டக்**கலை**யைக் கண்டு களித்திருந்தோர் அனைவரும் பணம் அளித்தனர்.
3. **அலை, அளை, அழை:** கரை நோக்கி வீசப்பட்ட கடல் **அலை**களோடு வந்த **அளை**கள் (நண்டுகள்) கடல் **அழை**த்ததால்தால் அவை மீண்டும் கடல் நோக்கிச் சென்றனவோ?

**V. இலக்கிய நயம் பாராட்டுக.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீர்த் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பிவீரா!

**- பாரதியார்**

தென்பாண்டிய நாடு வழங்கிய நற்றமிழ்க்கவிஞர், சி.சுப்பிரமணிய பாரதியார். 'உயிர்நிகர் தமிழை உயர்வுறச் செய்தவன்; நீடுதுயில் நீக்க வந்த நிலா; காடு மணக்கும் கருப்பூரச் சொற்கோ; பைந்தமிழ்த் தேர்ப்பாகன்; அவன் ஒரு செந்தமிழ்த் தேனீ' என்று பாரதிதாசனால் பாராட்டப்பெற்றவர். தம் பாட்டுத்திறத்தால் இவ்வையத்தைப் பாலித்திட வந்த பெருங்கவிஞர். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந் தனவென"ப் போற்றிய கவிஞர், மகாகவி பாரதியர். இந்திய நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவருள் பாரதியார் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

**திரண்ட கருத்து**

வானில் மின்னல் விட்டுவிட்டு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. கடலில் எழுந்த அலைகள் மேல்நோக்கி விண்ணை இடிப்பது போல மிகவும் உயர்ந்து எழும்பி வீழ்கின்றன. மேகங்கள் பேரொலியுடன் குமுறுகின்றன. காற்றோ கூ கூவென்னும் இரைச்சலுடன் வானம் முழுவதும் ஒலிக்கிறது. அப்போது வானம் 'சட்டச்சட சட்டச்சட டட்டா' என்னும் தாளஒலியுடன் கனத்த மழையைப் பெய்விக்கிறது. இவ்வாறு எட்டுத் திசையும் இடிந்துவிடுவது போல இந்தப் பெருமழை எப்படி ஏற்பட்டதடா வீரா!

**மையக் கருத்து**

மின்னல் வெட்டுகிறது; வானளாவக் கடலலை எழுந்து தாழ்கிறது ; மேகம் கொட்டி முழங்கியது; பெருங்காற்று வீசுகிறது; தாள முழக்கத்தோடு எட்டுத் திசையும் இடிந்துவிடுவது போலக் கனத்த மழை பொழிகிறது.

**தொடை நயம்**

**எதுகை**

அடிதோறும் முதற்சீரின் முதலெழுத்துத் தம்முள் அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி எதுகைத் தொடையாகும்.

அடிதோறும் முதற்சீரில் வெட்டி, கொட்டி, சட்ட, எட்டு என ந்துகைத் தொடைநயம் பொருந்தி வந்துள்ளது.

**மோனை**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

ஓரடியில் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றுவரத் தொடுப்பது சீர்மோனைத் தொடையாகும்.

வெட்டி – மின்னல், வீரத் – விண்ணை, கூவென்று – குடையுது, தாளங்கள் – கணைக்குது, எட்டு – இடிய எனச் சீர்மோனை நயம் அமைந்து வந்துள்ளது.

இப்பாடலில் வல்லின எழுத்துகள் மிகுந்து வந்துள்ளன. அவை பாடலுக்கு ஒரு கம்பீர நடையை உருவாக்கித் தருகின்றன. இப்பாடலைப் படிக்கும்போது மின்னலும் மேகமும், காற்றும் மழையும் நம் கண்முன் தோன்றுவன போன்ற ஒரு காட்சி எழுகிறது.

## இயல் – 3

## பண்பாடு

### 1. தமிழர் குடும்ப முறை

**I. பலவுள் தெரிவு**

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை __________

அ. அறவோர் துறவோர் **ஆ. திருமணமும் குடும்பமும்**

இ. மன்றங்களும் அவைகளும் ஈ. நிதியமும் சுங்கமும்

2. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே- ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது_______

அ. தனிக்குடும்ப முறை ஆ. விரிந்த குடும்ப முறை

இ. தாய்வழிச் சமூகமுறை **ஈ. தந்தைவழிச் சமூக முறை**

3. மனித சமூகத்தின் அடிப்படை அலகு _________

அ. ஆண் ஆ. பெண் **இ. குடும்பம்** ஈ. குலம்

4. 'குடும்பம்' என்னு சொல்__________ என்னும் நூலில் காணப்படுகிறது.

**அ. திருக்குறள்** ஆ. நாலடியார்

இ. நான்மணிக்கடிகை ஈ. இனியவை நாற்பது

5. 'தம்மனை' என்பது __________ இல்லம்.

**அ.மனைவியின்** ஆ. கணவனின்

இ. தந்தையின் ஈ. உடன்பிறந்தானின்

6. கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே ______________

அ. மணந்தகம் ஆ. பிறந்தகம்

**இ. வளர்ந்தகம்** ஈ. புகுந்தகம்

7. பதிற்றுப்பத்து கூறுவது ___________ நாட்டு மருமக்கள் தாயமுறையையே.

அ. பாண்டிய **ஆ. சேர** இ. சோழ ஈ. கொங்கு


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

8. சங்க காலத் தாய்வழிச் சமூகத்தில் __________ மகன் என்றே கூறப்பட்டது.

**அ. இவள்** ஆ. இவன் இ. அவர் ஈ. அவர்கள்

9. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் _________ச் சென்று சேர்ந்தன.

அ. ஆண்களுக்கு **ஆ. பெண்களுக்கு**

இ. மாமனுக்கு ஈ. பெற்றோருக்கு

10. 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்னும் குறுந்தொகைப் பாடலடிமூலம் பெண் தன் _________ சார்ந்திருந்தாள் என அறிய இயல்கிறது.

அ. தந்தையை ஆ. மாமனாரை

**இ. கணவனை** ஈ. உடன்பிறந்தோரை

11. "மறியிடைப் படுத்த மான் பிணை போல" என்னும் ஐங்குறுநூறு அடி தெளிவுப்படுத்துவது __________குடும்பத்தை.

அ. தந்தைவழி ஆ. தாய்வழி

இ. விரிந்த **ஈ. இளமகவுநிலை**

## 2. விருந்தினர் இல்லம்

**ஆசிரியரைப் பற்றி:**

ஆப்கானிஸ்தான் நாட்டைச் சார்ந்த ஜலாலுத்தீன் ரூமி என்பவர் சிறந்த கவிஞராவார். இதன் கவிதைகளுள் ஒன்று நமக்குப் பாடமாய் அமைந்துள்ளது. ரூமி, 25,600 பாடல்களைக் கொண்ட 'மஸ்னவி' என்னும் நூலைப் படைத்தார். அந்நூல் ஆழமான ஆன்மீகக் கருத்துகளைக் கொண்ட சூஃபி தத்துவப் பாடல்களாகும்.

I. இவற்றை, வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாது?

அ. வக்கிரம் ஆ. அவமானம்

இ. வஞ்சனை **ஈ. இவை அனைத்தையும்**

## 3. கம்பராமாயணம்

வேடுவர் தலைவன் குகன். அவன் பாறை போன்ற தன் உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்வன். காட்டிற்கு வந்த இராமன் கங்கையைக் கடக்கக் குகன் உதவுகிறான். அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில் இராமன் – குகன் ஆகியோர் நட்பு முகிழ்க்கிறது. இராமன் பேரரசனாய் இருப்பினும் வேடனான குகனைத் தன் உடன்பிறப்பாய் ஏற்றுக்கொள்கிறான். பின்னாளில் குகனைச் சந்திக்கும் பரதன்கூட "எனக்கும் மூத்தோன்" என அவனை ஏற்கிறான்.

**நூல்:** கல்வியில் பெரியவராம் கம்பரால் இயற்றப்பட்ட நூல் ஆதலின் கம்பராமாயணம் எனப் பெயர் பெற்றது. வட மொழியில் உள்ள வான்மீகி இராமாயணத்தை வேறுபடுத்திக் காட்ட இது கம்பராமாயணம் என வழங்கப்பட்டது. வான்மீகி இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்ட வழிநூலே இது. கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் என விரியும். இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடந்தொக்கத்தொகையாகும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**பெயர்க்காரணம்:** இராம +அயநம் என்னும் இருசொற்கள் இணைந்து அமைந்த தொடர் இது. இராமனைப்பற்றிய செய்திகளை அறிவிக்கும் நூல் என்பது இதன் பொருளாகும். இந்நூலிற்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் என்பதே ஆகும்.

**பிரிவுகள்:** இந்நூல் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்ட, யுத்த காண்டம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இந்நூலின் ஏழாவது காண்டமான உத்தர காண்டம் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. இந்நூலின் காண்டத்து உட்பிரிவு படலம் எனப்படும்.

**ஆசிரியர் வரலாறு**

**பெயர்:** கம்பர், கம்ப நாடர், கம்ப நாடுடையார், கம்பத்தின் அடியில் பிறந்தவர், கம்பைக் கையிலே தாங்கியவர், கம்பங் கொல்லையைக் காத்தவர் போன்ற காரணங்களால் இப்பெயர் அமைந்தது என்பர். சிலர் இப்பெயர் இயற்பெயரே என்பர்.

**ஊர்:** சோழநாட்டுத் திருவழுந்தூர்.

**தந்தை:** ஆதித்தர்

**மரபு:** உவச்சர் மரபு.

**ஆதரித்தவர்:** திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்.

**காலம்:** இரண்டாம் குலோத்துங்கனும் அவன் மகனும் வாழ்ந்த 12ஆம் நூற்றாண்டு, கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்பாரும் உள்ர்.

**சமகாலப்புலவர்:** ஒட்டக்கூத்தர், புகழேந்தி.

**அரங்கேற்றம் :** இந்நூல் அரங்கேறிய இடம் திருவரங்கம் என்பர். கவிச்சக்கரவர்த்தி கம்பர் எனப் பாராப்பெறும் கம்பரைப்பற்றிய தெளிவான வரலாறு தெரியவில்லை.

'கல்வியில் பெரியவன் கம்பன்'

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'

'விருத்தமென்னும் ஒண்பாவுக்கு உயர்கம்பன்'

என்னும் தொடர்கள் கம்பரின் பெருமையை விளக்கும்.

**நன்றியுணர்வு**

"வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுப்ப வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி"

என்னும் கம்பராமாயணப்பாடலின் தொடர்கள் கம்பரின் நன்றியுணர்வை வெளிப்படுத்தும்.

**தன்னடக்கம்**

"ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையன் பேச லுற்றான்
என்னயான் மொழிய லுற்றேன்"


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

என்ற தொடர், கம்பருக்கு முதல் நூல் ஆசிரியராகிய வான்மீகியிடம் உள்ள மதிப்பையும் கம்பரின் தன்னடக்கத்தையும் உணர்த்துகிறது.

**தாய்நாட்டுப்பற்று**

அயோத்தியை வருணிக்கும் கம்பர் "காவிரி நாடன்ன கழனி நாடோரீஇ" எனக் காவிரி பாயும் சேர நாட்டைச் சுட்டுவதால் அவரது தாய்நாட்டுப்பற்று புலனாகும்.

**நூலின் பெருமை**

சொற்சுவை, பொருட்சுவை பொருந்தக் கற்பனை நயம் செறியக் கம்பரால் இயற்றப்பட்ட இந்நூல் தமிழன்னையின் பெருமையை உயர்த்தும் ஒப்பற்ற காவியமாகும். தமிழில் உள்ள மிகப்பெருங் காவியங்களும் கம்பராமாயணமே மிகப்பெரியது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்ட நூலிது.

"கம்ப நாடன் கவிதை யிற்போல்
கற்றோர்க்கு இன்பம் களியாதே"
"கம்பன் கவியே கவி"

என்று வரும் தொடர்கள் கம்பர் பெருமையையும் அவர் பாடல்களின் பெருமையையும் நன்கு புலப்படுத்துவனவாம்.

**அயோத்தியா காண்டம்**

கம்பராமாயணத்துள் இரண்டாவது காண்டமாய் விளங்குவது, அயோத்தியா காண்டம். அயோத்தியில் நடந்த கதைப்பகுதியைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. காண்டம் – பெரும்பிரிவு.

**குகப்படலம்**

**1. இராமபிரான் குகனோடு தோழமை பாராட்டி உரைத்தல்**

**பதவுரை**

I. **இலக்கணம்**

**கேளா** – 'செய்யா' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்

**நளிர்கடல்** – உரிச்சொல் தொடர்

**கடல் நிலம்** – மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

இந்**நன்னுதலவள்** – குறிப்பு வினையாலணையும் பெயர்.

**என்னுயிர்** (எனது உயிர்) – ஆறாம் வேற்றுமைத்தொகை.

**நின்கேள்** (நினக்குக் கேள்) – நான்காம் வேற்றுமைத்தொகை

**2. இராமன், "முன்பு நாங்கள் நால்வராயிருந்தோம்; இன்றுமுதல் ஐவரானோம்," எனல்.**

II. **இலக்கணம்**

**உளது**(உள்ளது) – இடைக்குறை

**உன்னேல்** – எதிர்மறை ஏவல் வினைமுற்று.

**உளெம், நால்வேம்** – தன்மைப்பன்மைக் குறிப்பு வினைமுற்றுகள்.

**உன்னா** அன்பு – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஐவர்கள் **உளரானோம்** – தன்மையில் படர்க்கை வந்த இடவழுவமைதி


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## ஆரணிய காண்டம்

## சடாயு உயிர் நீத்த படலம்

## 3. இராமன் சடாயுவுக்கு இறுதிச் சடங்கு செய்தல்

III. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**குவித்து, திருத்தி, இயற்றி, எடுத்து –** வினையெச்சங்கள்.

**தந்தனன் –** இறந்தகால படர்க்கை ஆண்பால் வினைமுற்று

IV. **பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.**

**தெண்ணீர் –** தெண்மை +நீர்.

'ஈறு போதல்' என்னும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு, 'தெண்+நீர்' என நின்றது. 'ணளமுண் டணவும் ஆகும் தநக்கள்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று 'ண'கரத்திற்கு முன் வருமொழி முதல் 'ந'கரம் 'ண'கரமாய்த் திரிந்து, தெண்+ணீர் –தெண்ணீர் ஆனது.

**(அல்லது) தெண்ணீர் –** தெள் + நீர்

'லளமெலி மேவின் னணவும்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ள' கரம் 'ண' கரமாய்த் திரிந்து 'தெண்+நீர்' என ஆனது. பின் , 'ணளமுன் டணவும் ஆகும் தநக்கள்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ண' கரத்திற்கு முன் வருமொழி முதல் 'ந'கரம் 'ண'கரமாய்த் திரிந்து தெண்ணீர் என ஆனது.

## ஆரணிய காண்டம் – சவரி பிறப்பு நீங்கு படலம்

## 4. இராமன் சவரியைச் சந்தித்தல்

V. **இலக்கணக்குறிப்பு தருக.**

தன்னை**யே** நினைந்து – பிரிநிலை ஏகாரம்.

இல்லான் – எதிர்மறை ஆண்பால் படர்க்கை வினைமுற்று.

VI. **பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.**

**இவற்கு –** இவன் +கு

"ணனவல் லினம் வரட் டறவும்" என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று 'ன'கரத்திற்கு முன் வருமொழி முதலில் வல்லினம் 'கு' வந்ததால், 'ன' கர மெய் 'ற'கரமெய்யாகி, 'இவற்கு' என ஆனது.

## 5. சவரி இராமனுக்கு விருந்தளித்து உபசரித்தல்

VII. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**இழிஅருவி –** வினைத்தொகை

**அருவிக்கண்** (அருவி போன்ற கண்) – உவமைத்தொகை

**மாண்டது , வந்தது –** ஒருமை இறந்தகால வினைமுற்றுகள்

**ஏத்தி, அழுது –** வினையெச்சங்கள்

**மாதவம் –** உரிச்சொற்றொடர்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

### கிட்கிந்தா காண்டம்

வாலி, சுக்கிரீவன் ஆகியோருக்கு உரிய நாடு, கிட்கிந்தை. அந்நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இது கிட்கிந்தா காண்ட, எனப்பட்டது.

### நட்புக்கோட்படலம்

### 6. இராமனோடு சுக்கிரீவன் கொண்ட நட்பு

VIII. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**உடுபதி** (உடுக்களுக்குப்பதி) – நான்காம் வேற்றுமைத்தொகை

**கூடும் உடுபதி** – வினைத்தொகை

**இருள் பகை** (இருளாகிய பகை) – உருவகம்

**இரவி ஒத்தார்** (இரவியை ஒத்தார்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை

### 7. இராமன் சுக்கிரீவனை உயிர்த்துணைவனாய்க் கொள்ளுதல்

IX. **இலக்கணக் குறிப்பு எழுத்துக**

**கிளை** (கிளை போலத் தழிவி நிற்கும் உறவினம்) – உவமவாகுபெயர்

**எனது** – ஒன்றன்பால் குறிப்புமுற்று.

**கிளை, சுற்றம்** – சாதி ஒருமை

**உயிர்த்துணைவன்** – உவமைத்தொகை.

தீயி**ரே(ஏ)** – தேற்றம்

தீயரே எனி**னும்**(உம்) – இழிவு சிறப்பும்மை

செற்றவர் – வினையாலனையும் பெயர்

உன் கிளை (உனக்குக் கிளை) – நான்காம் வேற்றுமைத்தொகை

X. **பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.**

**இன்னுயிர் –** இனிமை + உயிர்

'ஈறு போதல்' என்னும் விதிப்படி 'மை' விகுதிகெட்டு 'இனி+உயிர்' என நின்றது. பின், "இனையவும் பண்பிற்கு இயல்பே" என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'இ' கரம் (னி-ன்+இ) கெட்டு 'இன்+உயிர்' என ஆனது. பின், 'தனிக்குறில் முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி, வருமொழி முதலில் (உ) உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்று 'ன' கரம் இரட்டித்து 'இன்ன்+உயிர்' என்றானது. பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும் (ன்), வருமொழி முதல் உயிரும் (உ) புணர்ந்து (ன்+உ-னு) 'இன்னுயிர்' என்றானது.

### யுத்தகாண்டம்

இராமன் தன் பகைவனான இராவணனைப் போரில் வென்று கொன்ற செய்தியைக் கூறும் காண்டமாகும்.

### வீடணன் அடைக்கலப்படலம்

### 3. இலங்கை அரசை இராமன் வீடணனுக்கு அளித்தல்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

XI. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

உல**கும்** பெய**ரும்** – எண்ணும்மை

**வாள் எயிற்று** – (வாள் போன்ற எயிற்று) –உவமைத்தொகை

**தாழ்கடல்** – வினைத்தொகை

**எயிற்று அரக்கர்** – (எயிற்**றைக் கொண்ட** அரக்கர்) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை.

XII. **பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.**

**எந்நாள்** – எ + நாள்

‘எ’ கர வினா முன் பிற வரின் அவையும் தோன்றுதல் நெறி’ என்னும் விதிப்படி, ‘எ’கரத்திற்கு முன் ‘ந’கரம் வந்ததால் அம்மெய்யே எ+ந்+நாள் – எந்நாள்’ என்றானது.

XIII. **உறுப்பிலக்கணம் தருக.**

**தந்தனன்** – தா(அ) +த்(ந்)+த்+அன்+அன்

**தா**- பகுதி; ‘த்’ எனக் குறுகியது; **த்** – சந்தி, ‘**ந்**’ ஆனாது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை; **அன்**- சாரியை; **அன்** – ஆண்பால் வினைமுற்று.

**9. வீடணனைத் தம் தம்பியாய் ஏற்று இராமன் கூறுதல்**

XIV. **இலக்கணக்குறிப்பு தருக.**

**ஆனோம்** – தன்மைப்பன்மை வினைமுற்று

**குன்று சூழ்வான்** (குன்**றைச்** சூழ்வான்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

**ஐய** – முன்னிலை ஒருமை விரி

**நுந்தை** – ‘நும் தந்தை’ என்பதன் மரூஉ.

XV. **உறுப்பிலக்கணம் எழுதுக.**

**பொலிந்தான்** – பொலி +த்(ந்) +த்+ஆன்.

**பொலி**- பகுதி; **த்** – சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்; **த்**- இறந்தகால இடைநிலை; **ஆன்** –ஆண்பால் ஒருமை வினைமுற்று.

XVI. **பிரித்து புணர்ச்சி விதி கூறுக.**

**அருங்கானம்** – அருமை + தானம்.

‘ஈறு போதல்’ என்னும் விதிப்படி ‘மை’ விகுதி கெட்டு ‘அரு +கானம்’ என்றானது. பின், ‘இனமிகல்’ என்னும் விதிப்படி, வருமொழி வல்லினத்திற்கு (க்) இனமான ‘ங’ கரம் மிகுந்து அரு+ங்+கானம் – அருங்கானம் என்றானது.

XVII. **பலவுள் தெரிவு**

I. “உவாஉற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்” – யார் யார்?

அ. சடாயு, இராமன் ஆ. இராமன், குகன்

www.Padasalai.Net

**இ. இராமன், சுக்கிரீவன்** ஈ. இராமன், சவரி

II. "நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்" – அந்த ஐவர் __________

**அ. இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன், குகன்**

ஆ. இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன், சுக்கிரீவன்

இ. இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன், வீடணன்

ஈ. இராமன் , இலக்குவன், பரதன், சத்துருக்கனன், அனுமன்.

III. தந்தனன் தாதை தன்னை – இதில் தாதை என்பது _________

அ. தாய் **ஆ. தந்தை**

இ. தந்தையைப் பெற்ற தந்தை ஈ. பூட்டன்

IV. ஓர் மூலம் இல்லான் – யார்?

**அ. இராமன்** ஆ. முருகன் இ. சிவன் ஈ. கண்ணன்

V. உவாஅற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார் – எவர்?

அ. இராமன், இலக்குவன் ஆ. இராமன், வீடணன்

இ. இராமன் - குகன் **ஈ. இராமன் – சுக்கிரீவன்**

## 4. உரிமைத்தாகம்

I. **பலவுள் தெரிவு**

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | |
|---|---|
| அ. உரிமைத்தாகம் | 1. பாரசீகக் கவிஞர் |
| ஆ. அஞ்ஞாடி | 2. பூமணி |
| இ. ஜலாலுத்தீன் ரூமி | 3. பத்தவச்சல பாரதி |
| ஈ. தமிழர் குடும்ப முறை | 4. சாகித்திய அகாதெமி |

அ. 2, 4,3, 1 ஆ. 3, 4, 1, 2 **இ. 2, 4, 1, 3** ஈ. 2, 3, 4, 1

## 5. பொருள் மயக்கம்

I. **பின்வரும் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ஏற்படும் பொருள் மாறுபாடுகள் யாவை?**

| **வினா** | **விடை** |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது? | - எந்த மொழி எல்லாருக்கும் எளிதானது? |
| எம்மொழியார்க்கும் எளிது? | - எம்மொழி பேசுபவர்க்கும் எளிதானது |
| அப் பாவின் நலங்காண்க | - அந்தப் பாடலின் நலத்தை அறிக |
| அப்பாவின் நலங்காண்க | - அப்பா நலமாய் இருக்கிறாரா என அறிக |
| ஐந்து மாடிவீடு | - மாடிவீடுகள் ஐந்து உள்ளன. |
| ஐந்துமாடி வீடு | - அவ்வீடு ஐந்து மாடிகளைக் கொண்டது |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அன்றுமுதல் பாடம் கற்றோம் - அந்த நாள்முதல் பாடம் கற்றோம்

அன்று முதல்பாடம் கற்றோம் -அன்றுதான் முதல் பாடத்தினைக் கற்றோம்.

**II. பின்வரும் தொடர்களில் வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாடுகள் யாவை?**

| **வினா** | **விடை** |
|---|---|
| 1. பிட்டுத் தின்றான் | - தின்பண்டத்தைக் கையால் பிட்டுத் தின்றான். |
| பிட்டு தின்றான் | - பிட்டு என்னும் தின்பண்டத்தைத் தின்றான் |
| 2. உள்ளக் கருத்து | - உள்ளத்தில் எழும் கருத்து |
| உள்ள கருத்து | - என்னிடமுள்ள கருத்து இதுதான் |
| 3. ஈட்டிக்கொண்டு வந்தான் | - பொருளாஈ உழைத்துப் பெற்று வந்தான் |
| ஈட்டு கொண்டு வந்தான் | - ஈட்டி என்னும் ஆயுதத்தைக் கொண்டுவந்தான். |

**III. காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறு பொருளைத் தந்துவிடும் – விளக்குக.**

**அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.**

இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும்போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது.

**அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.**

இத்தொடரில், அந்தப் பெண்ணின் அக்காள், தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள் வேறுபடுகிறது.

**IV. கீழ் உள்ள தொடர்கள் சரியானவையா பிழையானவையா? எப்படி?**

1. **கோவலன் மதுரைக்குச் சென்றது –** இத்தொடரில் ‘கோவலன்’ என்னும் சொல் எழுவாய் ஆகும். அஃது உயர்திணை ஆண்பால் ஆகும். எனவே, பனிலையும் ‘சென்றான்’ என உயர்திணை ஆண்பாலில் இருத்தல் வேண்டும். ஆனால், ‘சென்றது’ என அஃறிணை ஒருமையில் பயனிலை இருப்பதால் இத்தொடர் தவறானது.
2. **பறவைகள் நெல்மணிகளை வேகமாய்க் கொத்தித் தின்றது –** இத்தொடரில் ‘பறவைகள்’ என்னும் சொல் எழுவாய் ஆகும். அஃது, அஃறிணைப் பன்மைச்சொல். எனவே, பயனிலையும் ‘தின்றன’ என அஃறிணைப் பன்மையில் அமைந்திருக்க வேண்டும். ஆனால், ‘தின்றது’ என அஃறிணை ஒருமை வினைமுற்றில் பயனிலை இருப்பதால் இத்தொடர் தவறானது.
3. **குதிரையும் யானையும் வேகமாய் ஓடியது-** இத்தொடரில் ‘ஓடுதல்’ என்னும் தொழிலைச் செய்தவை குதிரையும் யானையும் ஆகும். அவை இரண்டும் சேர்ந்து எழுவாய் ஆனதால் அவை பன்மை எழுவாயாகும். எனவே, அதற்கேற்ப வினைமுற்றி ‘ஓடின’ என அஃறிணைப் பன்மையில் அமைந்திருத்தல் வேண்டும். ஆனால், ‘ஓடியது’ எனத் தொடரில் இருப்பதால் அது தவறானதாகும்.
4. **அவன் வெண்மதியிடம் பேசினாய்-** இத்தொடரில் ‘அவன்’ என்னும் பதிலி, உயர்திணை படர்க்கைப் பெயர்ச்சொல்லாகும். அஃது எழுவாய் ஆகும். ஆகவே, அதற்கேற்ப வினைமுற்று ‘பேசினான்’, எனப் படர்க்கை ஆண்பாலில் அமைதல் வேண்டும். ஆனால், ‘பேசினாய்’ என, முன்னிலை ஒருமையில் அமைந்திருப்பதால் இத்தொடர் பிழையானதாகும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

5. **சென்னையிலிருந்து நேற்று வருகிறாய்-** இந்தத் தொடரில் 'நேற்று' என்பது இறந்த காலத்தைக் குறிக்கிறது. எனவே, இத்தொடர், 'சென்னையிலிருந்து நேற்றுவந்தாய்' என அமைதல் வேண்டும். ஆனால் தொடரில் உள்ள வினைமுற்று 'வருகிறாய்'என அமைந்திருப்பதால் அது தவறான தொடராகும்.

**V. வினாக்களுக்கு விடையளி**

1. **'எனது மகன்' என எழுதலாமா, கூடாதா? கூடாது எனில் விளக்குக.**

'எனது மகன்' என எழுதுதல் கூடாது. 'எனது' என்னும் சொல்லில் உள்ள (என்+அது – எனது) 'அது' என்பது அஃறிணையைச் சுட்டப் பயன்படும் வேற்றுமை உருபாகும். 'மகன்' என்பது உயர்திணை. ஆதலால், அச்சொல்லைச் சுட்ட 'என்' மகன் அல்லது 'எனக்கு' மகன் எனக் கூறலாம்.

2. **'அவன் அருகாமையில் இருந்தான்' என எழுதலாமா? தவறெனில் எவ்வாறு எழுத வேண்டும்?**

'அவன் அருகாமையில் இருந்தான்' – இவ்வாறு எழுதுவது பிழையானது. 'அவன் அருகில் இருந்தான்' என்று எழுதுவதுதான் சரியானது ஆகும். (அருகுதல் – குறைதல், அருமையாதல்)

3. **முறையின்றிப் பிரித்தும் சேர்த்தும் எழுதுவதால் ஏற்படுகின்ற பொருள் மாறுபாட்டுக்கு எடுத்துக்காட்டு தருக.**

நம்பியார் கூடச் சென்றார்

நம்பி யார்கூடச் சென்றார்

நம்பியார்கூடச் சென்றார்

**இலக்கணத் தேர்ச்சி கொள்**

1. **பொருள்குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**

அ. தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ. தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

**இ. நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

ஈ. வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

2. **வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

| | |
|---|---|
| அ. பாலை பாடினாள் | 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான் |
| ஆ. பாலைப் பாடினான் | 2. தேரினைப் பார்த்தான் |
| இ. தேரை பார்த்தான் | 3. பாலினைப் பாடினான் |
| ஈ. தேரைப் பார்த்தான் | 4. பாலைத்திணை பாடினான் |

அ. 4, 1, 3, 2 ஆ. 2, 3, 1, 4 **இ. 4, 3, 1, 2** ஈ. 2, 4, 1, 3

3. **வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**

**மாணாஆற்அள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

அறிவியல் மாணவர்கள் வரிசையில் நின்று கண்காட்சியைக் கண்டனர்.

4. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

**முன்** அவன் முன்வந்து கூறினான்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

அவன்முன் வந்து கூறினான்

தானே அவன்தானே அச்செயலை செய்தான்

அவன் தானே அச்செயலைச் செய்தான்

கொண்டு எடுத்துக்கொண்டு போ

எடுத்துக் கொண்டுபோ

விட்டான் அவன் வந்துவிட்டான்

அவன் வந்து விட்டான்

5. **காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

**விடை:** பாணி எருது என்று கருதி, 'நம் நிலத்தை உழும்' என்றாள்.

பாணி, எருது என்று கருதி, நம் நிலத்தை உழும் என்றாள்.

6. **சலசல, வந்து வந்து, கலகல, விம்மிவிம்மி – இவற்றுள் இரட்டைக்கிளவித்தொடர்கள் எவை என எழுதி அவற்றைச் சொற்றொடரில் பயன்படுத்திக்காட்டுக.**

இவற்றுள் இரட்டைக் கிளவிகள் சலசல, கல ஆகியனவாகும்.

**சலசல –** ஆற்றில் நீர் 'சலசல' என ஒழியெழுப்பிக்கொண்டு சென்றது.

**கலகல –** பெண்கள் 'கலகல' என ஒலியெழுப்பச் சிரித்து மகிழ்ந்தனர்.

7. **திருவளர்ச்செல்வன், திருவளர்ச் செல்வன் – இவற்றுள் ஏற்புடைய தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – இவற்றுள் ஏற்புடைய தொடர் திருவளர்ச்செல்வன் என்பதேயாகும். வினைத்தொகையாய் அமைந்துள்ள இச்சொற்றொடர் திரு வளர்ந்த செல்வன், திரு வளர்கின்ற செல்வன், திரு வளரும் செல்வன் என முக்காலத்திற்கும் செல்வம் கொண்டுள்ளவன என்னும் சிறப்பான பொருளைத் தருகிறது.

8. **தமிழாக்கம் தருக.**

In terms of human development objective, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While generally analyse the importance of education largely as a means for better opportunities in lide-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

"மனிதவள மேம்பாட்டின் நோக்கங்கள்" எனும் முறையில் கல்வி என்பது தன்னளவில் நிறைவு பெற்ற ஒன்றாகக் காணப்படினும், அதனை முடிந்த பொருளாகப் பொருள் கொள்ள இயலாது. கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமையாகும். இதுவே மக்களின் பொருளாதார, சமூக அரசியல் வாயிலுக்குத் திறவு கோலாகவும் விளங்குகின்றது, கல்வி, வருவாய் பெருக்கத்தையும், வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகின்றது. பொருளாதார வல்லுநர்கள் கல்வியின் முக்கியத்துவம்பற்றி ஆய்வு செய்யும்போது, பெரும்பாலும் அது வாழ்வில் மிக நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகக் கூறுகின்றனர். பொருளாதார வளர்ச்சியைக் கணக்கில் கொள்ளாமல் பார்த்தால், மக்களைக் கல்வி பெறச் செய்வது பயனுள்ள இலக்காகும்.

www.Padasalai.Net

9. **இலக்கிய நயம் பாராட்டல்.**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையே நீக்க
உற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்தில்
வுலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனோடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

- நாமக்கல் கவிஞர்

**மையக் கருத்து**

இக்கவிதையில் பாரதியார், 'தமிழ்மொழி உலகமொழிகளுள் இனியமொழி; கம்பனும் வள்ளுவனும் சிறந்த தமிழ்க் கவிஞர்கள்' என்ற உண்மையை நமக்குத் தெரிவித்தவர் ஆதலினால், 'பாரதி ஓர் ஆசான்' என்கிறார், நாமக்கல் கவிஞர்.

**தொடை நயம்**

**எதுகை**

அடிதோறூ முதற்சீரின் முதலெழுத்துத் தம்முள் அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது அடி எதுகையாகும். இப்பாடலில் பெற்ற, உற்ற, கற்ற, தெற்ற என அடி எதுகை அமைந்து கவிதைக்கு இனிய ஓசை இன்பம் தருவதனை அறியலாம்.

**மோனை**

ஓரடியில் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றுவருவது சீர்மோனையாகும்.

முதலில் **பெ**ற்ற, **பி**ன்னால் **பி**றமொழி – **உ**ற்ற, **உ**லுங்க, **உ**லகத்தில் – **க**ற்று, **கா**ண்பாய் , **க**ம்பன் – **தெ**ற்ற, **தி**றந்து, **தெ**ய்வம் என முதலாம் மூன்றாம் ஐந்தாம் சீர்களின் முதலெழுத்துகள் ஒன்றிவந்து மோனை இன்பம் தருகின்றன.

**சந்தம்**

இப்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவால் இயன்றதால், அகவலோசை அமைந்து ஒழுகிய ஓசை இன்பம் தருகின்றது. இனிய இசை அமைத்துப் பாடுவதற்கு ஏற்ற சந்த நயம் பெற்று இக்கவிதை விளங்குகின்றது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**தலைப்பு:** 'பாரதி ஓர் ஆசான்'

**10. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

a) என் நம்பிக்கை முழுவதுமை புதிய தலைமுறைமீதுதான்; அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல் எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

b) எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு, ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றித் துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

c) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.

d) மாணவர்கள் பெற்றோர்களைத் தம் நண்பர்களாய்ப் பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தம் இன்பதுன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

e) ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்துகொண்டு அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

**11. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாய் ஆக்குக.**

எ.கா: குமரன் வீடு பார்த்தேன். – குமரனை வீட்டில் பார்த்தேன்

a) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

b) போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

c) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

d) அனைவரும் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.

e) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

**விடை:**

a) மாறனைப் பேச்சுத்திறனில் யார் வெல்ல முடியும்.

b) போட்டியில் வெற்றி பெற்ற கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.

c) காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.

d) அனைவரையும் அன்போடு அழைத்தவனுக்குத் துன்பம் தர யாருக்கு மனம் வரும்?

e) சான்றோருக்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.

## 6. திருக்குறள்

**பெயர்க்காரணம்** : திரு + குறள் –மேன்மையான குறள் வெண்பாக்களினால் ஆகிய நூலாதலின் இப்பெயர் பெற்றது. குறள் – இரண்டடி வெண்பா. திரு – அடைமொழி. திருக்குறள் என்பது பாட்டை உணர்த்தாது நூலை உணர்த்துவதால் அடையடுத்த கருவியாகுபெயர்.

**நூலின் பிரிவு:** இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும்பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும் கொண்டது; அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாய் 1330 பாடல்களைக் கொண்டது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**ஆசிரியர் வரலாறு**

**பெயர்:** திருவள்ளுவர்

**பெற்றோர்:** ஆதி, பகவன்.

**ஊர்:** மயிலாப்பூர் (மதுரை என்று கூறுவாரும் உளர்)

**காலம்:** கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு.

இவர் கி.மு. 31இல் தோன்றியவரென்று அறிஞர் சிலர் கூறுவர். இதைக் கணக்கில் கொண்டு திருவள்ளுவராண்டு முறை வழங்கி வருகிறது.

**வள்ளுவர் வரலாறு:** இவர் ஆதி என்ற தாய்க்கும் பகவன் என்ற தந்தைக்கும் மைந்தராய்ப் பிறந்தார்; வள்ளுவன் ஒருவனால் வளர்க்கப்பட்டமையால் வள்ளுவர் என்று பெயர் பெற்றனர் என்பர். சிலர் அதனை இயற்பெயர் என்பர். சிலர், தமிழ் வளப்பமுடைமையால் வந்த பெயர் என்பர். வள்ளுவர் என்பார் அரசருக்கு அந்தரங்கமாய் ஆலோசனை கூறும் ஓர் அரசியல் அதிகாரி. இவர் அத்தகைய பொறுப்பான பதவியை வகித்துச் சிறப்புப் பெற்றமையால், இவர் இயற்பெயர் மறைந்து வள்ளுவர் என்ற பெயராலேயே வழங்கப்பட்டார் என்று கூறுவர், ஆராய்ச்சியாளர். இவர் மார்க்கசகாயர் என்ற வேளாளரின் மகள் வாசுகியை மணந்து, நெசவுத்தொழில் செய்து வாழ்ந்தனர் என்பர். இவருக்கு மாணவர் பலர் இருந்தனர் என்றும் கூறுவர். இவர் உலகம் புகழும் திருக்குறளை இயற்றி, மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றினார்.

**இவருக்கு வழங்கும் வேறு பெயர்கள்:** நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர் என்பனவாகும்.

இந்நூலுக்குப் பத்துப் பெரும்புலவர்கள் உரை எழுதியுள்ளனர். அவற்றுள் சிறந்தது பரிமேலழகர் உரையாகும்.

ஏனைய உரையாசிரியர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்பவராவர்.

**1. இல்வாழ்க்கை**

மனைவியுடன் சேர்ந்து நடத்தும் இல்லற வாழ்க்கையின் சிறப்பு.

**1. அன்பும் அறனுமே இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆம்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

அற**ன்** – 'அற**ம்**' என்பதன் ஈற்றுப்போலி.

உடைத்து – குறிப்பு வினைமுற்று


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

அன்**பும்** அற**னும்** – ‘உம்’மை எண்ணும்மை

இல் – இடவாகுபெயர்

இல்வாழ்க்கை (இல்லத்தில் வாழ்கின்ற வாழ்க்கை) – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

இச்செய்யுளில், மனைவிமேல் கொள்கின்ற அன்பு, பண்பாகும்; பகுத்துண்பது பயனாகும். இவ்வாறு முறையே சென்று பொருந்துதலால் இது **முறை நிரல் நிறை அணி**யாகும்.

**2. துறவியினும் மேம்பட்டவன்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**வாழ்பவன் –** குறிப்பு வினையாலணையும் பெயர்

**உறுப்பிலக்கணம் எழுதுக.**

**முயல்வார் –** முயல் +வ்+ஆர்

முயல் – பகுதி; வ்- எதிர்கால இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று.

**3. தெய்வத்திற்கு ஒப்பாவான்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**வானுறையும்** (வானின்**கண்** உறையும்) – ஏழாம் வேற்றுமைத்தொகை

**2. செய்ந்நன்றியறிதல்**

ஒருவன் தனக்குப் பிறர் செய்த நன்மையினை மறாவாமை. நன்றி – நன்மை, உதவி

**1. செய்யாமல் செய்த உதவி**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

வையக**மும்** வானக**மும் –** எண்ணும்மை

**செய்யாமல் –** எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சம்

www.Padasalai.Net

**உதவி** – தொழிற்பெயர்

**வையகம்** – பூமிக்குக் காரணப்பெயர்

**அரிது** – ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று

**செய்த** – இறந்த காலப் பெயரெச்சம்

**2. காலத்தில் செய்த உதவியின் சிறப்பு**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

காலத்**தினால்** – இதில் 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு தனக்குரிய பொருளில் வாராமல் 'காலத்தில்' என்று ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்தமையால் **உருபு மயக்கம்.** இது **வேற்றுமை மயக்கம்** எனவும் வழங்கப்படும்.

ஞாலத்**தின்** – 'இன்' உருபு எல்லைப்பொருளை உணர்த்தும்

எனி**னும்**- 'உம்'மை இழிவு சிறப்பும்மை

**மாண** - 'செய'வென் எச்சம்.

**பெரிது** – ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று.

**3. பயன் கருதாமல் செய்த உதவியின் சிறப்பு**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**தூக்கார்** – எதிர்மறை முற்றெச்சம்

**தூக்கின்** – எதிர்கால வினையெச்சம்

**உதவிநயன்** (உதவியாகிய நயன்) – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**4. தினையளவு நன்றியையும் பனை அளவாய்க் கொள்க**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**செயின்** – வினையெச்சம்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

பயன் **தெரிவார் –** பலர்பால் வினையாலணையும் பெயர்

**சால்பு –** பண்புப்பெயர்

பனைத்துணையாகக் **கொள்வர் –** பலர்பால் வினைமுற்று

**தினைத்துணை, பனைத்துணை –** ஆறாம் வேற்றுமைத்தொகைகள்

பனைத்துணை**யா** (ஆ) – 'ஆக' என்பதன் தொகுத்தல் விகாரம்

**5. நன்றி மறத்தல் நன்றன்று**

**நன்று** அன்று, **நன்று** அல்லது – இரு 'நன்று'ம் நன்மையுடையதாகிய அறத்தைக் குறித்தலால் குறிப்பு வினையாலணையும் பெயர்கள்.

**நன்றி மறப்பது –** இரண்டாம் வேற்றுமைத்தொகை

மறப்பது **நன்று –** குறிப்பு வினைமுற்று

அன்**றே –** ஏகாரம் விரைவுப்பொருளில் வந்தது; தேற்றேகாரம் எனவும் கொள்ளலாம்.

நன்று **அல்லது** (அல்லாததை)- எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்

**மறப்பது** (மறத்தல்) – எதிர்காலத் தொழிற்பெயர்

**6. நன்றி மறந்தார்க்கு உய்வில்லை**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**கொன்றார்-** வினையாலணையும் பெயர்

**உண்டு, இல்லை –** இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுகள்.

**உய்வு –** தொழிலாகுபெயர்

**கொன்ற** மகற்கு – பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**செய்த –** செய் + த் +அ.

செய் – பகுதி; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

**கொள்வர் –** கொள் +வ் +அர்.

கொள் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; அர் –பலர்பால் வினைமுற்று விகுதி.

**3. வெஃகாமை**

அஃதாவது, பிறருக்கு உரிய பொருளினைக் கைப்பற்றா விரும்பாதிருத்தல்.

**1. பழி உண்டாக்கும் செயல்களைச் செய்யார்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**படுபயன் –** வினைத்தொகை

**வெஃகி-** வினையெச்சம்

**செய்யார் –** எதிர்மறை பலர்பால் வினைமுற்று

**2. புலன்களை வென்றவர் பிறர் பொருள் விரும்பார்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**செய்யார்** – எதிர்மறை படர்க்கை பலர்பால் வினைமுற்று

**புலம்வென்ற** (புலத்**தை** வென்ற) – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.**

**செய்யார்** – செய் +ஆ+ஆர்.

**செய் –** பகுதி; **ஆ –** எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; **ஆர் –** படர்க்கை பலர்பால் வினைமுற்று.

**3. பிறன் பொருளை விரும்பாமையே தன் பொருளுக்குக் காப்பு**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**அஃகாமை –** ஆகுபெயர்

**கைப்பொருள்** (கையின்**கண் உள்ள** பொருள்) – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

**வெஃகாமை –** எதிர்மறாஈத் தொழிற்பெயர்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**4. புலான் மறுத்தல்**

அஃதாவது, ஊன் உண்டலை ஒழித்தல்.

**1. ஊன் விற்பார் எவரும் இலர்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**உலகு** – இடவாகுபெயர்

**ஊன் தருவார் (ஊனைத்** தருவார்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**கொல்லாது** – கொல் +ல்+ஆ+து

**கொல்** – பகுதி; ல் – சந்தி; ஆ- எதிர்மறை இடைநிலை; து – ஒன்றன்பால் வினைமுற்று.

**தருவார்** – தா(தரு) +வ்+ஆர்

**தா-** பகுதி, 'தரு' எனத் திரிந்து; வ்- எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று.

**5. வெகுளாமை**

அஃதாவது, கோபம் கொள்வதற்குக் காரணமுள்ள இடத்தும், கோபம் கொள்ளாமல் அஃதை அடக்கி ஆள்தலாம்.

**1. செல்லிடத்துக் காப்பவனே சினம் காப்பவன்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**செல் இடம்** – வினைத்தொகை

**காப்பான்** – வினையாலணையும் பெயர்

**சினம் காப்பான்** (சினத்**தை**க் காப்பவன்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**காக்கின்** – உடன்பாட்டு வினையெச்சம்

**காவாக்கால்** – எதிர்மறை வினையெச்சம்

**2. தீமை பயத்தலால் சினத்தைக் கைவிடுதல் நன்று**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

யார்மாட்**டும்** (உம்) – முற்றும்மை

**மறத்தல்** – வியங்கோள் வினைமுற்று

**தீய** – குறிப்பு வினையாலணையும் பெயர்

**3. கோபத்தைக்காட்டிலும் கொடிய பகை இல்லை**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

நகை**யும்** உவகை**யும்** – எண்ணும்மை

பகை**யும்** – இழிவு சிறப்பும்மை.

உள**வோ(ஓ)** – ஓகாரம் எதிர்மறை


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**4. தன்னைத்தான் காக்கின் சினம் காக்க**

**காக்கின் –** வினையெச்சம்

**காக்க –** வியங்கோள் வினைமுற்று

**சினம் காக்க** (சினத்தைக் காக்க) – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**காவாக்கால் –** எதிர்மறை வினையெச்சம்

**5. சினம் என்னும் நெருப்பு இனத்தையும் அழிக்கும்**

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**சேர்ந்தாரை –** வினையாலணையும் பெயர்.

**சுடும் –** செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

**பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**சினமென்னும் –** சினம் + என்னும்

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யும்(ம்) வருமொழிமுதல் உயிரும் (எ) புணர்ந்து (மெ) 'சினமென்னும்' என ஆனது.

**கொல்லுஞ்சினம் –** கொல்லும் + சினம்

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக் கினமாத் திரிபவும்' என்னும் விதிப்படி, வருமொழி முதலில் வல்லினம் (ச்+இ) வந்தால், நிலைமொழி ஈற்றிலுள்ள 'ம'கரமெய் 'ஞ'கர மெய்யாய்த் திரிந்து 'கொல்லுஞ்சினம்' என்றானது.

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**காக்க –** கா +க்+க

**கா-** பகுதி; க் – சந்தி; க – வியங்கோள் வினைமுற்று.

1. **கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**
   **சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
   **ஏமப் புணையைச் சுடும்.**

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

- இச்செய்யுளில் **ஏகதேச உருவக அணி** அமைந்துள்ளது.

**அணி விளக்கம்:** தொடர்புடைய இருபொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**விளக்கம்:** இச்செய்யுளில் இனத்தை ஏமப்புணையாக உருவகம் செய்தமைக்கு ஏற்ப அதற்குத் தொடர்புடைய பிறவியைக் கடலாக உருவகம் செய்யாமையால் இஃது ஏகதேச உருவக அணியாகும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## 6. ஊழ்

நல்வினை, தீவினை ஆகியன, செய்தவனையே சென்று அடைவற்கு ஏதுவாகிய நியதி.

### 1. ஊழறிவே முன் நிற்கும்

**இலக்கணக்குறிப்பு தருக.**

கற்பி**னும்** – இழிவு சிறப்பு உம்மை

### 2. உலகத்து இயற்கை இருவேறு

I. **பலவுள் தெரிவு**

1. **கடலின் பெரியது எது?**

 அ. உற்ற காலத்தில் செய்த உதவி

 **ஆ. பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

 இ. தினையளவு செய்த உதவி

2. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

 நல்லார் நயவர் இருப்ப நயம்இலாக்
 கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை
 வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
 நினைப்ப வருவதொன் றில்.

 அ. இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
 தெள்ளியர் ஆதலும் வேறு.

 ஆ. நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
 நல்லவாம் செல்வம் செயற்கு.

 **இ. ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று
 சூழினும் தான்முந்து உறும்.**

3. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

 உயர் அலுவலரின் வருகை
 அலுவலகமே அல்லாடும்
 அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
 கோப்புகளை விரைந்து முடிக்க
 ஒழுங்கு செய்ய
 நேரத்தில் இருக்க வேண்டும்
 விரைகிறது மனம்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

பரபரப்பும் மனவழுத்தமுமாய்

வண்டியை எடுக்கிறேன்

காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை

'போ அந்தப் பக்கம்'

உதறிச் செல்கிறேன் குழந்தையை.

**விடை:**

செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்

காக்கில்என் காவாக்கால் என்?

4. **இலக்கணக்குறிப்பு தருக.**

**அன்பும், அறமும், நன்கலம், மறத்தல், உலகு**

**விடை:**

அன்பும் அறமும் - உம்மைத்தொகை

நன்கலம் - பண்புத்தொகை

மறத்தல் - தொழிற்பெயர்

கொல்லாது **உலகு** - இடவாகுபெயர்

5. **பொருள் கூறுக.**

**வெகுளி, புணை, ஏமம், திரு.**

**விடை:**

வெகுளி – கோபம்

புணை – தெப்பம்

ஏமம் - பாதுகாப்பு

திரு - செல்வம்

6. **வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?**

**அ. செய்யாமல் செய்த உதவி** ஆ. பயன் தூக்கார் செய்த உதவி

இ. தினைத்துணை நன்றி ஈ. செய்ந்நன்றி

7. **பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக.**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட வேறு பகைகள் உள்ளனவோ? இல்லை.

8. **செல்லிடத்து- புணர்ச்சி விதி கூறுக.**

**செல்லிடத்து-** செல் + இடத்து. 'தனிக்குறில் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி, வருமொழி முதலில் உயிர் (இ) வந்ததால், நிலைமொழி ஈற்று ஒற்று இரட்டித்து 'செல்ல் +இடத்து' என ஆனது. பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, நிலைமொழி மெய்யும்(ல்) வருமொழி உயிரும் (இ) புணர்ந்து (ல்+இ – லி) செல்லிடத்து என்றானது.

9. **பொருத்துக.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - சேர்ந்தாரைக் கொல்லி

ஆ. பயன்தூக்கார் செய்த உதவி - நடுவன்மை நாணுபவர்

இ. சினம் - ஞாலத்தின் மாணப் பெரிது

ஈ. பழிப்படுவ செய்யார் - தெய்வத்துள் வைக்கப்படும்

உ. காலத்தினாற் செய்த நன்றி - நன்மை கடலின் பெரிது.

**விடை:**

அ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - தெய்வத்துள் வைக்கப்படும்

ஆ. பயன்தூக்கார் செய்த உதவி - நன்மை கடலின் பெரிது

இ. சினம் - சேர்ந்தாரைக் கொல்லி

ஈ. பழிப்படுவ செய்யார் - நடுவன்மை நாணுபவர்

உ. காலத்தினாற் செய்த நன்றி - ஞாலத்தின் மாணப் பெரிது

## இயல் – 4

## கல்வி

### 1. பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

**I. பலவுள் தெரிவு**

1. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ. வசம்பு ஆ. மணத்தக்காளியிலைச் சாறு

**இ. கடுக்காய்** ஈ. மாவிலைக்கரி

2. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ. இலக்கியம் **ஆ. கணிதம்**

இ. புவியியல் ஈ. வேளாண்மை

3. அக்காலத்தில் 'கணக்காயர்' என வழங்கப்பட்டவர் ________

அ. கணக்கு எழுதுபவர் ஆ. கவிதை எழுதுபவர்

**இ. பாடம் கற்றுத் தரும் ஆசிரியர்** ஈ. மாணவர்

4. _______என்பது நூலின் பெயர்.

**அ. கணக்கு** ஆ. மனனம் இ. மன்றம் ஈ, அம்பலம்

5. பள்ளி என்னும் சொல் _________ மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர்.

அ. சைவ ஆ. வைணவ இ. பௌத்த **ஈ. சமண**

6. மாணவன் நூலைப் படிக்கத் தொடங்கும் எழுத்துப்பயிற்சியினை அக்காலத்தில் _______ விழா என்றனர்.

அ. ஒப்பித்தல் ஆ. சொல்லாடல்

இ. கற்பித்தல் **ஈ. மையாடல்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. புள்ளி, கால், கொம்பு _________ முதலியன வரியெழுத்தின் உறுப்புகள்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**விடை:** விலங்கு

2. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்கள் ___________வரிசையில் அமைந்த நூல்கள்.

**விடை:** அகர

3. கீழ்வாய் இலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் _______ செய்ய வேண்டும்.

**விடை:** மனனம்

4. இரட்டைத்துளையுள்ள பனை ஏடுகளில், ஒரு துளையினில் செப்புக்கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். இதற்கு _________ என்று பெயர்.

**விடை:** நாராசம்

5. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் பயன்பட்ட கருவிக்கு _______ என்று பெயர்.

**விடை:** தூக்கு

6. _________புரியும் பழக்கம் பள்ளிகளிலிருந்தே வளர்ச்சியுற்றது.

**விடை:** வாதம்

7. வள்ளுவர், 'என் ஒருவன் __________ கல்லாதவாறு?' என்கிறார்.

**விடை:** சாந்துணையும்

8. ஓதற்பிரிவுக்கு உரிய காலம் ___________ ஆண்டு.

**விடை:** மூன்று

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. குருகுலம் | அ. அம்பலம் |
| 2. கணக்காயர் | ஆ. நூல் |
| 3. கணக்கு | இ. ஆசிரியர் இல்லம் |
| 4. மன்றம் | ஈ. ஆசிரியர் |

**விடை: 1 –இ; 2-ஈ; 3-ஆ; 4-அ**

| | |
|---|---|
| 1. அக்ஷராப்பியாசம் | அ. பெருக்கல் வாய்ப்பாடு |
| 2. கீழ்வாயிலக்கம் | ஆ. கல்விப்பயிற்சி |
| 3. குழிமாற்று | இ. பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| 4. வித்தியாப்பியாசம் | ஈ. எழுத்துப்பயிற்சி |

**விடை: 1-ஈ; 2-இ; 3-அ; 4- ஆ**

## 2. இதில் வெற்றி பெற

இப்பாடல் **'துறைமுகம்'** என்னும் கவிதைத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இக்கவிதையினை எழுதியவர், சுரதா.

**ஆசிரியரைப்பற்றி**

**இயற்பெயர் –** இராசகோபாலன்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**புனைபெயர் –** சுரதா

**பிறந்த ஊர் –** பழையனூர், தஞ்சை மாவட்டம்

**ஆண்டு – 1921**

இவர் இலக்கணப் பெரும்புலவர் சீர்காழி அருணாசல தேசிகர், மெய்யக்கோனார் ஆகியோரிடம் முறையாகத் தமிழ் பயின்று புலமை பெற்றார். 1941இல் புரட்சிக்கவி பாரதிதாசனிடம் நெருங்கிய தொடர்பு கொண்டார். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம் ஆகும். அதனால் தம் பெயரைச் **சுப்புரத்தினதாசன்** அன்று மாற்றிக்கொண்டார். அப்பெயரே சுருக்கமாய்ச் **'சுரதா'** என வழங்கப்படுகிறது. இவர் உவமைகளைக் கையாளுவதில் திறம் பெற்றவர். அதனால் உவமைக்கவிஞர் எனப் பாராட்டப்பெற்றார். தேன்மழை, சாவின் முத்தம், துறைமுகம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

இவரது தேன்மழை என்னும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசு வழங்கியுள்ளது. இவர், தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள பாவேந்தர் பாரதிதாசனாரின் நினைவுப்பரிசையும் பதக்கத்தினையும் பெற்ற பெருமைக்குரியவர்.

## I. பலவுள் தெரிவு

1. "விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
   வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" – இத்தொடர் தரும் முழுமையான பொருள் _________
   அ. விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
   ஆ. விண்வெளீஉம் செங்கதிரும் வேறு வேறு
   இ. வெண்மதியும் முகிலும் வேறு வேறு
   **ஈ. விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர்,முகில் அனைத்தும் வேறு வேறு.**
2. சுரதா நடத்திய கவிதை இதழ் _______
   அ. இலக்கியம் **ஆ. காவியம்** இ. ஊர்வலம் ஈ. விண்மீன்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கண்வேறு; _________ கண் வேறு.
   **விடை:** கல்வி
2. புண்வேறு; வீரர்களின் __________ வேறு.
   **விடை:** விழுப்புண்
3. இரண்டு சீரின் இடைவெளியில் ________ வரும்.
   **விடை:** தளைகள்
4. அடியின் கீழே அடியிருந்தால் ________ வரும்.
   **விடை:** தொடைகள்
5. புலவர்களின் பாடல்களில் __________ தங்கும்.
   **விடை:** கீர்த்தி


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

## 3. இடையீடு

**ஆசிரியரைப்பற்றி**

இக்கவிதையை இயற்றியவர் சி. மணி என்னும் சி. பழனிச்சாமி ஆவார். 1959ஆம் ஆண்டுமுதல் 'எழுத்து' என்னும் இதழில் இவர் கவிதைகள் வரத்தொடங்கின; 'நடை' என்னும் சிற்றிதழையும் நடத்தியவர். யாப்பும் கவிதையும் வரும்போகும், ஒளிச்சேர்க்கை ஆகியன இவர் எழுதிய கவிதைத் தொகுப்புகள் ஆகும். இவர் புதுக்கவிதையில் அங்கதத்தை அதிகமாய் பயன்படுத்தியவர். பல விருதுகளைப் பெற்ற இவர் மாலி, செல்வம் என்னும் புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

## 4. புறநானூறு

**பெயர்க்காரணம்:** புறம் + நானூறு – புறநானூறு. புறப்பொருள் தொடர்பான நானூறு பாடல்களைக் கொண்ட நூலாதலின், இந்நூல் இப்பெயர் பெற்றது. புறத்தைப்பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என விரியும். பொருளாலும் அளவாலும் இந்நூல் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறப்பாட்டு எனவும், புறம் எனவும் இந்நூல் வழங்கப்பெறும்.

**அகம், புறம்:** அகமாவது, இன்பத்தைப்பற்றிக் கூறுவதாம். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம் உள்ளத்தால் அனுபவிக்கும் இன்பம், அகம் எனப்படும். அஃது எத்தகையதென்று புறத்தார்க்குச் சொல்ல இயலாததாம். அகத்தால் நுகரப்படுதலின் அகம் எனப்பட்டது. (அகம்-உள்).

புறமாவது, அறத்தையும் பொருளையும்பற்றிக் கூறுவது. அஃது ஒத்த அன்புடையாரே அன்றி, அனைவராலும் அனுபவிக்கப்பட்டு, இத்தகையதென்று புறத்தார்க்கும் எடுத்து உணர்த்தக்கூடியதாய் நிகழும் ஒழுக்கமாதலின் புறம் எனப்பட்டது. (புறம் – வெளி). இத்தகைய புறப்பொருள் தொடர்பான பாடல்கள் இந்நூலில் உள்ளன.

**நூலின் இயல்புகள்:** இந்நூலில் உள்ள பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்களால் பல்வேறு சமயங்களில் பாடப்பட்டனவாகும். அரசன்முதல் பல்வகைத் தொழில் புரிவாரும் புலமை மிக்கவராய்ப் பாடல்கள் இயற்றியுள்ளனர். தொல்காப்பியம் என்னும் மிகப்பழைய தமிழிலக்கணத்திற்கு முற்பட்ட பாட்டுகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. புலவர்கள் தனித்தனியே பாடிய பாடல்களை எல்லாம் அரிதின் முயன்று தேடித் தொகுக்கப்பட்ட தொகைநூல் இது. இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை.

**நூலின் பெருமை:** இந்நூல் தமிழருடைய சிறந்த கருவூலம் என்று கூறத்தக்க பெருமையுடையதாகும். பண்டைக்காலத் தமிழ் மக்களுடைய உயர்ந்த நாகரிகம், அரசியல், போர்த்திறம், சமுதாயப்பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்வதற்குப் பேருதவி புரிவது இந்நூலேயாகும். பண்டைக்காலப் பேரரசர், சிற்றரசர், படைத்தலைவர், வீரர்கள், வள்ளல்கள் ஆகியவர்களின் வரலாறுகளை ஒரளவு அறிய இந்நூலே கருவியாய் உள்ளது. ஆதலால், இந்நூல் வரலாற்றாராய்ச்சிக்குப் பெருந்துணை புரிவதாகும். புலவர்கள் பலரால் இந்நூற்பாடல்கள் மேற்கோள்களாய் எடுத்தாளப்பட்டுள்ளன. ஜி.யூ.போப் என்னும் மேல்நாட்டறிஞர் இந்நூலின் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

www.Padasalai.Net

**இன்ன வகை என்பது:** இந்நூல் சங்க இலக்கியங்களாகிய **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை** என்னும் மேற்கணக்கு நூல்களுள் எட்டுத் தொகையைச் சார்ந்ததாகும். ஏனையவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல்ம் கலித்தொகை, அகநானூறு என்பனவாம்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறமென்(று)
இத்திறந்த எட்டுத் தொகை"

என்னும் பழைய வெண்பா, எட்டுத்தொகை நூல்கள் இவையென உணர்த்தும்.

**திணை, துறை விளக்கம்:** இந்நூல் தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணத்திற்கு இலக்கியமாய் ஒவ்வொரு பாடலும் புறப்பொருள் திணை, துறைகளைக் கொண்டு விளங்குகிறது.

தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழு புறத்திணைகளையே சுட்டுகிறார்.

புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார், புறத்திணைகள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்துணை எனப் பன்னிரண்டென்பார்.

திணை என்பது மக்கள் ஒழுக்கம்.

துறை என்பது மக்களும் விலங்கும் சென்று நீர் உண்ணும் துறை போலப் பல வகைப்பட்ட பொருள்களும் ஒருவகைப்பட்டுச் செல்வதற்குரிய வழியாகும். மக்கள் வாழ்க்கைக்குரிய நெறி என்று சுருக்கமாய்க் கூறலாம். திணை, ஆறு போன்றது. துறை, ஆற்றில் மக்கள் இறங்கும் துறை போன்றது. திணையின் உட்பிரிவு, துறை எனலாம்.

1. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**வயங்குமொழி –** வினைத்தொகை

**அடையா** வாயில் (அடையா**த** வாயில்) – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**முடிக்கும் –** 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று

**கடுமான் –** குதிரை, சிங்கம் முதலியவற்றுக்குப் பொதுப்பெயர்

**தன் அறியலன்** (தன்**னை** அறியலன்), **என் அறியலன்** (என்**னை** அறியலன்), **மரங்கொல்** (மரத்**தை**க்கொல்), **மழுஉடை** (மழுவி**னை**உடை) – இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்.

அறியலன் **கொல் –** ஐயப்பொருள் தரும் இடைச்சொல்

அறி**வும்** புக**ழும் –** எண்ணும்மை

**கைவல் சிறார்** (கைவல்ல**மை வாய்ந்த** சிறார்) –இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**அத்திசை** சோறே (அத்திசைக்**கண்** சோறே) – ஏழாம் வேற்றுமைத்தொகை

**கொல்தச்சன் –** படர்க்கை ஒருமை எதிர்மறை வினைமுற்று

**சிறாஅர் –** இசைநிறை அளபெடை.

2. **பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**எத்திசை –** எ +திசை

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்" என்னும் விதிப்படி நிலைமொழி உயிர் (எ) உன் வரும் மொழி முதல் வல்லினம் (த்+இ – தி) மிகுந்து எ +த் +திசை – எத்திசை என்றானது.

**மரங்கொல் –** மரம் + கொல்

"மவ்வீறு ஒற்றழிந்து வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்" என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ம'கரமெய், வருமொழி முதல் வல்லினத்திற்கு (க்+ஒ – கொ) இனமான மெல்லினமாய்த் திரிந்து (மர+ங்+கொல்) –மரங்கொல் எனப் புணர்ந்தது.

**காட்டகம் –** காடு + அகம்

"நெடிலோடு டறஒற்று இரட்டும்" என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ட' கர(ட்+உ-டு) ஒற்று இரட்டித்துக் 'காட்டு+அகம்' என்றானது. பின் 'உயிர்வரின் உக்குறால் மெய்விட் டோடும்' என்னும் விதிப்படி, வருமொழி முதலில் உயிர் (அ) வந்ததால் நிலைமொழி ஈற்று உகரம் (ட்+உ –டு) 'நீங்கி, காட்ட +அகம்' என்றானது. பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி நிலைமொழி மெய்யும் (ட்) வருமொழி முதல் உயிரும் (அ) புணர்ந்து (ட்+அ-ட) காட்டகம் என்றனது.

3. **பலவுள் தெரிவு**

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" – இத்தொடரில் 'கலன்' என்னு சொல் உணர்த்தும் பொருள்

   அ. போர்க்கருவி ஆ. தச்சுக்கருவி

   **இ. இசைக்கருவி** ஈ. வேளாண்கருவி

2. வயங்குமொழி வித்தி – இதில் வித்தி என்னும் சொல்லின் பொருள் _________

   **அ. விதைத்து** ஆ. உழுது இ. அறுத்து ஈ. காய்த்து

3. சுருக்கினெம் கலப்பை- இதில் கலப்பை என்பதன் பொருள்_____

   அ. உழுகருவி ஆ. கலம் நெல் உள்ள பை

   **இ. கருவிகள் வைக்கப்படும் பை** ஈ. பல பொருள் கலந்துள்ள பை

4. கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி – இதில் விரைந்து ஓடும் குதிரையைக் குறிக்கும் சொல் _________

   **அ. கடுமான்** ஆ. தோன்றல்

   இ. நெடுமான் ஈ. அஞ்சி

## 5. பாதுகாப்பாய் ஒரு பயணம்

## 6. பா இயற்றப் பழகலாம்

1. **வெண்பா யாப்பு சங்கம் மருவிய காலத்தில் செல்வாக்குப் பெற்றது ஏன்?**

   அறங்கள் மனிதர் மனத்தில் நின்று நிலைக்க வேண்டியவை. அவற்றை வெண்பாவில் தந்தால மறந்துவிடாமல் நினைவில் வைக்க ஏதுவாய் இருக்கும். அதனால் அறம் வலியுறுத்தப்பட்ட சங்கம் மருவிய காலத்தில் வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்றது.

2. **வெண்பா எவ்வோசை உடையது? விளக்குக.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

சொல்லுதலை (செப்பல்) அடிப்படையாய்க்கொண்டு தோன்றியது வெண்பாவாகும். ஆகவே, இது செப்பலோசை உடையதாகும்.

3. **வெண்பாவை 'வன்பா' என்பதேன்?**

வெண்பா எழுதுவதற்கெனப் பொதுவான சில இலக்கணங்கள் உண்டு. செய்யுள் எழுத அடிப்படையாய் விளங்கும் அவ்விலக்கணங்களை அறிந்துகொள்ள வேண்டும். ஏனைய பாக்களைவிட வரையறுத்த இலக்கணக் கட்டுக்கோப்பு கொண்டது, வெண்பா. அதனாலேயே வெண்பாவை 'வன்பா' என்பார்கள்.

4. **வெண்பாவில் சீர்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**

முதற்சீர் மாச்சீர் என்றால் வரும் சீரின் முதல் அசை நிரையசையாய் இருக்க வேண்டும். முதற்சீர் விளச்சீர் அல்லது காய்ச்சீர் என்றால் வரும் சீரின் முதல் அசை நேரசையாய் இருக்கவேண்டும். வரும் சீரின் முதல் அசையை மட்டுமே கவனத்தில் கொள்ளவேண்டும்.

5. **வெண்பாவிற்கான எளிய தளை இலக்கணம் யாது?**

மா முன் நிரை, விளம் முன் நேர், காய் முன் நேர் என்பதே வெண்பாவிற்கான எளிய தளை இலக்கணம்.

6. **நேரிசை வெண்பாவிற்கும் இன்னிசை வெண்பாவிற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?**

நேரிசை வெண்பாவில் இரண்டாமடியில் தனிச்சீர் வரும். தனிச்சீரில்லாமல் நான்கு சீரோடு அமைக்கப்படுபவை இன்னிசை வெண்பா ஆகும்.

7. **யாப்புக்குரிய எழுத்துகள் எவையெனக் கணக்கிடப்படுகின்றன?**

செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துகள் முதன்மையாய்க் கருதப்படும்.

குறிலில் உயிர்க்குறிலும், உயிர்மெய்க்குறிலும் அடங்கும். நெடிலில் உயிர்நெடிலும், உயிர்மெய் நெடிலும் அடங்கும். 'மெய்' ஒற்று எனவும் சொல்லப்படும். செய்யுளில் ஆய்தம் மெய்யாய்க் கருதப்படும்.

**அசை**

1. **அசையாவது யாது? அஃது எத்தனை வகைப்படும்?**

எழுத்து ஒன்றோ பலவோ சேர்ந்து அசைத்து இசைத்துச் சீர்க்கு உறுப்பாய் வருவது அசை எனப்படும். அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

2. **நேரசையாவது யாது? விளக்குக.**

குறில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசையாகும்.

அ, க – குறில் தனித்து வந்த நேரசைகள்.

அல், கல் – குறில் ஒற்றடுத்து வந்த நேரசைகள்.

ஆ, கா – நெடில் தனித்து வந்த நேரசைகள்

ஆல், கால் – நெடில் ஒற்றடுத்து வந்த நேரசைகள்.

3. **நிரையசையை விளக்குக.**

இருகுறில் இணைந்தும், இருகுறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில்நெடில் இணைந்தும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வருவன நிரையசைகள்.

அணி, பணி – இருகுறில் இணைந்து வந்த நிரையசைகள்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

அலர், வளம் – இருகுறில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசைகள்.

நிலா, கனா - குறில் நெடில் இணைந்து வந்த நிரையசைகள்.

படாம், கலாம் – குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசைகள்.

**சீர்**

4. **சீர் என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

நேரசை நிரையசைகள் தனித்தும் இணைந்தும் அமைவது சீர் எனப்படும். அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவகைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

5. **ஓரசைச் சீர்களை விளக்குக.**

வெண்பாவின் ஈற்றுச்சிர் ஓரசையில் அமைந்து நேரசையானால் ‘நாள்’ என்னும் வாய்பாட்டையும் நிரையசையானால் ‘மலர்’ என்னும் வாய்பாட்டையும் பெறும்.

**சான்று:** வாரி வளம்குன்றிக் **கால்**

கால் – நேர் – நாள் (வாய்பாடு)

வானம் வழங்கா **தெனின்**

தெனின் – நிரை – மலர் (வாய்பாடு)

வெண்பாவின் ஈற்றுச்சீர் ‘நேர் நேர்’ என உகர ஈற்றுச்சீராய் வந்தால் அது நேர்பு அசை எனப்படும். அது ‘காசு’ எனும் வாய்பாடாகும். ‘நிரைநேர்’ என உகர ஈற்றுச் சீராய் அமைந்தால் அது ‘நிரைபு’ அசை எனப்படும். அது ‘பிறப்பு’ என்னும் வாய்பாடாகும்.

**சான்று:** செய்யாமை செய்யாமை நன்று

நந்று : முதலசை நேர் – நேர்பு – காசு வாய்பாடு

பொய்யா விளக்கே **விளக்கு**

விளக்-கு : முதலசை நிரை – நிரைபு – பிறப்பு வாய்பாடு.

6. **ஈரசைச்சீர்கள் எத்தனை வகைப்படும்? விவரி.**

ஈரசைச்சீர்கள் நான்கு வகைப்படும். அவை தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்.

| **அசை** | **வாய்பாடு** | |
|---|---|---|
| நேர் + நேர் | - தேமா | |
| நிரை + நேர் | - புளிமா | மாச்சீர் 2 |
| நிரை + நிரை | – கருவிளம் | |
| நேர் + நிரை | - கூவிளம் | விளச்சீர் 2 |

7. **காய்ச்சீர் அமையுமாற்றை விளக்குக.**

ஈரசைச் சீர்கள் நான்கனோடு தனித்தனியாய் நேரசையைச் சேர்த்தால் காய்ச்சீர் ஆகும்.

| **அசை** | **வாய்பாடு** |
|---|---|
| நேர் + நேர் + நேர் | - தேமாங்காய் |
| நிரை + நேர் + நேர் | - புளிமாங்காய் |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

நிரை + நிரை + நேர் - கருவிளங்காய்

நேர் + நிரை + நேர் - கூவிளங்காய்

8. **காய்ச்சீர்கள் வேறு எவ்வாறு வழங்கப்படும்? அவை எப்பாவிற்கு உரியவை?**

காய்ச்சீர் நான்கிலும் ஈற்று அசை நேரசையாய் உள்ளதால் அவை நேரீற்று மூவசைச்சீர் எனப்படும். சீர்கள் வெண்பாவிற்கு உரியவை. ஆதலால், அவை வெண்பா உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

9. **தளை என்பதனை விளக்குக.**

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் அமைவது தளை எனப்படும்.

10. **தளைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தளைகள் ஏழு வகைப்படும். அவை நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்ராசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என்பனவாகும்.

11. **வெண்பாவுக்குரிய தளைகள் யாவை?**

வெண்பாவுக்குரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமாகும்.

12. **இயற்சீர் வெண்டளை எவ்வாறு அமையும்?**

**இயற்சீர் வெண்டளை** : ஈரசைச்சீர்களுக்குள் மாச்சீர்களுக்கு முன் நிரையசையும், விளச்சீர்களுக்கு முன் நேரசையும் மாறி வந்து ஒன்றாமல் இணைவது **இயற்சீர் வெண்டளை**யாகும்.

**சான்று:** ஈ தல் – இசை பட

தே + மா – **நிரை**

மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.

பயன் மரம் – உள் ளூர்

கரு **விளம் – நேர்**

விள முன் நேர் வந்த இயற்சீர் வெண்டளை.

மா முன் நிரையும் விளமுன் நேரும் இயற்சீர் வெண்டளைகளாகும்.

13. **வெண்சீர் வெண்டளை எவ்வாறு அமையும்?**

**வெண்சீர் வெண்டளை:** மூவசைச் சீர்களுள் நேரசையாய் முடியும் காய்ச்சீர்களுக்கு முன் வரும் சீரின் முதலசை நேரசையாய் வந்து ஒன்றி இயைவது **வெண்சீர் வெண்டளை**யாகும்.

**சான்று:** கைம் மா று – வேண் டா

நேர் + நேர் + நேர் – நேர் + நேர்

தே மாங் **காய் – நேர்**

காய் முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.

**பா வகைகள்**

1. **பா என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்?**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

செய்யுள் உறுப்புகள் அமைய, ஓசை ஒழுங்குபட அமைப்பதே பா எனப்படும். பா - பரந்துபட்ட ஓசை ஒழுங்கு.

2. **நால்வகைப் பாக்கள் யாவை?**

வெண்பா, ஆசிரியப்பா (அகவற்பா), கலிப்பா, வஞ்சிப்பா ஆகியன நால்வகைப் பாக்களாகும்.

3. **வெண்பாவின் பொது இலக்கணம் யாது?**

1 வெண்பா நாற்சீர் கொண்ட அடிகளைப் பெற்று வரும். ஈற்றடி முச்சீராய் வரும்.

2 ஈரசைச் சீர்களும், மூவசைச் சீர்களில் காய்ச்சீரும் பயின்று வரும். கனிச்சீர் வாராது.

3 இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பிறழாமல் வரும். பிற தளைகள் வருதல் கூடாது.

4 ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடியும்.

5 செப்பலோசை குன்றாமல் ஒரு விகற்பமாகவேனும் பல விகற்பமாகவேனும் வரும்.

6 வெண்பா இரண்டடிக்குக் குறையாமல் பன்னிரண்டடிகள் வரை பாடப்படுதல் வேண்டும். இவையே வெண்பாவின் பொது இலக்கணமாம்.

4. **வெண்பாவின் வகைகள் யாவை?**

குறள்வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்திய வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பா ஆறு வகைப்படும்.

5. **குறள் வெண்பாவின் இலக்கணம் யாது?**

குறள் வெண்பா இரண்டடிகளில் வரும். ஈற்றடி முச்சீராயும் முதலடி நாற்சீராயும் அமைந்திருக்கும். இயற்சீர் காய்ச்சீரும் பயின்று வரும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பிறழாமல் இருக்கும். செப்பலோசை குன்றாமல், ஒரு விகற்பமாகவேனும் இரு விகற்பமாகவேனும் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றால் முடிவு பெறும். இவ்வாறு வருவது குறள் வெண்பா எனப்படும்.

6. **ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வரும் வெண்பாக்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

(எ-டு): உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையாரே கல்லா தவர்.

இஃது 'உடை-கடை' என இரண்டடிகளும் ஒரெதுகையாய் அமைந்தமையால் ஒரு விகற்பக் குறள் வெண்பாவாகும்.

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

இது முதலடி ஒரெதுகையாயும், இரண்டாம் அடி மற்றோரெதுகையாயும் அமைந்தமையால் இரு விகற்பக் குறள் வெண்பா எனப்படும்.

7. **நேரிசை வெண்பாவின் இலக்கணம் யாது?**

நேரிசை வெண்பா, வெண்பாவின் பொது இலக்கணங்கள் யாவும் அமைய நான்கடிகளில் வரும். ஈற்றடி முச்சீராயும், ஏனைய அடிகள் நாற்சீராயும் இருக்கும். நான்கடிகளும் ஒரெதுகையாகவேனும், முன் இரண்டடிகள் ஒரெதுகையாய், பின் இரண்டடிகள் வேறு எதுகையாகவேனும் அமைந்திருக்கும். முன் இரண்டடிகளோடொத்த எதுகையை யுடைய தனிச்சொல் இரண்டாம் அடியின் நான்காம் சீராய் வரும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

8. **ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்த நேரிசை வெண்பாவிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

(எ.டு): வில்லுடையான் வானவன் வீயாத தமிழுடையான்
பல்வேறு கடல்தானைப் பாண்டியன் – சொல்லிகவா
இல்லுடையான் பாலை இளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையான் நீர்நாட்டார் கோ.

வில், பல், இல், நெல் என ஓரெதுகை கொண்டுள்ளமையால் இஃது ஒருவிகற்ப நேரிசை வெண்பா.

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் – நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்.

'புலமிக்- பலமிக்; பூம் –பாம் என ஈரெதுகை கொண்டுள்ளமையால் இந்து இருவிகற்ப நேரிசை வெண்பா.

9. **இன்னிசை வெண்பாவின் இலக்கணம் யாது?**

இன்னிசை வெண்பாவும் வெண்பாவின் பொது இலக்கணங்கள் யாவும் அமைய நான்கு அடிகளில் வரும். நான்கடிகளும் ஓர் எதுகையாய்த் தனிச்சொல் இன்றியும், இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று மூன்றெதுகையாகவும், மூன்றாம் அடியில் தனிச்சொல் பெற்றும்,முதல் மூன்று அடிகளிலும் தனிச்சொல் பெற்றும், நேரிசை வெண்பாவின் இலக்கணத்துக்கு மாறாய் நான்கடிகளில் வருவன எல்லாம் இன்னிசை வெண்பா எனப்படும்.

10. **ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்த இன்னிசை வெண்பாவிற்கு எடுத்துக்காட்டு தருக.**

(எ.டு): துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

இது தனிச் சொல்லின்றி துக, பக, அக, சக என ஓரெதுகை பெற்று வந்துள்ளமையால் ஒரு விகற்பமாய் வந்தது.

(எ-டு): அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

இஃது இரண்டாமடியில் தனிச்சொல் பெற்று, அங் –திங்; மறு ; தேய் என மூன்றெதுகையாய் வந்தது.

**III. இலக்கணத்தேர்ச்சி கொள்**

1. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

a) அன்பே __________ (ஆர்வமாய் / **தகளியாய்**)

b) வான்மழை ________ (**தூறலில்**/ பொழிந்திடின்)


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

c) கண்ணிரண்டும் _________ (இலாதார் / **இல்லார்**)

d) வெண்ணிலவு _________ (**காய்கிறது**/ ஒளிர்கிறது)

e) வெய்யோன் _________(காய்ந்திட / **ஒளிர்ந்திட**)

2. **மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

a) கல்வி கரையில __________ **விடை:** கற்பவர்

b) கல்லாரே ஆயினும் __________ **விடை:** நனிநல்லார்

c) நல்லவை செய்யின் ________ **விடை:** நலம்பல

d) அவமதிப்பும் ஆன்ற_____ **விடை:** புகழும்

e) உண்ணாது நோற்பார் ________ **விடை:** முனிவர்

3. **பொருத்துக.**

a) மாச்சீர் - கருவிளம், கூவிளம்

b) காய்ச்சீர் - நாள், மலர்

c) விளாச்சீர் - தேமாங்காய், புளிமாங்காய்

d) ஓரசைச்சீர் - தேமா, புளிமா

**விடை:**

a) மாச்சீர் - தேமா, புளிமா

b) காய்ச்சீர் - தேமாங்காய், புளிமாங்காய்

c) விளச்சீர் - கருவிளம், கூவிளம்

d) ஓரசைச்சீர் - நாள், மலர்

4. **கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராய்க்கொண்டு குறள் வெண்பா/ நேரிசை வெண்பா/ இன்னிசை வெண்பா எழுத முயற்சி செய்யும்.**

**1. கடல் 2. வாள் 3. மழை 4. தேன், 5. மரம்**

**குறள் வெண்பா**

**கடல்**

என்ன குறையென் றியம்பாயோ என்னிடந்தான்
கண்ணீரைக் கொட்டும் **கடலே.**

**வாள்**

குகைவிட் டெழுந்திட்ட கொல்புலிபோல் வீரன்
பகைவெல்ல ஏந்திட்டான் **வாள்.**

**மழை**

உண்ண உணாவளிக்கும் ஊர்பருக நீரளிக்கும்
மண்வீழும் நல்ல **மழை.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**தேன்**

எண்ண இனித்திடும் எண்ணற்ற நூல்வழங்கும்
கன்னல் தமிழ்மொழியே **தேன்.**

**மரம்**

ஆண்டு பலநூறு ஆனாலும் வேரூன்றி
நின்றதுகாண் வாழ்க **மரம்.**

5. **வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

வெண்பாவிற்குரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் ஆகும்.

6. **ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

வெண்பாவிற்குரிய நான்கு அடிகளும் ஓரெதுகையாய் அமைந்தால் அஃது ஒரு விகற்பம் எனப்படும்.

வெண்பாவில் ஒவ்வோரடியும் வெவ்வேறு எதுகையில் அமைந்திருந்தால் அது பல விகற்பம் எனப்படும்.

7. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

(எ-கா): நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்ட்து.
நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

a) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
b) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
c) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
d) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.
e) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

**விடை:**

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| a. கட்டிடம் | - கட்டடம் |
| அறசு | - அரசு |
| b. வெங்கலம் | - வெண்கலம் |
| c. மானம் | - வானம் |
| பயிறு | - பயறு |
| d. ஊருனி | - ஊருணி |
| e. இன்னிக்கு | - இன்றைக்கு |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

கபடிபோட்டி - கபடிப்போட்டி

VI. **தமிழாக்கம் தருக.**

The Serious dearth of library facilities in this country is scarcely keeping with Inida's status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies. She possesses only one public library on any considerable size, and possessing any library at all. The rural population is completely neglected. There are no travelling libraries to reach them > of kind that are to be found even in some backward countries.

The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy. The great mass of the people in India do not have the means to buy books or even magazines and newspapers; in the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habits.

நமது நாட்டில் முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று நூலகம் ஆகும். நூலகத்தில் பற்றாக்குறை உலக நாடுகள் அளவிலான கல்வி மற்றும் சமூக வளர்ச்சிக்கேற்ப அமையவில்லை. இந்தியா, காமன்வெல்த்தின் அண்டை நாடுகளுடன் மட்டுமின்றி ஆங்கிலேய காலனிய நாடுகளுடன் சாதகமற்ற நிலையில் ஒப்பிடப்படுகிறது. இந்தியாவில் குறிப்பிடத்தக்க முறையில் ஒரு பொது நூலகம் மட்டும் இருக்கிறது. அதுவே, தலைநகரத்தின் அடிப்படை வசதியை பூர்த்தி செய்யக் கூடிய அளவில் இல்லை. சில நகரங்கள் மட்டுமே ஏதேனும் ஒரு நூலகத்தைக் கொண்டிருப்பதாய் பெருமிதத்துடன் இருக்கும். கிராமத்தில் உள்ள மக்கள் படிப்பறிவு இல்லாத காரணத்தினால் புறக்கணிக்கப்படுகின்றனர். கிராமத்து மக்களை அடைய பின்தங்கிய நாடுகளில் இருப்பதைப்போன்று நடமாடும் நூலகங்கள் இல்லை.

நூலகங்களின் வளர்ச்சி சற்று குறைந்துள்ளது. பள்ளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கூடுதல் மற்றும் கல்வி அறிவின் வளர்ச்சி ஆகியவற்றில் முன்னேற்றம் இல்லை என்று சொல்லலாம். இந்திய நாட்டின் பெரும்பாலான மக்கள் , புத்தகங்கள், பத்திரிக்கைகள், நாளிதழ்கள் வாங்குவதற்கும்கூட வசதி இல்லை. தேவையான அளவிற்கு பொது நூலகங்களும் படிக்கும் அறைகளும் இல்லாவிடில் அவர்களால் முறையான படிக்கும் பழக்கத்தைப் பின்பற்ற இயலாது.

VII. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

(எ.கா): பலகை

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

1. தாமரை 2. கோவில் 3. வெங்காயம் 4. தலைமை

**விடை:**

1. **தாமரை:** குளத்தில் தாமரை பூத்துள்ளது.

   **தா + மரை :** வனத்தில் தாவித்தாவி மான் ஓடியது.

2. **கோவில் :** கோவிலில் தெய்வங்கள் எழுந்தருளும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**கோ + இல்:** மன்னன் வாழும் இடம் அரண்மனை.

3. **வெங்காயம் :** சமையலில் வெங்காயம் பயன்படும்.

 **வெம் + காயம் :** விபத்தில் அவனுக்கு வெம்மையான காயங்கள் ஏற்பட்டன.

4. **தலைமை :** யார் தலைமை ஏற்பதென அவர்களிடையே போட்டி எழுந்தது.

 **தலை + மை:** நரையை மறைக்கப் பூசிய மை, கொட்டும் மழை பட்டுக் கரைந்து வழிந்தது.

## இயல் – 5

## உரைநடை உலகம்

### 1. மதராசப்பட்டினம்

I. **'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'**

**முன்னுரை:**

மக்களிடம் சில ஊர்களின் பெயர்களைச் சொல்லும் போது, அவை சுற்றுலா செல்வதற்கான இடமாய் மட்டுமே தோன்றும். ஆனால், சில ஊர்களின் பெயர்களைக் கேட்கும் போது அவற்றின் வரலாறும் அந்த ஊர்களில் வாழும் மக்களின் வாழ்வியலும் நமது கண் முன் தோன்றும். அப்படிப்பட்ட ஓர் ஊர்தான், மதுரை. மணமணக்கும் மல்லிகை, சுடச்சுட சுக்குக் காபி, பூப் போன்ற மென்மையான இட்லி, ஜில் ஜில் ஜிகிர்தண்டா, பார்த்த இடமெல்லாம் நம் கண்ணைக் கவரும் கோவில் கோபுரங்கள். அது மட்டுமா, அன்றே சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரிய ஊர். இந்தியத் துணைக்கண்டத்திலேயே தொன்மையான வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட நகரங்களுள் ஒன்று. மதுரை மீனாட்சியம்மன் கோவில், உலகில் அனைவராலும் அறியப்பட்ட மிக பிரபலமான இடம்.

**மதுரைக்குப் பல வித பெயர்கள் உண்டான வரலாறு**

2500 ஆண்டும் பழமையான மதுரை முந்தைய காலத்தில் கடம்ப மரங்கள் நிறைந்த வனமாய் இருந்ததால் கடம்ப வனம் என்றும், மருத மரங்கள் அதிக அளவில் இருந்ததால் மருதை என்றும் வழங்கப்பட்டதாகவும், பின் காலப்போக்கில் மருதை மதுரையாய்த் திரிந்ததாகவும் கூறுகின்றனர். அனைவரும் இங்குக் கூடி இலக்கியப்பூர்வமான கலந்துரையாடல் செய்ததால் இதற்குக் கூடல் நகர் என்றும் பெயரும் உருவானதாகக் கூறப்படுகிறது. கோட்டையின் நான்கு வாயில்களிலும் நதிகள் சங்கமிப்பதால் நான்மாடக்கூடல் என்னும் பழமையான பெருமை மிகுந்த பெயரும் உண்டு. நீர் நிலைகளுக்கு நடுவே அமைந்த ஊர் என்பதால் இதற்கு ஆலவாய் என்னும் ஒரு பெயரும் உண்டு. அடுத்ததாக, மதுராபுரி எனும் பெயர் மதுரைக்கு வழங்கப்படுகிறது.

**பழமையான நாகரிகம்**

உலகில் தோன்றிய மிகமிகப் பழமையான நாகரிகங்களுள் தமிழர் நாகரிகமும் ஒன்று. கி.மு. 4000 முதல் கி.மு. 2000 ஆண்டுகளில் உலகம் முழுவதும் பல்வேறுபட்ட நாகரிகங்கள் தோன்றியிருந்தன. மத்திய அமெரிக்காவில் மாயன் நாகரிகம், தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் எகிப்திய நாகரிகம், வட இந்திய மற்றும் பாகிஸ்தானை உள்ளடக்கிய பகுதிகளில் சிந்து சமவெளி நாகரிகம் , கிரேக்க மற்றும் ரோம் நாகரிகம் போன்ற பல நாகரிகங்கள்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

தோன்றிய காலகட்டத்தில்தான் தமிழகத்தில்தான் தமிழகத்தில் வைகை நதி நாகரிகமும் தோன்றிருப்பதாய் ஆய்வுகள் கூறுகின்றன. இது நமக்குப் பெரும் பிரமிப்பை ஏற்படுத்தினாலும் இந்தச் செய்தி சமீபத்தில் மதுரையில் நடந்த அகழ்வாய்வுகள், இன்று நம் பார்வைக்குக் காட்சி வடிவாயிருக்கும் மதுரையைவிட மிகச் செல்வசெழிப்பு மிக்க நகரமாய் இருந்தது என்பதை உறுதி செய்துள்ளதாய் தெரிவிக்கின்றன. பண்டைய காலந்தொட்டு இன்றைய நவீன எந்திரமயமான உலகம்வரை மதுரை மாநகரம் தமிழரின் பெருமையைப் பேணும் விதமாய் இருப்பதற்கு ஒரே காரணம், மூவேந்தர்களுள் பாண்டியர்களே 16ஆம் நூற்றாண்டுவரை கோலோச்சி ஆட்சி நடத்திய குறிப்பையும், அவர்களை அடுத்து நாயக்கர்கள், பாண்டியர்களின் பெருமைமிகு நகரைத் தலைநகராய்க் கொண்டு ஆட்சி செய்த சுவடுகளுள் திருமலை நாயக்கர் மகாலும் ஒன்று என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். இன்றும் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகே திருமலை நாயக்கர் மகால் மிகச்சிறப்பாய்ச் சுற்றுலாத்துறையால் பராமரிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்குக் கம்பீரமாகவும், தொன்மைத் தொனியிலும் காட்சியளிக்கின்றது.

**மதுரை நகரின் அமைப்பு**

மதுரை நகரின் அமைப்பு, சிந்து சமவெளி நாகரிகத்தை ஒத்து உள்ளது. மதுரை பல்வேறு அரசாட்சியின்கீழ் இருந்தது என்றாலும், பாண்டியர்கள் மற்றும் நாயக்கர்கள் காலந்தான் மதுரையின் பொற்காலமாய் இருந்து உள்ளது. இன்றைய மதுரையின் பெரும்பாலான மையப்பகுதிகள் நாயக்கர்களால் கட்டப்பட்டவையே. எல்லா இன்பமான வாழ்விற்குப் பின்னும் பல இன்னல்களும் சோதனைகளும் நிச்சயம் ஆட்சிக் காலத்தில் பல சோதனைகளையும் சாதனைகளையும் கண்டுள்ளது.

மரை மாநகரின் தனிச்சிறப்பே அந்தநகரின் வடிவமைப்புதான். மீனாட்சி அம்மன் கோவிலை மையமாய் வைத்து அமைக்கப்பட்ட மாட, ஆவணி, மாசி வீதிகள் பழமையான மதுரையின் வரலாற்றுச் சான்றுகள், இந்தியாவின் மிகச்சிறந்த நகர வடிவமைப்புகளின் பட்டியலில் மதுரை மாநகரும் ஒன்று. ஆண்டு முழுவதும் திருவிழா நடைபெறும் ஊர் மதுரையாக மட்டுமே இருக்கமுடியும். எந்த நேரமும் மக்கள் விழாவோடும் மகிழ்ச்சியோடும் இருப்பார்கள். மதுரையில் சில தெருக்களின் பெயர்கள் தமிழ் மாதங்களின் பெயரில் அமைந்துள்ளன. சித்திரை வீதி, மாசி வீதி, ஆவணி வீதி. இது மட்டுமன்று, நீர் நிலைகளின் பெயரைக்கொண்டே தங்களின் ஊருக்குப் பெயரை வைத்து நீருக்கு மரியாதை செய்தார்கள், தமிழர்கள். மாடக்குளம், ஆத்திகுளம், கரிசல் குளம் போன்றவை இதற்கு உதாரணம். மதுரை மக்களுக்குப் பெருமை அளிக்கும் விதமாய்த் தமிழகத்தின் முக்கிய மாவட்டமாய் உள்ளதால்தான் மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் போன்ற பெரிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் மதுரையின் வரலாற்றுக்கென்றே ஒரு தனிக் கவன ஈர்ப்பு இருப்பதை நம்மால் உணர முடியும்.

**மதுரையின் சிறப்புகள்**

மதுரையின் அடையாளமாய் விளங்கும் மீனாட்சி அம்மன் கோவில், இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்பு கட்டப்பட்டதாய்ச் சான்றுகள் உண்டு. பாண்டிய மன்னர்களால் முதலில் மதுரையில் கட்டப்பட்ட கோவில் இது. பின், இஸ்லாமியப் படையெடுப்பினால் இந்தக் கோவில் அழிந்துபோய் மீண்டும் 15 ஆம் நூற்றாண்டில் நாயக்கர் ஆட்சியில் புத்துயிர் பெற்று, இன்று புதுப்பொலிவுடன் தமிழரின் கட்டடக்கலையின் மகத்துவத்தை உலகிற்குப் பறைசாற்றும் விதமாய் அமைந்துள்ளது. சக்தியின் வடிவமான மீனாட்சி அம்மன் பிறந்து வளர்ந்து ஆட்சி செய்து


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

தெய்வமான இடமாகவும் கருதப்படும் நகர், மதுரை. முக்கிய சக்தி தலமாய் விளங்குகிறது, மதுரை. இன்றளவும் மீனாட்சி அம்மனின் கோவிலில் நடக்கும் திருவிழாக்கள் சமுதாய ஒருங்கிணைப்பிற்கு ஓர் உதாரணம்.

மேலும், அன்றைய அரசரின் ஆட்சிச்சிறப்பை எடுத்துரைக்கும்வண்ணம் சித்திரைத் திருவிழா கொண்டாடப்படுகிறது. உண்மையில் பலருக்கும் மதுரை என்றாலே அங்குள்ள மீனாட்சி அம்மன் திருகோவிலே முதலில் நினைவிற்கு வரும் இடமாய் இருக்கும். உலகிலேயே அதிக நாள்கள் கொண்டாடப்படும் பிரம்மாண்டமான பண்டிகை இந்தச் சித்திரைத்திருவிழாவாகத்தான் இருக்கும். முதல் 15 நாள்கள் மீனாட்சி அம்மனுக்கும், அடுத்த 15 நாள்கள் அழகருக்கும் திருவிழா நடைபெறுகிறது. மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா மீனாட்சி திருக்கலியாணம், மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், மீனாட்சியம்மன் தேரோட்டம், புட்டுத் திருவிழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

வரலாற்றுச்சிறப்பு மிக்க பல பொழுதுபோக்குத் தளங்கள் மதுரையில் உள்ளன. கவின்மிகு கலைநயத்துடன் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மகால், ஆயிரம் கால் மண்டபம், புது மண்டபம் போன்ற பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் இங்குக் காணப்படுகின்றன. மேலும், ராமகிருஷ்ண மடம், ஸ்ரீ அரவிந்தர் அன்னை தியான மண்டபம், காந்தி அருங்காட்சியகம் போன்றவை மதுரையின் சிறப்பை விளக்கும் விதமாய் அமைந்துள்ளன. அரசு அருங்காட்சியகம் போன்ற பல மொழுதுபோக்கு அம்சங்கள் அதிகம் காணப்படுகின்றன, மதுரை மாநகரில் இயர்கை எழில் கொஞ்சும் பல அருவிகள் உள்ளன. வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள, மதுரைக்கும் அருகே உள்ள குட்லாம்பட்டி அருவி இங்கு உள்ளது. இந்த அருவி அறுநூறு அடி உயரத்தில் இருந்து விழுகிறது. கிளிமூக்கு அருவி, காட்டுப்பாறை அருவி, ஒத்தப்பாறை அருவி, கிளிநொச்சி அருவி ஆகியன மழைக்காலங்களில் மட்டும் தோன்றி மறையும் அருவிகளாகும்.

**முடிவுரை**

மலிவு விலையில் இரவு பகல் என 24 மணிநேரமும் சாப்பாடு தரு ஊர், மதுரை. திரும்பிய இடமெல்லாம் விதவிதமான கடைகள், உணவகங்கள் உள்ளன. சாப்பிட வருவோரின் சொர்க்க பூமியாகவே மதுரை திகழ்கிறது. அதிக வடைக்கடைகள் உள்ள ஊர் மதுரை மட்டுமே. இனிமையின் இயல்பே தமிழும் மதுரையும் ஆகும். பாலில் கந்த நீரை எப்படி பிரிக்க இயலாதோ அதே போல், தமிழையும் மதுரையையும் பிரிக்க இயலாது என்பது மறுக்க முடியாத உண்மையே. அதனால்தானோ என்னவோ மதுரையைப் புகழ்ந்த புலவர் பெருமான்கள் தமிழோடு சேர்த்தே போற்றிப் புகழ்ந்துள்ளனர். புறநானூறு, தமிழ்கெழு கூடல் என்று மதுரையைப் போற்றியுள்ளது. நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர் தாம் பாடிய சிறுபாணாற்றுப்படையில் மதுரையைத் "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் எல்லம் இரவில் தூங்கிவிட்டாலும் மதுரை என்றும் தூங்கா நகரமாய் ஜொலித்துக்கொண்டுள்ளது.

## II. பலவுள் தெரிவு

1. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் – காரணம்

அ. நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ. மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ. மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

**ஈ. அ, ஆ, இ – அனைத்தும்**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

2. கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகம் துணி சார்ந்ததாகவே இருந்தது.
அ. கூற்று சரி, காரணம் தவறு ஆ. கூற்று தவறு, காரணம் சரி
இ. கூற்று தவறு, காரணம் தவறு **ஈ. கூற்று சரி, காரணம் சரி**
3. பொருத்துக.
அ. திருவல்லிக்கேணி ஆறு 1. மாவலிபுரச் செலவு
அ. பக்கிங்காம் கால்வாய் 2. கல் கோடரி
இ. பல்லாவரம் 3. அருங்காட்சியம்
ஈ. எழும்பூர் 4. கூவம்
அ. 1, 2, 3, 4 ஆ. 4, 2, 1, 3 இ. 4,1, 2, 3 ஈ. 2, 4, 3, 1
4. ஆங்கிலேயர் ஆட்சிக்கு அதிகார மையமாய் விளங்கிய நகரம் ________
அ. தஞ்சாவூர் **ஆ. மதராசப்பட்டினம்**
இ. திருச்சி ஈ. காஞ்சிபுரம்
5. இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில், பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய __________
அ. குடியம் ஆ. அத்திரம் பாக்கம்
இ. கூடுவாஞ்சேரி **ஈ. பல்லாவரம்**
6. 1646ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி சென்னையின் மக்கள்தொகை _______
**அ. 19,000** ஆ. 19,500 இ. 19,200 ஈ. 19,700
7. சென்னை மாநகராட்சி __________ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
அ. 1686 ஆ. 1687 **இ. 1688** ஈ. 1689
8. சென்னை மாகாணத்தின் முதல் தலைவர் __________
**அ. எலி யேல்** ஆ. தாமஸ் பிட்
இ. தாமஸ் மேரி ஈ. பிட் யேல்
9. பொருத்துக.
அ. சென்னை இலக்கியச் சங்கம் 1. 1860
ஆ. கன்னிமாரா நூலகம் 2. 2010
இ. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் 3. 1812
ஈ. அண்ணா நூற்றாண்டு நூலகம் 4. 1869
அ. 1, 2, 3, 4 **ஆ. 4, 1, 2, 3** இ. 3, 2, 4, 1 ஈ. 2, 4, 3, 1

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தென்னிந்தியாவின் நுழைவாயில் என்று **சென்னை** அழைக்கப்படுகிறது.
2. தாலமி, மயிலாப்பூரை 2ஆம் நூற்றாண்டில் **மல்லியர்பா** னும் துறைமுகமாய்ச் சுட்டியுள்ளார்.
3. சகூவம் ஆறு **திருவல்லிக்கேணி ஆறு** என்றும் வழங்கப்பட்டது.
4. கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் **பிரான்சிஸ் டே** ஆவார்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

5. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி **வெள்ளையர் நகர்** என்று வழங்கப்பட்டது.
6. வடசென்னைப்பகுதிகள் **மதராசப்பட்டினம்** என்றும் வழங்கப்பட்டன.
7. தென்சென்னைப் பகுதிகள் **சென்னைப்பட்டினம்** என வழங்கப்பட்டன.
8. தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் 1856இல் **இராயபுரத்தில்** வழங்கப்பட்டது.

## 2. தெய்வமணிமாலை

**ஆசியரைப்பற்றி**

இராமலிங்க அடிகள் (அக்டோபர் 5, 1823 – ஜனவரி 30, 1874) சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தார். இவர் படைத்த 'திருவருட்பா' ஆறு திருமுறைகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளது, 'மனு முறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை இவர்தம் உரைநடை நூல்கள் ஆகும். வள்ளலார் என்று வழங்கப்படுகிறார். 'மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்' என்று இறைவனை வேண்டும் இராமலிங்க அடிகள் உருவாக்கிய சமயநெறி 'சமரச சன்மார்க்க நெறி' எனப்படுகிறது.

சென்னையில் கந்தகோட்டப் பெருமான்மீது மிகுந்த பக்தி கொண்டிருந்த இராமலிங்க அடிகள், பின்னர் வடலூர் சென்று, 'சத்திய தரும சாலை'யை நிறுவினார். ஒளி வழிபாட்டை முன்னெடுத்து, சங்குகளற்ற ஆன்ம நெறியை முன்னிறுத்தியவர்.

திருவருட்பா – திரு + அருள் + பா. வள்ளலார் பாடிய 5818 பாடல்களின் தொகுப்பு இதுவாகும். இப்பாடல்கள் அனைத்தும் ஆசிரிய விருத்தத்தில் அமைந்தவையாகும்.

I. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**மலரடி** - உவமைத்தொகை

**மறவா** - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**வளர்தலம்** - வினைத்தொகை

II. **உறுப்பிலக்கணம் எழுதுக.**

**நினைக்கின்ற –** நினை + க்+ கின்று +அ.

**நினை –** பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; அ- பெயரெச்ச விகுதி.

**வைத்து –** வை + த் + த் +உ.

**வை –** பகுதி; த் – சந்தி; த் – இறந்த கால இடைநிலை; உ- வினையெச்ச விகுதி.

**பேசுவார் –** பேசு + வ் + ஆர்.

**பேசு –** பகுதி; வ்- எதிர்கால இடைநிலை; ஆர் பலர்பால் வினைமுற்று.

III. **பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

**உள்ளொன்று –** உள் + ஒன்று

'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' – உள்ள் +ஒன்று.

'உயிர்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – உள்ளொன்று.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**ஒருமையுடன் –** ஒருமை + உடன்.

'இஈ ஐவழி யவ்வும்' – ஒருமை + ய்+ உடன்.

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – ஒருமையுடன்

IV. **பலவுள் தெரிவு**

1. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு _____

அ. நேர்மறைப் பண்பு ஆ. எதிர்மறைப்பண்பு

**இ. முரண்பண்பு** ஈ. இவை அனைத்தும்

2. சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம் என்று குறிக்கப்படும் நகரம் எது?

அ. மதுரை **ஆ. சென்னை**

இ. கோவை ஈ. திருச்சிராப்பள்ளி

3. இராமலிங்க அடிகளாரின் சிந்தனைகளின் ஊற்றுக்களமாய் இருந்தது ________

அ. பழனி ஆ. திருப்பரங்குன்றம்

**இ. கந்தகோட்டம்** ஈ. வள்ளுவர் கோட்டம்

4. இறைவனது திருவடிகள் எதைப் போன்றது?

அ. பாறை ஆ. எஃகு இ. பனி **ஈ. மலர்**

5. மதத்தை ______ என்கிறார் இராமலிங்க அடிகளார்.

**அ. பேய்** ஆ. பூதம் இ. அசுரன் ஈ. அழகு

6. மருவு ___________ ஆசையை மறக்க வேண்டுமென வள்ளலார் இறைஞ்சுகிறார்.

அ. பொன் ஆ. மண் **இ. பெண்** ஈ. மூன்றும்

7. இராமலிங்க அடிகளாரை ________ என்றும் வழங்குவர்.

அ. தெய்வப்புலவர் ஆ. மதுரகவி

**இ. வள்ளலார்** ஈ. பாவேந்தர்

8. இராமலிங்க அடிகளார் வகுத்த புதுநெறி ___________

அ. சைவ நெறி ஆ. வைணவ நெறி

இ. துன்மார்க்க நெறி **ஈ. சன்மார்க்க நெறி**

## 3. தேவாரம்

**ஆசிரியரைப்பற்றி**

திருஞானசம்பந்தர், சைவ சமய அடியார்களாகிய நாயன்மார்கள் அறுபத்து மூவருள் முதலில் வைத்து எண்ணப்படும் நால்வருள் ஒருவர்.சீர்காழியில் பிறந்தவர். மூன்று வயதுக் குழந்தையாய் இவர் பசித்தழுதபோது உமையம்மையே வந்து ஞானப்பாலூட்டினர் என்பது புராணச்செய்தியாகும். அப்பொழுதே 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் தமது முதல் தேவாரப்பாடலைப் பாடினார் என்பர்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

மதுரையம்பதியிலிருந்த சமணர்களிடம் அனல்வாதம், புனல்வாதம் செய்து வெற்றி பெற்றுச் சைவத்தை நிலைநிறுத்தினார் என்பர்.

**தேவாரம்** – தே + ஆரம். சைவ சமய இலக்கியங்களான பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழும் தேவாரம் ஆகும். ஞானசம்பந்தர் பாடிய தேவாரம் முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் பாடிய தேவாரம் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரர் பாடிய தேவாரம் ஏழாம் திருமுறையாகவும் தொகுப்பட்டுள்ளன.

I. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**மாமயிலை** – உரிச்சொற்றொடர்

II. **பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

பூம்பாவாய் – பூ + பாவாய்

விதி: பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும் – பூம்பாவாய்

III. **உறுப்பிலக்கணம் எழுதுக.**

**கண்டான்** - காண் (கண்) +ட் + ஆன்.

**காண்**- பகுதி, கண் எனக் குறுகிய விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை ; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**அமர்ந்தான்** – அமர் + த்(ந்) + த் +ஆன்.

**அமர்** – பகுதி; த் –சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

I. **பலவுள் தெரிவு**

1. மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு _________
   அ. கோவில் வழிபாடு ஆ. கோவில் சடங்குகள்
   **இ. கோவில் திருவிழாக்கள்** ஈ. கோவில் கட்டடங்கள்
2. மயிலை என்று வழங்கப்படுகிறது ________
   அ. மயில் **ஆ. மயிலாப்பூர்** இ. மயிலூர் ஈ. மயில்கூட்டம்
3. கபாலீச்சரம் என்னும் கோவில் அமைந்துள்ள இடம் __________
   அ. கயிலை **ஆ. மயிலை** இ. சிதம்பரம் ஈ. மதுரை
4. ஆரவாரமுடைய உத்திரவிழா கொண்டாடப்படும் மாதம் ________
   அ. மாசி **ஆ. பங்குனி** இ. சிதம்பரம் ஈ. வைகாசி
5. தேவாரத்தைத் தொகுத்தவர் ___________
   அ. நாதமுனிவர் ஆ. நாற்கவிராச நம்பி
   **இ. நம்பியாண்டார் நம்பி** ஈ. மாணிக்கவாசகர்
6. பன்னிரு திருமுறையில் முதன் மூன்று திருமுறைகளில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடியவர் ____________


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அ. அப்பர் ஆ. சுந்தரர்

**இ. ஞானசம்பந்தர்** ஈ. மாணிக்கவாசகர்

**மயிலாப்பூரின் பெருமைகள் / சிறப்புகள்**

1. மடலார்ந்த தெங்கின் மயிலை
2. இருளகற்றும் சோதித் தொன்மயிலை
3. கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
4. கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்
5. கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்
6. மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்
7. ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை

**மயிலை பதிகத்தில் காணப்பெறும் விழக்கள்**

1. ஐப்பசி – ஓண விழா
2. கார்த்திகை – விளக்குத் திருவிழா
3. மார்கழி - திருவாதிரை விழா
4. தை – தைப்பூச விழா
5. மாசி – கடலாட்டு விழா
6. பங்குனி – பங்குனி உத்திர விழா

## 4. அகநானூறு

**அகநானூறு :** பழம்பெரும் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். எட்டுத்தொகை நூல்களுள் அகப்பாடல்கள் நானூற்றின் தொகுப்பு அகநானூறு ஆகும். நெடுந்தொகை என்றும் இது வழங்கப்படுகிறது, அகத்தொகை நூல்களுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் 'நெடுந்தொகை' எனப்படுகிறது. சிற்றெல்லை 13 அடி; பேரெல்லை 31 அடி. அகவல் பாக்களால் ஆனது. 1 முதல் 120 வரையிலான பாடல்களை 'களிற்றியானை நிரை' என்றும், 121 முதல் 300 வரையிலான பாடல்களை 'மணிமிடைப்பவளம்' என்றும், 301 முதல் 400 வரையிலான பாடல்களை 'நித்திலக்கோவை' என்றும் குறிப்பிடுவர்.

**ஆசிரியரைப்பற்றி**

**அம்மூவனார் –** அம்மூவன் என்றும் வழங்கப்படுகிறார். ஐங்குறுநூற்றின் இரண்டாவது வைப்பாகிய நெய்தல்திணைப் பாடல்களைப் பாடியவர். ஐங்குறுநூற்றில் நூறு பாடல்களும், அகநானூற்றில் ஆறு பாடல்களும், குறுந்தொகையில் பதினொரு பாடல்களும், நற்றிணையில் பத்துப் பாடல்களுமாய் மொத்தம் 127 பாடல்களைப் பாடியுள்ளார்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**திணை:** நெய்தல் திணை

**கூற்று:** தலைமகள் பாங்கற்கு உரைத்தது.

**உள்ளுறை :** உப்பு விற்கும் உமணர் பெண்ணுக்குத் தந்தை, பழஞ்சேற்றில் அழுந்திக் கிடக்கும் வண்டியை, மூக்கை நிலத்திலே ஊன்றியும், அடி முழந்தாளிட்டும் தம் வலியெலாம் கெடுமாறு துன்புற்று இழுக்கும் பகட்டினை முயன்று கரையேற்றி உய்விக்குமாறு போல, நீயும் முயன்று என் தலைவியின் கண்கள் தந்த கடலன்ன காமநோயினைத் தீர்த்து என்னை வாழ்விப்பாயாக என்பதே இப்பாடலின் உள்ளுறை ஆகும்

I. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**பெருங்கடல்** - பண்புத்தொகை

**உழாஅது** - செய்யுளிசை அளபெடை

**வெரீஇய** - சொல்லிசை அளபெடை

II. **பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

**செய்த –** செய் + த் +அ.

**செய் –** பகுதி; த் – இறந்தகால இடைநிலை; அ- பெயரெச்ச விகுதி

**சாற்றி –** சாற்று + இ.

சாற்று – பகுதி, இ – வினையெச்ச விகுதி

III. **பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**பெருங்கடல் –** பெருமை + கடல்

**விதி :** 'ஈறு போதல்' – பெரு + கடல்

**விதி:** 'இனமிகல்' – பெருங்கடல்

IV. **பலவுள் தெரிவு**

1. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ. எருது ஆ. குதிரை **இ. நாய்** ஈ. யாழி

2. பழந்தமிழர்களின் தொழில் ________ இயல்பைச் சார்ந்து அமைந்திருந்தது.

**அ. நில** ஆ. நீர் இ. காற்று ஈ. நெருப்பு

3. ஆண்களும் பெண்களும் வணிகம் செய்த செய்தியைக் குறிப்பன __________

அ. பக்தி இலக்கியங்கள் ஆ. காப்பியங்கள்

இ. நீதி இலக்கியங்கள் **ஈ. சங்க இலக்கியங்கள்**

4. உமணர் என்பவர்கள் __________

அ. மீனவர்கள் ஆ. உழவர்கள்

இ. நெல் வணிகர்கள் **ஈ. உப்பு வணிகர்கள்**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

5. உழவு செய்யாமலேயே விளைவது __________

அ. நெல் ஆ. **உப்பு** இ. சாமை ஈ. வரகு

6. உப்பு விளையும் களத்திற்கு ________ என்று பெயர்.

அ. களம் ஆ. கடற்கரை **இ. அளம்** ஈ. வயல்

7. ‘நெல்லின் நேர்ந்நீ வெண்கல் உப்பு’ என்பது __________வணிகம்.

அ. பண ஆ. கணக்கு

**இ. பண்டமாற்று** ஈ. இவற்றுள் எதுவும் அன்று

V. **தற்காலத்தில் வணிகத்தில் சிறந்து விளங்கும் மகளிர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை**

வணிகத்தில் ஆண்களோடு பெண்களும் ஈடுபட்டிருந்தமையைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. உமணர்களின் உப்பு வண்டியோடு பயணபட்டுப் போன உமணச்சிகளையும், பரதவர்களின் மீன்களை விலை கூறி விற்ற மீனவப் பெண்களையும் சங்க இலக்கியங்கள் அடையாளம் காட்டுகின்றன.

‘ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்’ என்ற மகாகவி பாரதியின் கனவு மெய்ப்படும் தற்காலத்தில் பல்வேறு வணிகத்திலும் மகளிர் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றனர்.

சிறுதொழில் உற்பத்தி என்பது பெருமளவு மகளிர் தலைமையில் இயங்குவதைக் காணமுடிகிறது. குடிசைத்தொழில்களில் இன்றும் பெருமளவு உழைக்கும் மகளிர் ஈடுபட்டுள்ளனர்.

**சுய உதவிக் குழுக்கள்**

உற்பத்திப்பொருள்களைச் சந்தைப்படுத்தும் பணிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்சாகத்துடன் ஈடுபடுகின்றனர். அரசாங்கத்தின் மானியத்தோடு வங்கியிலிருந்து கடன் பெறுவது, புதிய தொழில்களைத் தொடங்குவது, உற்பத்திப்பொருள் வணிக அங்காடிகளை வாடகைக்கு எடுத்து விற்பது என்று அவர்களின் எல்லைகள் விரிவடைந்துள்ளன.

**துணிமணிகள் வணிகம்**

நெய்தல் தொழிலில் மகளிர் ஈடுபடுவது மட்டுமன்றி, துணிமணிகளை விற்பனை செய்யும் வணிகத்திலும் ஈடுபடுகின்றனர். தமிழ்நாட்டின் பல இடங்களில் கைத்தறிப் புடவைகள் உள்ளிட்ட மகளிருக்கான துணிமணிகளை வணிகப்படுத்தும் சந்தைகளை மகளிர் உருவாக்கியுள்ளனர். பல நகராட்சி, மாநகாட்சிக் கட்டடங்களில் மகளிர் நடத்தும் துணிமணிகள் வணிக அங்காடிகளைக் காணமுடிகிறது.

**அழகு சாதனப் பொருள்கள்**

மகளிர் அதிகம் அக்கறை செலுத்தும் அழகுசாதனப் பொருள்கள் உற்பத்தியிலும் வணிகத்திலும் பெண்கள் ஈடுபாடு காட்டுகின்றனர். மகளிருக்கான சந்தை வாய்ப்பை அறிந்து ஆங்காங்கே ‘அழகு நிலையங்கள்’ எனும் பெயரில் வணிக நிறுவனங்களை அமைத்து வெற்றிகரமாய் நிகழ்த்தி வருகின்றனர்.

**கைவினைப் பொருள்கள்**

தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் அந்தப் பகுதிக்கான சிறப்பான கைவினைப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றை ஓரிடத்தில் சேகரித்து விற்பனை செய்யும் வணிகச் செயல்பாட்டைப் பல மகளிர் தன்னார்வக் குழுக்களும், சுய உதவிக் குழுக்களும் சிறப்பாய்ச் செய்து வருகின்றன.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**வணிகத்தில் மகளிர்**

சிறு மற்றும் குறுதொழில்கள் , வணிகம் மட்டுமின்றிப் பெரும் நிறுவனங்களையும் பெண்கள் பொறுப்பெடுத்து நடத்தும் காலமிது. பெண்களின் தலைமையில் இயங்கும் வணிக நிறுவனங்கள் நேர்த்தியாகவும் பொறுப்புணர்வுடனும் இயங்குவதாகப் பத்திரிகைகள் பாராட்டி எழுதுகின்றன.

**முடிவுரை**

இவ்வாறு தற்காலத்தில் மகளிர் வணிகத்தில் ஈடுபட்டுச் சாதனையாளர்களாய் உருவாகியுள்ளனர்.

## 5. தலைக்குளம்

## 6. படிமம்

I. **இலக்கணத் தேர்ச்சிகொள்**

1. படிமம் என்பதன் பொருள்

   அ. சொல் ஆ. செயல் **இ. காட்சி** ஈ. ஒலி

2. "காலை இளம்வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்" – இக்கவிதையில் __________ பயின்று வந்துள்ளது.

   அ. பயன்படிமம் **ஆ. வினைப்படிமம்**

   இ. மெய்ப்படிமம் ஈ. உருப்படிமம்

3. கூற்று: உவமை, உருவகம் போலப் படிமமும் வினை, பயன் , மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

   காரணம்: எவ்வகையான படிமமாய் இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.

   **அ. கூற்று சரி, காரணம் தவறு** ஆ. கூற்று தவறு, காரணம் சரி

4. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.

   அ. நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு.

   ஆ. கட்டில் நிணக்கும் இழிசினன் கையது

   **இ. பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்**

   ஈ. வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப

5. "மாந்தோப்பு, வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்குறது" – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

   **விடை:** வினைப்படிமம்

II. **தமிழாக்கம் தருக.**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

**தமிழாக்கம்**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

பெரியார் ஒரு சமூகப் புரட்சியாளர் மட்டும் அல்லர், அதற்கும் அப்பாற்பட்டவர். இவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் போராடினர். அவர்களுக்காக மிகவும் பரிந்து போராடினார். இதில் அவரின் கோணம் (பார்வை) மிகவும் விரிவாய் இருந்தது. எப்பொழுதெல்லாம் பிரச்சினை வருகிறதோ அப்பொழுதெல்லாம் அதன் ஆழம்வரை சென்று அதனைப் புரிந்துகொண்டு, ஓய்வில்லாமல் அதற்கான நிரந்தரத் தீர்வினை மேற்கொள்வார். மக்களிடம் உரையாடும்போது, அவரின் பேச்சு சமூகத்திற்கு நிரந்தரத் தீர்வினை நல்குமாறு இருந்ததற்குக் காரணம், அவரின் வருகை மட்டுமே. சமூகத்தில் இவ்வாறான மாற்றங்களுக்கு இவரே காரணம்.

**III. இலக்கிய நயம் பாராட்டுக.**

பிறப்பினால் எவர்க்கும்- உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

**திரண்டகருத்து**

ஒருவர்க்குப் பிறப்பினால் பெருமை உண்டாவதில்லை. அவர்களின் செய்கையின் மூலமாகவே பெருமை உண்டாகும். நன்மை செய்பவர் மேற்குலத்தைச் சார்ந்தவர் என்றும், தீமை செய்பவர் கீழ்க்குலத்தைச் சார்ந்தவர் என்றும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிடுகின்றார்.

**பொருள்நயம்**

நன்மை செய்தால் உலகமே நாடிச் செல்லும்; மேற்குலத்தைச் சார்ந்தவராய் மாற்றம் பெறுவர். தீமை செய்தால் உலகமே தீண்டத்தகாதவராய் மாற்றம் பெறுவர்.

பிறப்பு - பெருமை

சிறப்பு - செய்க

நன்மை - நாடும்

தின்மை- தீண்ட

போன்ற மோனைத்தொடைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

பிறப்பு - சிறப்பு


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

நன்மை - தின்மை

போன்ற எதுகைத்தொடைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

இப்பாடல் இலக்கிய நயங்கள் அமைந்து படிப்பதற்கு இன்பம் தருகின்றது.

**IV. பேச்சு வழக்கை எழுத்து வழக்காய் மாற்றுக.**

(எ.கா). இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சுக்கோ.

இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது, நீயும் புரிந்துகொள்.

1. **நிலத்தக் கெளறணும்டா, அப்பதான் வகுறு நிறையும்.**

   **விடை:** நிலத்தைக் கிளறவேணுமாட, அப்பொழுதுதான் வயிறு நிறையும்.

2. **அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**

   **விடை:** அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவிருக்க வேண்டியதுதானே.

3. **வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**

   **விடை:** வீட்டிற்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே கூட்டிக் கொண்டு போனார்.

4. **புள்ளைக்கு உடம்பு சரியில்லை, மூணு நாளா சிரமப்படுது.**

   **விடை:** குழந்தைக்கு உடம்பு சரியில்லை, மூன்று நாளாய்ச் சிரமப்படுகிறது.

5. **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.**

   **விடை:** இரவில் சிற்றப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.

**V. படிப்போம் பயன்படுத்துவோம் (நீதிமன்றம்)**

| | |
|---|---|
| Affidavit | - ஆணை உறுதி ஆவணம் |
| Allegation | - சாட்டுரை |
| Conviction | - தண்டனை |
| Jurisdication | - அதிகார எல்லை |
| Plaintiff | - வாதி |
| Sentence | - தண்டனை |

## உரைநடை

### 1. திரைமொழி

**I. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா, கலைகளின் சங்கமமா?**

**முன்னுரை**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா, கலைகளின் சங்கமமா என்பது குறித்து ஆராய்வோம்.

**திரைத்துறை**

நல்ல கதையின் பார்வையில் அமைந்த காட்சிகளைக்கொண்டு கலைநயத்தோடு பதிவுசெய்து திரையில் வெளியிடப்படுவது, திரைப்படம் ஆகும். கலைநிகழ்ச்சியோடு கூடிய பொழுதுபோக்கு நிகழ்வினையும் கடந்து பல அரிய சிந்தனைகளைப் பார்வையாளர்கள் முன் நிற்கும் ஓர் அமிசமாய் ஊடகம் திகழ்கின்றது.

தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர், நடிகை , இசையமைப்பாளர், பாடலாசிரியர், ஒலிப்பதிவாளர், கதையாசிரியர், கலை,நடன இயக்குநர், ஆடை வடிவமைப்பு, இயக்குநர், துணை இயக்குநர், படப்பிடிப்பு உரிமையாளர் எனப் பல குழு முயற்சியினால் திரைப்படம் உருவாகின்றது.

இயக்குநர் பார்வை நல்ல திரைக்கதையின் நிகழ்வினில் விழும். இயக்குநரின் வடிவமைப்பானது, அதன் கருத்தை நன்றாய்ப் புரிய வைத்துவிடும். திரைக்கதை உருவானதும், இயக்குநர், ஒளிப்பதிவாளர் போன்றோர் குழுவையும் வழிநடத்துவர். படம் தொடங்கும் முன் அது பற்றிய உரையாடல் நிகழ்வும் நடக்கும். உரையாடலில் ஒருவிதக் கருத்து அமைந்த பிறகுதான் படத்தை எப்படி உருவாக்கலாம் என்ற எண்ணம் மனதில் பிறக்கும்.

திரைக்கதையின் முக்கியக் காட்சிகளை இயக்குநர் தீர்மானிக்க, அவற்றைக் காட்சியாய் ஒளிப்பதிவாளர் பதிவு செய்யத் துணைபுரிய வேண்டும். திரைக்கதை எழுதுவதற்கான நேரம் குறித்து அறிதல் வேண்டும். ஒரு காட்சி தொடங்கும் முடியும் காலமும் பேச்சால் அன்று, காட்சியால் அறிய வேண்டும்.

திரைப்படமானது பொதுமக்களின் நோக்கில் பொழுதுபோக்கு. அந்தப் பொழுதுபோக்கானது எந்த எண்ணத்தில் சரியானது, தவறானது என்பதைப் பிரிக்கும் ஆற்றல் இயக்குநருக்கும், ஒளிப்பதிவாளருக்கும் தெரிந்துவிடும். அனுபவம் இருந்தால் படங்களைத் தொடர்ந்து உருவாக்க முடியும்.

நல்ல கதையினை உருவாக்கி, அதற்குத் தகுந்த திரைக்கதை, அழகான உரையாடலை எழுதினால், காட்சியின் தன்மைக்கு ஏற்ப அது மக்கள் மனதில் நிலைக்கும். இசையமைப்பாளர் மெட்டமைக்க, பாடல் வரிகளைப் பாடலாசிரியர் எழுத, திறமையான பின்னணிப்பாடகர் பாடல்களைப் பாடினால், காட்சியமைப்பு, நடன அமைப்பு ஆகியவற்றை உருவாக்கினால் , இறுதியில் ஒரு திரைப்படம் வெளியாகிவிடும். மக்கள் நடுவில் அரங்கேற்றத்தைக் காணமுடியும். வெற்றி, தோல்விகளை தீர்மானிப்பது இரசிகர்கள்தாம்.

**முடிவுரை**

ஆயிரக்கணக்கானோர் திரைப்படத்துறையினை தேர்ந்தெடுத்து அதன்மூலம் தம் வாழ்வுகளைத் தக்கவைக்கவும் முயற்சி செய்வது உண்மை. திரைப்படத்துறையில் ஆயிரக்கணக்கானோர் பணி செய்து ஒரு வழியில் தக்கவைத்துக்கொள்ள் அறப்போராட்டமே உண்டாகிறது. இறுதியில், அவர்களுடைய மனத்தில் மிகுந்த உற்சாகமே தோன்றுகிறது.

II. **பலவுள் தெரிவு.**

1. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ. அண்மைக் காட்சித்துணிப்பு ஆ. சேய்மைக் காட்சித்துணிப்பு

இ. நடுக் காட்சித்துணிப்பு **ஈ. காட்சி மறைவு**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

2. முதல் திரைப்படம் ____________ சகோதரர்கள்மூலம் பிறந்தது.

**அ. லூமியர்** ஆ. காமியர் இ. தூமியர் ஈ. லூயிஸ்

3. கிராண்ட் கபே விடுதியில் திரையிட்ட முதல் துண்டுப்படம் ___________

அ. பேருந்தின் வருகை ஆ. விமானத்தின் வருகை

**இ. இரயிலின் வருகை** ஈ. காரின் வருகை

4. அசையும் உருவங்களைப் படம் பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர் __________

அ. கலிலியோ **ஆ. தாமஸ் ஆல்வா எடிசன்**

இ. லூமியர் ஈ. ரட் சகோதரர்கள்

5. லூமியர் சகோதர்கள் ___________ கருவியைக் கண்டுபிடித்தனர்.

**அ. திரையிடும் கருவி** ஆ. படப்பிடிப்புக்கருவி

இ. ஒலிப்பதிவுக்கருவி ஈ. ஒளிநாடா

6. சாமிக்கண்ணு ___________ ரூபாய்க்கு பிரெஞ்சுக்காரர் டுபான் என்பவரிடம் புரொஜக்டர் மற்றும் சில துண்டுப் படங்களை வாங்கினார்.

அ. 2000 ஆ. 2300 இ. 2400 **ஈ. 2500**

7. மாடர்ன் டைம்ஸ் திரைப்படம் ____________ ஆண்டு வெளிவந்தது.

அ. 1934 **ஆ. 1936** இ. 1935 ஈ. 1937

8. சார்லி சாப்ளினுக்கு வழங்கப்பட்ட விருது _________

**அ. ஆஸ்கார் விருது** ஆ. பத்மபூஷன் விருது

இ. கிராமிய விருது ஈ. தேசிய விருது

9. சார்லி சாப்ளின் ___________ ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டார்.

அ. 1942 ஆ. 1932 **இ. 1952** ஈ. 1972

10. ஹெக்கோடு என்னும் சிற்றூர் __________ மாநிலத்தில் உள்ளது.

அ. ஆந்திரா **ஆ. கர்நாடகா**

இ. கேரளா ஈ. தமிழ்நாடு

11. முதல் திரையிடல் __________ ஆண்டு நடைபெற்றது.

**அ. 1895** ஆ. 1995 இ. 1795 ஈ. 1695

## 2. கவிதைகள்

**ஆசியரைப்பற்றி**

நகுலனது இயற்பெயர் டி.கே.துரைசாமி; கும்பகோணத்தில் பிறந்தவர்; கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் வாழ்ந்தவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றார்; சிற்றிதழ்களில் தீவிரமாய்க் கவிதைகளை எழுதியவர். இவர் எழுதிய கவிதைத் தொகுதிகள்: மூன்று, ஐந்து, கண்ணாடியாகும் கண்கள், நாய்கள், வாக்குமூலம், சுருதி , ரோகிகள், மஞ்சள்நிறப் பூனை, கோட் ஸ்டாண்ட்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

கவிதைகள். படைத்துள்ள புதினங்களின் எண்ணிக்கை 7. பாரதியார் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**III. பலவுள் தெரிவு**

1. ஆர்ப்பரிக்கும் கடல்
   அதன் அடித்தளம்
   மௌனம் – மகாமௌனம்- அடிகள் புலப்படுத்துவது
   அ. இரைச்சல்
   ஆ. குறைகுடம் கூத்தாடும்
   இ. நிறைகுடம் நீர்த்தழும்பல் இல்
   **ஈ. புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது**
2. சிதனைகளைச் செறிவாய் – குறிப்பாய் முராஅய் – அழகிய தொடராய்த் தருவதற்கு ஏற்ற இலக்கிய வடிவமாய் இருந்தது _______
   **அ. புதுக்கவிதை** ஆ. மரபுக்கவிதை
   இ. ஐக்கூ கவிதை ஈ. லிமரைக்கூ கவிதை
3. இருப்பதற்கென்றுதான் வருகிறோம்; ___________
   அ. இருக்கிறோம் **ஆ. இல்லாமல் போகிறோம்**
   இ, தொலைந்து போகிறோம் ஈ. காணாமல் போகிறோம்
4. மூச்சு நின்றுவிட்டால் _________ அடங்கும்.
   அ. ஏச்சும் ஆ. கூச்சம் **இ. பேச்சும்** ஈ. மோட்சம்
5. ஆர்ப்பரிக்கும் கடலின் அடித்தளத்தில் ____________
   அ. பேரோசை ஆ. பெருங்கூச்சல்
   இ. ஓய்வு **ஈ. மௌனம்**

## 3. சிலப்பதிகாரம்

**இளங்கோவடிகள்:** இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன் தம்பி என்று அறியப்படுகிறார். சிலப்பதிகாரத்தின் வரந்தரு காதையில் தம்மைச் செங்குட்டுவன் தம்பி என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இளவரசராய் இருந்து துறவினை மேற்கொண்டவர் என்றும் அறியப்படுகிறார். சமண சமயத்தைச் சேர்ந்தவர். எனினும், வைணவத் திருமாலுக்கும் சைவக் கொற்றவைக்கும் சிறப்பிடம் தந்து காப்பியத்தைப் படைத்துள்ளார்.

**சிலப்பதிகாரம்** – சிலம்பு + அதிகாரம். சிலம்பின் காரணமாய் விளைந்த கதை ஆதலால், சிலப்பதிகாரம் எனப்படுகிறது. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எனப் போற்றப்படும் சிறப்புடையது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. முத்தமிழ்காப்பியம், நாடகக்காப்பியம், புரட்சிக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் எனப் பலவாறாய்ப் போற்றப்படுகிறது. புகார்க்காண்டம், மதுரைக் கண்டம், வஞ்சிக்கண்டம் எனும் முப்பெரும் பிரிவின்கீழ், முப்பது காதைகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகமாய்ப் போற்றப்படுகிறது.

**I. இலக்கணக்குறிப்பு எழுதுக.**

www.Padasalai.Net

**தொல்நெறி** - பண்புத்தொகை

**ஆடலும் பாடலும்** – எண்ணும்மை

**வழிபடு தலைக்கோல்** – வினைத்தொகை

**அரைசு** – அரசு என்பதன் இடைப்போலி.

II. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**தொழுதனர்** – தொழு + த் +அன்+அர்

தொழு – பகுதி; த் –இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அர் – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

III. **பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

தலைக்கோல் – தலை + கோல்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – தலைக்கோல்.

I. **பலவுள் தெரிவு**

1. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் _______ தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.

1. மாதவி ஏழு ஆண்டுகள்வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ. 1 சரி, 2 தவறு ஆ. 1 தவறு, 2 சரி

இ. 1 தவறு, 2 தவறு **ஈ. 1 சரி, 2 சரி**

2. பொருத்துக.

| | |
|---|---|
| அ. ஆமந்திரிகை | 1. பட்டத்து யானை |
| ஆ. அரசு உவா | 2. மூங்கில் |
| இ. கழஞ்சு | 3. இடக்கை வாத்தியம் |
| ஈ. கழை | 4. எடை அளவு |

**அ. 3,1, 4, 2** ஆ. 4, 2, 1, 3 ஈ. 1, 2, 3, 4 ஈ. 4, 3, 2, 1

3. பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைத் தனித்துக் காட்டுவது _________

அ. அறிவு ஆ. வாழ்க்கை இ. பொருள் **ஈ. கலை**

4. நடனம் கற்றவர்கள் பலர் முன்னிலையில் ஆடத் தொடங்குவது __________

அ. தொடக்க நடனம் ஆ. நாட்டிய நடனம்

**இ. அரங்கேற்றம்** ஈ. அரங்காட்டம்

5. ஒரு சமூகத்தின் பண்பாடு, வரலாறு, அழகியல் போன்ற கூறுகளை வெளிப்படுத்துவனவாய் அமைவது __________

**அ. கலை** ஆ. வாழ்வியல் இ. போராட்டம் ஈ. தத்துவம்

6. அரங்கக்கோல் _________கைவிரல் அளவு கொண்டது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

அ. இருபத்து மூன்று **ஆ. இருபத்து நான்கு**

இ. இருபத்தைந்து ஈ. இருபத்தாறு

7. மேல்நிலை மாடத்தில் ஓவியங்களாய் வரைந்து வைக்கப்பட்டவை _________

அ. அழகிகள் ஆ. தேவர்கள்

**இ. ஐம்பூதங்கள்** ஈ.அசுரர்கள்

8. தோற்றோடிய மன்னர்களின் வெண்கொற்றக் குடையின் காம்பில் செய்யப்படுவது _______

அ. தராசுக்கோல் **ஆ. தலைக்கோல்**

இ. அளவுகோல் ஈ. கைக்கோல்

9. இந்திரன் மகன் யார்?

அ. குபேரன் ஆ. மந்தகன்

இ. அனுமன் **ஈ. சயந்தன்**

10. அரங்கில் மாதவி எக்காலை முதலில் வைத்து ஏறினாள்?

**அ. வலக்கால்** ஆ. இடக்கால்

இ. இரண்டுகால் ஈ. எதுவுமில்லை

## 4. மெய்ப்பாட்டியல்

**தொல்காப்பியர்**

தொல்காப்பியரை, 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன்' என்று தமிழ்ச்சான்றோர் போற்றுவர். தொல்காப்பியன் என்பது அவர் தமக்கு இட்டுக்கொண்ட புனைபெயராய் இருக்கலாம் என்பது அறிஞர்கள் கருத்து. இவர் வடமொழியையும் நன்கு கற்றவர் என்பதை, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்னும் சிறப்புப்பாயிரத்தின் வழியாய் அறிய முடிகிறது. அகத்தியரின் பன்னிருமாணவர்களுள் தொல்காப்பியம் தலைமாணாக்கர் என்பது வாய்மொழியாய் வழங்கப்பட்டு வரும் கருத்தாகும்.

**தொல்காப்பியம்**

தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல். பழந்தமிழரின் நாகரிகச் செம்மையினைத் தெள்ளத்தெளிய விளக்கும் ஒப்பற்ற பெருநூல். தமிழ்மொழியின் அமைப்பை, விதிகளாக்கி விளக்குவதோடு தமிழ்க்கவிதையியலின் நுட்பங்களையும் பேசுகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் கவிதைகளுக்கான பொருண்மை, உறுப்புகள், உத்திகள், அழகு ஆகியவற்றைச் சிறப்புற எடுத்தியம்புகிறது.

இந்நூல் முழுமைக்கும் இளம்பூரணர் உரை எழுதியுள்ளார். எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் உரையும் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையும் சிறப்பானதாகச் சொல்லப்படுவது உண்டு.

1. **இலக்கணக்குறிப்பு வரைக.**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை – தொழிற்பெயர்கள்

2. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**நகை** – நகு + ஐ


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**நகு-** பகுதி (நகை ஆனது விகாரம்); **ஐ-** தொழிற்பெயர் விகுதி

**மருட்கை –** மருள்+கை

**மருள்-** பகுதி (ள், ட் ஆனது விகாரம்); **கை –** தொழிற்பெயர் விகுதி.

**வெகுளி –** வெகுள் + இ

**வெகுள் –** பகுதி; **இ –** தொழிற்பெயர் விகுதி.

3. **பலவுள் தெரிவு**

1. பெருமிதம் – மெய்ப்பாட்டினை வெளிப்படுத்தும் உணர்வுக் களங்களைத் தேர்ந்தெடுக்க.

   அ. எள்ளல், இளமை, பேதைமை, கொடை

   **ஆ. கல்வி, தறுகண், இசைமை, கொடை**

   இ, புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்

   ஈ. செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

2. மெய்ப்பாடு என்பதைக் குறிப்பது _________

   அ. உடல் ஆ. உயிர் **இ. சுவை** ஈ. வசை

3. 'சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்' என்பவர் _________

   அ. மாணவர் ஆ. ஆசிரியர்

   **இ. பேராசிரியர்** ஈ. எவருமிலர்

4. இலக்கியத்தின் வடிவமும் பொருளும் சார்ந்த மெய்ப்பாடு மிகச்சிறந்த _________

   அ. அழகியல் உணர்வு **ஆ. அழகியல் கோட்பாடு**

   இ. அழகியல் நுட்பம் ஈ. அழகியல் தத்துவம்

5. இளிவரல் என்பது ________

   **அ. சிறுமை** ஆ.பெருமை இ, வறுமை ஈ. பழமை

6. வெகுளி என்பது _________

   அ. மனம் ஆ. குணம் இ. பணம் **ஈ. சினம்**

7. தொல்காப்பியம் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் ________

   அ. இலக்கிய நூல் **ஆ. இலக்கண நூல்**

   இ. காப்பிய நூல் ஈ. சிற்றிலக்கிய நூல்

8. ஒல்காப் பெரும்புகழ் _________

   அ. கம்பன் ஆ. ஒட்டக்கூத்தர்

   **இ. தொல்காப்பியன்** ஈ. பாவேந்தன்

9. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் _________

   அ. பேராசிரியர் ஆ. நச்சினார்க்கினியர்

   இ. சேனாவரையர் **ஈ. இளம்பூரணர்**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

### 5. நடிகர் திலகம்

### கலைஞர் : கலைமாமணி சம்பந்தத் தம்பிரான்.

**முன்னுரை**

கூத்து என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்களிலேயே காணக்கிடைக்கிறது. கூத்து என்பதைக் கதை தழுவிய ஆட்டம் எனலாம். இன்றைக்குத் தமிழகத்தின் வடமாவட்டப் பகுதிகளில் நிகழ்த்தப்படும் கலைவடிவமாய்த் தெருக்கூத்து விளங்குகிறது. தெருக்கூத்துக்கலையில் தனித்துவத்துடன் ஈடுபட்டு வரும் கலைஞர், தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற சம்பந்தத் தம்பிரான் அவர்களைச் சந்தித்த அனுபவப்பதிவே இக்கட்டுரை.

**புரிசை என்னும் ஊர்**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசிக்கும் செய்யாறுக்கும் இடையே நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள சிறு கிராமமே புரிசை ஆகும். அக்கிராமத்தில் ஏறத்தாழ நான்கு தலைமுறைகளாய்த் தெருக்கூத்து ஆடிவரும் குடும்பத்தைச் சேர்ந்தவர், சம்பந்தத் தம்பிரான்.

**கற்றது எப்படி?**

தம்பிரானின் முன்னோர்கள், பொம்மலாட்டத்தைப் பார்த்து, அதிலிருந்து அத்வேகம் பெற்றுத் தெருக்கூத்தை உருவாக்கினார்கள் என்றார். புராண, இதிகாசக் கதைகளுக்குத் தக்கவாறு பாடல்களை எழுதி, இசைத்துத் தெருக்கூத்தைத் தங்களது முன்னோர்கள் உருவாக்கியதாய்க் குறிப்பிட்டார்.

**32 கட்டுகள்**

தெருக்கூத்தில் வேடமிட்டு நடிக்கும் பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்பப் பல வகையான ஆபரணங்கள் அணியும் வழக்கம் இருக்கிறது. கிரீடம், காதுப்பதக்கம், நெற்றிப் பட்டம், மார்புப்பதக்கம், டவுறு, காற்சலங்கை உட்பட 32 ஆபரணங்களை அணிகிறார்கள். இந்த ஆடை ஆபரணங்கள் பாத்திரங்களின் தன்மையினை நன்றாய் விளக்கிக் காட்டும் தன்மையில் அமைகின்றன. ஆபரணங்கள் முன்முருங்கை என்னும் மரத்தினால் செய்யப்பட்டு, அவற்றில் கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்டு, வண்ணங்கள் பூசப்பட்டுப் புதுமெருகு பெறுகின்றன.

**வாழ்நிலை**

தெருக்கூத்துக் கலைஞர்கள் இன்றைக்கு நலிந்த நிலையில் இருக்கிறார்கள் என்கிறார், சம்பந்தத் தம்பிரான். முழுநேரமாய்த் தெருக்கூத்தில் ஈடுபடும் அளவிற்கு இத்தொழிலில் வருமானம் இருப்பதில்லை. எனவே, கூத்தாடும் கூத்தர்கள், விவசாயம் போன்ற துணைத்தொழில்களையும் நம்பியிருக்கிறார்கள் என்கிறார், அவர்.

**ஈடுபாடும் உற்சாகமும்**

தெருக்கூத்துக் கலையைப்பற்றி உரையாடும்போது கலைமாமணி சம்பந்தத் தம்பிரானின் முகத்தில் பொலிவு கூடுகிறது. தங்கள் கூத்து அனுபவங்களை மிகவும் சுவையாய்ச் சொல்லி உரையாடுகிறார் அவர். பரம்பரைபரம்பரையாய் இக்கலைத்தொழிலில் ஈடுபட்டு வருவதில் அவருக்குப் பெருமிதமும் இருக்கிறது. அர்ப்பணிப்பு உணர்வோடு இக்கலையில் ஈடுபடுகிறார் என்பதை அவர் உரையாடல் வெளிப்படுத்துகிறது.

**வருத்தமும் ஏக்கமும்**

தெருக்கூத்தைப் பார்க்க வரும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்னும் வருத்தம் கலைமாமணி சம்பந்தத் தம்பிரானுக்கு இருக்கிறது. இளைஞர்கள் தெருக்கூத்துக் கலைஞர்களாகவும் பார்வையாளர்களாகவும் வர வேண்டும் என்னும் ஏக்கத்தை அவர் உரையாடல் வெளிப்படுத்துகிறது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**முடிவுரை**

தெருக்கூத்து என்பது தமிழகத்தின் மரபுக்கலைகளுள் தனித்துவம் மிக்கது. கேரளாவின் கதகளி, கருநாடகத்தின் யட்சகானம் ஆகியவற்றோடு இணையாய்க் கருதத்தக்கது. தமிழினத்தின் அடையாளமாய்த் திகழும் தெருக்கூத்தையும், கலைமாமணி சம்பந்தத் தம்பிரான் போன்ற கலைமேதைகளையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

## 6. காப்பிய இலக்கணம்

1. **குறுவினா**

1. **காப்பியம் என்றால் என்ன?**

ஒரு மொழியின் வளத்தைக் காப்பியங்களே புலப்படுத்தும் என்பர். எளிய நடை, இனிய கதை, அழகியல், கறொஅனை ஆகியவை ஒருசேர அமைந்த இலக்கிய வடிவமே காப்பியமாகும்.

2. **காப்பியங்கள் எத்தகைய தன்மை கொண்டவை?**

காப்பியங்கள் என்பவை நீண்ட கதைப்போக்கு உடையவை.

3. **காப்பியத்தின் பெயர்க்காரணமும் சொல்லாட்சியும் குறித்து எழுதுக.**

காப்பியத்தை ஆங்கிலத்தில் EPIC என்பர். இது Epos என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. Epos என்பதற்குச் சொல் அல்லது பாடல் என்பது பொருள். இது வடமொழியில் காவியம் என வழங்கப்படுகிறது. காப்பியம் என்னும் சொல்லைக் காப்பு = இயம் எனப் பிரித்து, மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது என்றும், மொழியைச் சிதையாது காப்பது என்றும் காரணம் கூறுவர்.

4. **காப்பியங்கள் எவ்வகைச் சிற்றுறுப்புகளைக் கொண்டவை?**

| காப்பியங்கள் | சிற்றுறுப்புகள் |
|---|---|
| சிலப்பதிகாரம், மணிமேகலை | - காதை |
| சூளாமணி, பாரதம் | - சருக்கம் |
| சீவகசிந்தாமணி | - இலம்பகம் |
| கந்தபுராணம் , கம்பராமாயணம் | - படலம் |
| சிலப்பதிகாரம், கம்பராமாயணம் | - காண்டம் |

5. **தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம் யாது?**

வடமொழியில் காவ்யதரிசம் என்னும் நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல் தண்டியலங்காரமாகும். இந்நூலில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று இரு வகையாய்ப் பிரிக்கப்பட்டுக் காப்பிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. காப்பியங்கள் ஒரே வகைச் செய்யுளாலும் , பலவகைச் செய்யுள்களாலும் அமையும்.

6. **சிறுகாப்பியம் என்றால் என்ன?**

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

7. **தண்டியலங்காரம் குறிப்பிடும் செய்யுள் வகையினைக் குறிப்பிடுக.**

முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை ஆகிய செய்யுள் வகைகளைக் கூறுகிறது.

8. **தொடர்நிலை என்றால் என்ன?**

தொடர்நிலை ஒரு பாடலையும் மற்றொரு பாடலையும் சொல்லாமலும் பொருளாலும் தொடர்பு ஏற்படுத்தும் செய்யுள் வகையைக் குறிக்கும். இது பொருள் தொடர்நிலை, சொல் தொடர்நிலை என இருவகைப்படும்.

9. **காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

காப்பியம் இருவகைப்படும். அவை பெருங்காப்பியம், சிறுகாப்பியம்.

10. **காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?**

பொருட்டொடர் நிலைச்செய்யுள், கதைச்செய்யுள், அகலக்கை, தொடர்நடைச்செய்யுள், விருத்தச்செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள், மகாகாவியம்.

11. **காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.**

காப்பியச் சிற்றுறுப்புகள் காதை, சருக்கம், இலம்பகம், படலம் முதலானவை ஆகும்.

2. **இலக்கணத் தேர்ச்சிகொள்.**

1. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ. சிவஞானமுனிவர் **ஆ. மயிலைநாதர்**

இ. ஆறுமுக நாவலர் ஈ. இளம்பூரணர்

2. கூற்று1:காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து, மரபைக் காப்பது, இயம்புவது வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2: ஐம்பெருங்காப்பியங்களுள் இன்று நீல்கேசி.

**அ. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு** ஆ. கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ. இரண்டும் சரி ஈ. இரண்டும் தவறு

3. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

| | |
|---|---|
| அ. காதை | 1. கந்தபுராணம் |
| ஆ. சருக்கம் | 2. சீவகசிந்தாமணி |
| இ. இலம்பகம் | 3. சூளாமணி |
| ஈ, படலம் | 4. சிலப்பதிகாரம் |

அ. 4, 3, 2, 1 ஆ. 3, 4, 1, 2 இ. 3, 4, 2, 1 **ஈ. 4, 3, 1, 2**

4. தவறான இணையைத் தேர்க.

| பாவகை | இலக்கியம் |
|---|---|
| **அ. விருத்தப்பா** | **- நாலடியார்** |
| ஆ. ஆசிரியப்பா | - அகநானூறு |
| இ. கலிவெண்பா | - தூது |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

ஈ. குறள்வெண்பா - திருக்குறள்

3. **தமிழாக்கம் தருக.**

Popular as the 'Cultural Capital' of India. Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of an well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deites in the paintings are festooned with glass pieces, pearls, semi precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up, to human figures, animals, floral motifs and birds as muses.

**கலைகளின் தலைநகரம் இந்தியாவாகும்.**

தமிழ்நாடு பிரசித்தி பெற்றது அங்கு உள்ள கோவில்கள், கட்டடக்கலை, நவரத்தினக்கற்கள் ஆகியவற்றினால்தாம். இந்த மாநிலத்தில் உயர்ந்தவையாயும், முக்கியத்துவம் வாய்ந்தவையாவும் எல்லோராலும் சிறப்பாய் அறியப்பட்டவையாயும் உள்ள தஞ்சாவூர் ஓவியங்களே ஆகும். இவ்வோவியங்கள் சோழர்காலத்தில் தான் வெகுவாய் தழைத்தோங்கின.

அந்தக் கலாச்சார ஓவியங்கள் அனைத்தும் தெய்வங்களின் ஓவியங்களாய் இருந்ததால் அப்பகுதி புனிதமாய்க் கருதப்பட்டது. ஓவியங்கள் கண்ணாடித் துகள்களால் செய்யப்பட்டவை; மேலும், தங்கத்தாலும் பல நிறங்கள் அடங்கிய விலை மதிப்பற்ற கற்களாலும் உருவானவை. ஆனால், தற்போதைய நவீன காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் தெய்வங்களைப்பற்றி மட்டும் குறிப்பிடாமல் மனிதர்கள், விலங்குகள், மலர்கள், பறவைகள், மையக் கருத்துகள் போன்றவற்றையும் குறிப்பிடுகின்றன.

4. **கீழ்க்காணும் தொடர்களில், அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

**(எ.கா) :** கபிலன் திறமையானவர் என்று (குமரன்) தெரியும்.

கபிலன் திறமையானவர் என்று குமரனுக்குத் தெரியும்.

1. **நேற்றுமுதல் _______(அணை) நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.**

   நேற்றுமுதல் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

2. **உங்களுக்கு ___________(யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.**

   உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்.

3. **முருகன் _______(வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.**

   முருகன் வேகமாய்ச் சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

4. **நம்முடைய _______(தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.**

   நம்முடைய தேவையின் அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

5. **பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

(எ.கா) : களம், கலம்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்குக் கலத்தில் நீர் தரப்பட்டது.

**வலம் , வளம்.**

ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

1. **புல் – புள்**

   புள் (பறவை) கூடு கட்டப் புல்லினைப் பயன்படுத்தும்.

2. **உழை – உளை**

   வயலில் இறங்கி உளை (தலை) வேர்க்க மனிதன் உழைக்கின்றான்.

3. **கான் – காண்**

   கானிற்குச் சென்று இயற்கையைக் காண்கின்றனர்.

4. **ஊண் – ஊன்**

   மக்கள் தம் ஊணாக ஊனை(இறைச்சி) உண்ணுகின்றனர்.

5. **தின்மை – திண்மை**

   மனிதர்களுள் சிலர் திண்மையுடன் (மனத்தைரியத்துடன்) தின்மை (தீமை) செய்கின்றனர்.

6. **இலக்கிய நயம் பாராட்டுக.**

அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ?

- பாரதிதாசன்

**திரண்ட கருத்து**

அந்தியிருளில் உலகம் இருக்கின்றது. அந்த நிலையில் வானையும் திசையையும் கண்டேன். காரிருள் சிரித்ததில்லை. ஆனால், ஒளி முத்தாய் நிலவு தோன்றுகிறது. குளிரையும் ஒளியையும் மக்களுக்கு ஊட்டுகின்றது. வாழ்க்கையை வானில் தோன்றும் வண்ணத்துடன் ஒப்பிட்டுள்ளார்.

**பொருள் நயம்**

அந்தியிருளால் உலகம் கருகுகின்றது. சிரிப்பை ஒளிமுத்து நிலவு என்றும், குளிரும் ஒளியும் தருவதுடன் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வண்ணம் என்கிறார்.

**அணிநயம்**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

உவமைகளைக் கையாண்டுள்ளார். பெருஞ்சிரிப்பின் ஒளி முத்து நிலவைக் குறிப்பிடுகின்றார். எழில் வாழ்க்கையை வானத்தில் தோன்றும் வண்ணத்துடன் ஒப்பிட்டுள்ளார்.

**எதுகை, மோனை நயம்**

அந்தி, பிந்தி; சிந்தா, இந்தா என்று எதுகை நயத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

அந்தி – அவ்வாறு; பிந்தி –பெருஞ்; சிந்தா – சேகரித்து என்று மோனை நயத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

இப்பாடல் இலக்கிய நயங்கள் அமைந்து படிப்பதற்கு இன்பம் தருகின்றது.

7. **கீழ்க்காணும் நான்கு சொற்களைக்கொண்டு தொடர் எழுதுக.**

**(எ.கா):** வானம், பற, நிலவு, தொடு – வானத்தில் பறப்போம்;
- பறந்து நிலவைத் தொடுவோம்.

1. சருகு, விழு, மண், அலை - சருகு கீழே விழுந்ததால் மண் அலைபோல் காணப்பட்டது.
2. விண்மீன், ஒளிர், எரி, விழு - விண்மீன் ஒளிர்ந்து எரிந்து விழுந்தது.
3. குதிரை, வேகம், ஓடு, தாவு - குதிரை வேகமாய் ஓடித் தாவியது.
4. குழந்தை, நட, தளிர்நடை, விழு - குழந்தை நடக்க நினைத்துத் தளிர்நடை நடந்து விழுந்தது.
5. திரை, காண், கைதட்டல், மக்கள் - திரைக்காட்சியைக் காண்கின்ற பொழுது கைதட்டல் மக்களிடம் எழுந்தது.

8. **படிப்போம் , பயன்படுத்துவோம் (திரைத்துறை)**

| | |
|---|---|
| Artist | - கவின்கலைஞர் |
| Animation | - இயங்குபடம் |
| Newsreel | - செய்திப்படம் |
| Cinematography | - ஒளிப்பதிவு |
| Sound Effect | - ஒலி விளைவு |
| Multiplex Complex | - ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம் |

## 7. திருக்குறள்

### 1. அறிவு உடைமை

### 1. அறிவுடைமையின் சிறப்பு

**அற்றம் –** தொழிற்பெயர்

**அழிக்கலாகா அரண் –** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**செறுவார்க்கும் –** இறந்தது தழுவிய எச்ச உம்மை; உயர்வு சிறப்புமாம்.

**2. மனத்தை நல்வழிப்படுத்துவதே அறிவு**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**ஓரீஇ-** சொல்லிசை அளபெடை

**உய்ப்பது –** வினையாலணையும் பெயர்

சென் இடத்**தால்-** உருபு மயக்கம். ஏழன் உருபு (கண்) நிற்க வேண்டிய இடத்தில் மூன்றன் உருபு(ஆல்) நின்றது.

செல்**விடா-** எதிர்மறை வினையெச்சம்

தீது – ஒன்றன்பால் குறிப்பு வினையாலணையும் பெயர்

**3. உண்மை உணர்வதே உயர்ந்த அறிவு**

**யார்யார் –** அடுக்குத்தொடர்

கேட்பி**னும்-** 'உம்'மை உயர்வு சிறப்பும்மை

**யார் –** வினாவடியாய்ப் பிறந்த பெயர்.

**4. உலகத்தோடு ஒத்து வாழ்வதே அறிவு**

**எவ்வது, அவ்வது –** ஒன்றன்பால் குறிப்பு வினையாலனையும் பெயர்கள்

எவ்வது **உறைவது –** எதிர்கால வினையாலணையும் பெயர்.

அவ்வது **உறைவது –** எதிர்காலத் தொழிற்பெயர்.

**5. வருமுன் காத்தலே அறிவுடைமையாம்**

1. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

   **அதிர –** வினையெச்சம்

2. **பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

   **உய்ப்பது-** உய்+ப்+ப்+அ+து.

   **உய்-** பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; அ- சாரியை; து- படக்கை ஒன்றன்பால் வினைமுற்று.

   **காண்பது –** காண் +ப்+அ+து

   **காண்-** பகுதி; ப்- சந்தி; அ – சாரியை; து – படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

   **உறைவது –** உறை+வ்+அ+து.

   **உறை-** பகுதி; வ்- உடம்படுமெய் சந்தி; அ- சாரியை; து- படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

**2. சிற்றினம் சேராமை**

**1. சேர்ந்த இனத்தைக் கொண்டு ஒருவனை இன்னான் என்று அறிக**

**மனத்தான் , இனத்தான் –** ஆன் உருபுகள் இரண்டும் கருவிப்பொருளில் வந்தன.

**மனத்தானாம் –** 'ஆகும்' என்பதன் தொகுத்தல் விகாரம்.

**உணர்ச்சி –** தொழிற்பெயர்

**2. நல்லினத்தால் நலனும் சிற்றினத்தால் அல்லலும் வினையும்**

**அல்லற் படுப்பதூஉம் –** இன்னிடை அளபெடை.

www.Padasalai.Net

## 3. வினைத்திட்பம்

### 1. வினைத்திட்பம் என்பது மனத்திட்டம்

**மனத்திட்பம்**(மனத்தி**னது** திட்பம்) – ஆறாம் வேற்றுமைத்தொகை

**பிற** – பலவின்பால் வினைமுற்று.

**வினைத்திட்பம்** (வினைக்**குவேண்டி**ய திட்பம்) – நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; (வினை செய்த**லின்கண் திட்பம்)**- ஏழாம் வேற்றுமைத்தொகை

### 2. சொல்லியவண்ணம் செய்தலின் சிறப்பு

**சொல்லுதல், செயல்** – தொழிற்பெயர்கள்

யார்க்**கும்** – முற்றும்மை

**சொல்லிய** – பெயரெச்சம்

யார்க்கும் **எளிய,** சொல்லியவண்ணம் செயல் **அரிய** – பலவின்பால் குறிப்பு வினைமுற்றுகள்.

### 3. வினைத்திட்பம் உடையார் எய்தும் பயன்

**எண்ணிய** – வினையாலணையும் பெயர்.

**எண்ணியாங்கு** (எண்ணிய**வா**ங்கு) – தொகுத்தல் விகாரம்

**எய்துப** – பலர்பால் வினைமுற்று.

### 4. உருவுகண்டு இகழ்தல் கூடாது

1. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

   **கண்டு** – வினையெச்சம்

   **எள்ளாமை** – தொழிற்பெயர்

   **உடைத்து** – குறிப்பு வினைமுற்று

   **உருள்தேர்** - வினைத்தொகை

2. **பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

   **வினைத்திட்பம்-** வினை +திட்பம்

   'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்றுயிர் (னை – ன்+ஐ) முன்வருமொழி முதலில் வல்லினம் (தி – த் +இ) மிக்கு (த்) 'வினை +த்+திட்பம்- வினைத்திட்பம்' என்றாயிற்று.

   **பெருந்தேர்** – பெருமை + தேர்.

   'ஈறுபோதல்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று 'மை' விகுதிகெட்டு 'பெரு+தேர்' என நின்றது. பின், 'இனமிகல்' என்னும் விதிப்படி, வருமொழி முதல் வல்லினத்திற்கு (தே – த்+ஏ) இனமான 'ந'கர மெல்லினமெய் தோன்றிப் 'பெரு+ந்+தேர்- பெருந்தேர்' என்றானது.

3. **பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

   **எய்துப** – எய்து+ப்+அ.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**எய்து** –பகுதி; ப்-எதிர்கால இடைநிலை; அ- பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதி.

**4. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக**

**முன்னுரை**

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று புகழுவார், மகாகவி பாரதி. திருவள்ளுவன் ஈந்த திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமன்று; அது வாழ்வியல் நூலாகவும் திகழ்கிறது. உலகின் எந்த மூலையிலும் வசிக்கும் மனிதன், சமுதாயமாய் ஒன்றிணைந்து வாழ்வதற்கான விதிகளை, நியதிகளை நெறிப்பட வகுத்து இயம்புகிறது, திருக்குறள். அகவாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும், நியதிகளை நெறிப்பட வகுத்து இயம்புகிறது, திருக்குறள். அகவாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும், இல்லறத்தின் இயல்புகள் எவ்வாறு இருக்க வேண்டும், ஆணும் பெண்ணும் இணைந்த காதல் வாழ்க்கை எவ்வாறு நெறிப்பட அமைய வேண்டும் என்பனவற்றை நுணுகி ஆய்ந்து அறிவிக்கும் உணர்வு நூல், திருக்குறள்.

இறைவனின் திருப்பணியாளர்கள் என்று தங்களை அறிவித்துக்கொள்ளும் துறவிகளின் வாழ்க்கை நெறிகளையும், இல்லறத்தாருக்கும் சமுதாயத்திற்கும் அவர்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதையும் வள்ளுவர் நெறி வகுத்துச் சொல்லுகிறார்.

அரசு, அரசன், ஆள்வோர் கடமைகளும் பொறுப்புகளும் யாவை, அறத்தின்படி அரசு நடத்துவதன் அவசியம் என்ன என்னும் வினாக்களுக்கு தமது இலக்கியத்தைப் படைத்துள்ளார், வள்ளுவர்.

ஆகவே, உலகப்பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள், ஒரு வாழ்வியல் இலக்கியமாகவும் ஒளி வீசுகிறது எனலாம்.

**முதன்மைப்பயன்**

'மனிதன் மகத்தானவன்' என்பர். உலகிலுள்ள பல்லாயிரக்கணக்கான உயிரிகளுள் மனிதன் மகத்தானவனும் தனித்துவம் மிக்கவனும் ஆகிறான். அத்தகைய மனிதனின் வாழ்க்கையைப் பகுத்து, அறம், பொருட், இன்பம் ஆகிய முதன்மைப்பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது.

**வாழ்வியல் கருத்தாக்கங்கள்**

தனி மனித நிலை, குடும்பநிலை, உறவுநிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்றும் பல நிலைகளில் மனிதர்களிடம் இருக்க வேண்டிய பண்புகள், ஆற்றவேண்டிய பணிகள், அறங்கள் ஆகியவற்றைத் தொகுத்துரைப்பதன் மூலமாய் வாழ்வியல் கருத்தாக்கங்களை முறைப்படுத்தி வழங்கும் இலக்கியமாகவும் திருக்குறள் திகழ்கிறது.

**மரபுகளை மாற்றுதல்**

கள்ளுண்டு களித்தலையும், புலால் உண்ணுதலையும், பிறன்மனை நயத்தலையும் சமூகத்தின் பண்புகளாய் ஏற்று வாழ்ந்த காலகட்டத்திற்குப் பிறகு திருக்குறள் தோன்றுகிறது. அது சமுதாயத்தை ஒருங்கிணைக்க வேண்டி, மேற்குறித்தவற்றைப் புறந்தள்ளச் சொல்லுகிறது. 'உண்ணற்க கள்ளை' என்றும், 'நஞ்சுண்பார் கள் உண்பார்' என்றும் சுட்டிக்காட்டுகிறது.

உயிர்களின்மீதுள்ள அன்பினை வெளிப்படுத்தி, 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்று புலால் மறுத்தலின் மேன்மையை எடுத்துரைக்கிறது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**அறநெறிப்பட்ட வாழ்க்கை**

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் என்று வலியுறுத்துகிறது, திருக்குறள். மனமாசின்றி வாழும் வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக்காட்டும் திருக்குறள், அதுவே அறங்களுள் முதன்மையும் முழுமையும் ஆகும் என்கிறது. 'மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்' என்று அறத்தின் எல்லைகளை அடையாளப்படுத்தி மக்களை வழிப்படுத்துகிறது, திருக்குறள்.

**ஆன்மீக அறம்**

கடவுளைச் சமுதாய அமைதிக்கும் மனித ஒருமைக்குமான கோட்பாடாய் வடித்துத் தந்தது திருக்குறளின் மாபெரும் புரட்சிகரச் சிந்தனை ஆகும். கடவுள் என்பது பேரறிவு; தூய்மையான அறிவு; குணங்களின் திருவுரு; இன்பத்தின் திருவுரு; அன்பின் திருவுரு என்கிறது, குறள்.

**ஈதல் அறம்**

பிறருக்குக் கொடுத்து மகிழும் ஈகையின் சிறப்பினை முதன்மைப்படுத்திப் பேசுகிறது, திருக்குறள். போட்டியும் பொறாமையும், அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருகமாக்குகின்றன. இந்நிலையிலிருந்து மனிதனை மீட்டு, உன்னத நிலைக்குக் கொண்டுசெல்ல ஈகையை ஓர் அறமாய் வற்புறுத்துகிறார், வள்ளுவர். 'ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல ஊதியம் இல்லை உயிர்க்கு' என்பது வள்ளுவம் வற்புறுத்தும் கோட்பாடாகும்.

**காதலறம்**

அன்பெனும் நெறிக்குள் இல்வாழ்க்கை அமைய வேண்டும் என்பது திருக்குறள் வகுத்துரைக்கும் இல்லற நெறியாகும். பிறன்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும் குற்றமென உரைக்கிறது, குறள். ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கையில் சமுதாய நலன்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் திருக்குறள் வற்புறுத்தக் காணலாம்.

**சமூக ஒற்றுமை**

சாதி, மதம் ஆகியவற்றின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும் கொடுமைகளையும் களைந்திட முயன்றவர் திருவள்ளுவர். பிறப்பால் அனைவரும் சமம் என்பது அவர் ஓங்கி முழங்கிய கோட்பாடாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பது வள்ளுவத்தின் வாக்கு.

**முடிவுரை**

ஒரு சமுதாயம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான விதிகளை, சட்ட நூலாய் மட்டுமின்றி இலக்கிய நயத்துடனும் எடுத்துக்காட்டிய நூல் திருக்குறள் ஆகும். தமிழ்ச்சமூகம் உலகச் சமூகத்துக்கு வழங்கிய பெருங்கொடையாய்த் திருக்குறள் மதிக்கப்படுகிறது. இவ்வாறு திருக்குறள் வாழ்வியல் இலக்கியமாய்ப் போற்றப்படுவதில் தமிழர் அனைவரும் பெருமை கொள்வோம்.

**4. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

மனமோ மாட்டுவண்டி


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு.

**அ. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

ஆ. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ, அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

5. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

நீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் – மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

அ. பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

ஆ. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

**இ. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்**
**அல்லல் படுப்பதூஉம் இல்.**

6. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?

அ. வாள்போல் பகைவர் ஆ. மெய்ப்பொருள் காண்பவர்
இ. எண்ணியாங்கு எய்துபவர் **ஈ. தீயினத்தார்**

7. திண்ணியர் என்பதன் பொருள் தருக.

அ. அறிவுடையவர் **ஆ. மன உறுதியுடையவர்**
இ. தீக்காய்வார் ஈ. அறிவினார்

8. ஆராய்ந்து சொல்கிறவர்

அ. அரசர் ஆ. சொல்லியபடி செய்பவர்
**இ. தூதுவர்** ஈ. உறவினர்

9. பொருத்துக.

அ. பாம்போடு உடன் உறைந்தற்று 1. தீக்காய்வார்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

ஆ. செத்தார் 2. சீர் அழிக்கும் சூது

இ. வறுமை தருவது 3. கள் உண்பவர்

ஈ. இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் 4. உடம்பாடு இலாதவர்

அ. 1, 2, 3, 4 ஆ. 2, 3, 4, 1 இ. 4, 1, 3, 2 **ஈ. 4, 3, 2, 1**

10. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்?

**அ. வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக்கூடியவர்**

ஆ. மனத்திட்பம் உடையவர்

இ. அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ. சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

11. எளியது, அரியது என்பன?

அ. தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை

**ஆ. சொல்வது – சொல்லியபடி செய்வது**

இ. சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு

ஈ. மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

12. அழிவு வராமல் காக்கும் கருவி ____________

அ. அழகு **ஆ. அறிவு** இ. உழைப்பு ஈ. அன்பு

13. _____________ காண்பது அறிவு.

அ. பொய்ப்பொருள் **ஆ. மெய்ப்பொருள்**

இ. தத்துவப்பொருள் ஈ. பொருளின்பொருள்

14. நன்றின்பால் உய்ப்பது ___________

அ. அன்பு ஆ. பக்தி இ. பண்பு **ஈ. அறிவு**

15. உருவு கண்டு ____________ வேண்டும்.

அ. சீறாமை ஆ. கொள்ளாமை

**இ. எள்ளாமை** ஈ. அழுக்காறாமை

16. கள்ளுண்பவரும் ___________ ஒன்றே.

அ. மருத்துண்பவரும் **ஆ. நஞ்சுண்பவரும்**

இ. பாலுண்பரும் ஈ. பழமுண்பவரும்

17. சிறுமை பல செய்து சீரழிப்பது ___________

**அ. சூது** ஆ. மாது இ. ஏது ஈ. தூது

18. பண்பு கெடுக்கும் கழகம் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது ____________

அ. விளையாட்டிடம் ஆ. கள்ளுண்ணுமிடம்

**இ. சூதாடுமிடம்** ஈ. போரிடுமிடம்

**இயல் -7**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**உரைநடை உலகம்**

**இலக்கியத்தில் மேலாண்மை**

I. **பலவுள் தெரிவு**

1. 'இலக்கியத்தில் மேலாண்மை' நூலை எழுதிய ஆசிரியர் வெ.இறையன்பு பணியாற்றி வரும் துறை ___________

அ. இந்தியக் காவல்துறைப்பணி

**ஆ. இந்திய ஆட்சிப்பணி**

இ. இந்திய வெளியுறவுத்துறைப்பணி

ஈ. இந்தியத் தொல்பொருள் துறைப்பணி

2. வெ.இறையன்பு எழுதி, தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசினைப் பெற்ற நூல் ___________

**அ. வாய்க்கால் மீன்கள்** ஆ. ஏழாவது அறிவு

இ. உள்ளொளிப் பயணம் ஈ. மூளைக்குள் சுற்றுலா

3. சங்க காலத்தில் மிகப்பெரிய துறைமுகமாகவும், யவனர்களின் கப்பல் நிறுத்தி வைக்கப்படும் இடமாகவும் திகழ்ந்த இடம் ____________

அ. தொண்டி ஆ. காவிரிப்பூம்பட்டினம்

**இ. முசிறி** ஈ. காரைக்கால்

4. மேலாண்மை விதியில் நமக்குள் உந்துசக்தியை உற்பத்தி செய்கிறவர்கள் _________

அ. நுகர்வோர் **ஆ. போட்டியாளர்**

இ. மொத்த விற்பனையாளர் ஈ. சில்லறை விற்பனையாளர்

5. 'இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது'என்னும் கோட்பாட்டைச் சொன்னவர் ___________

அ. வெ. இறையன்பு ஆ. டைமன்

இ. ஷேக்ஸ்பியர் **ஈ. ஹீராக்ளிடஸ்**

6. ஒவ்வொரு நாளும் ________ புதியது என்று வெ.இறையன்பு குறிப்பிடுகிறார்.

அ. பூமி ஆ. நிலவு **இ. சூரியன்** ஈ. விண்மீன்

**2. அதிசய மலர்**

குண்டு மழை பொழிந்து, நிலங்கள் அழிக்கப்பட்ட தாய்மண்ணில் பூ ஒன்று மலர்கிறது. அந்தப் பூவின் புன்னகை, நாடுபற்றிய நம்பிக்கையைச் சிதறிய மனிதரிடையே பரப்புகிறது என்னும் கருத்தை இப்பாடலாசிரியர் எளிய நடையில் விளக்குகிறார்.

**ஆசிரியர் வரலாறு**

பெயர் : தமிழ்நதி

இயற்பெயர்: கலைவானி

ஊர் : திருகோணமலை (இலங்கை)

படிப்பு : யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்றவர்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

படைப்புகள் : நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது, சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் மொழியும் துயரப்பனி, கானல் வாரி, ஈழம் : கைவிடப்பட்ட தேசம், பார்த்தீனியம் போன்ற பல்வேறு நூல்களைப் படைத்துள்ளார்.'

## II. பலவுள்தெரிவு

1. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது _________

   **அ. கடந்த காலத் துயரங்களை** ஆ. ஆள்களற்ற பொழுதை

   இ, பச்சையம் இழந்த நிலத்தை ஈ. அனைத்தையும்

2. ஞாபகத்தில் மட்டுமே படிந்திருக்கும் எனத் தமிழ்நதி எவற்றைக் குறிப்பிடுகிறார்?

   **அ. மரங்கள்** ஆ. பறவைகள்

   இ. மழை ஈ. இவை அனைத்தும்

3. 'அதிசய மலர்' கவிதை இடம் பெற்றுள்ள நூல் __________

   அ. இரவுகளில் பொழியும் துயரப்பனி ஆ. கானல் வரி

   இ. ஈழம்: கைவிட்ட தேசம் **ஈ. அதன் பிறகு என்றும்**

4. பேரழிவைக் கடந்து உயிர் பிழைத்திருக்கும் மனிதரிடையே அதிசய மலரின் புன்னகை சொல்லிச் செல்வது __________

   அ. உழைப்பை **ஆ. நம்பிக்கையை**

   இ. பொறுமையை ஈ. வெறுப்பை

5. 'அதிசய மலர்' கவிதையை எழுதிய ஆசிரியர் ___________

   அ. நகுலன் ஆ. சுகந்தி சுப்பிரமணியன்

   **இ. தமிழ்நதி** ஈ. சாந்தா தத்

## 3. தேயிலைத் தோட்டப்பாட்டு

**நூல் எழுந்த வரலாறு**

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினாலும், வெள்ளையர் வஞ்சத்தினாலும் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்புத்தோட்டத் தொழிலாளர்களாகவும், தேயிலைத்தோட்டக் கூலிகளாகவும் கடல் கடந்து வேலை செய்தனர்.

அங்கே அவர்கள் அடைந்த துன்பங்களும் துயரங்களும் அவர்களை விம்மி விம்மி அழ வைத்தன. வெகு சனங்களிடையே கும்மிப்பாடல்களாய் வந்த 'தேயிலைத்தோட்டப்பாட்டு' போன்ற சிறு நூல்கள் இத்துயரத்தைப் பதிவு செய்தன.

**கும்மி**

மகளிர் குழுமிக் கை கொட்டி விளையாடும் பொழுது பாடுவதே கும்மி ஆகும். கும்மிப்பாடல், வெண்பா இனத்தைச் சார்ந்தது. வெண்டளை மட்டுமே அமைந்த எழுசீர்க் கழிநெடிலடிகள் ஓர் எதுகை கொண்டு அமைவதாகும்.

ஈற்றுச்சீர் பெரும்பாலும் விளங்காய்ச்சீராய் வரும். இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி என்பன கும்மியின் வகைகளாகும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

முகம்மது இராவுத்தர் இயற்றிய 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற 'தேயிலைத்தோட்டப்பாட்டு' என்னும் நூலில் இடம் பெற்றுள்ள கும்மிப் பாடல்களுள் சில நமக்குப் பாடமாய் அமைந்துள்ளன.

**1. இலக்கணக்குறிப்பு எழுதுக.**

சாலச்சிறப்பு - உரிச்சொற்றொடர்

அருஞ்சேகரம் - பண்புத்தொகை

சீரும் சிறப்பும், பேயினும் நாயினும் - எண்ணும்மைகள்

பெண்டு பிள்ளை - உம்மைத்தொகை

உண்டு, பிறந்து - வினையெச்சங்கள்

வளர்ந்த - பெயரெச்சம்

**2. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

**திகழ்ந்து** – திகழ் +த்(ந்)+த்+உ.

**திகழ்**- பகுதி; த்- சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

**புகுந்து** – புகு+த்(ந்) +த்+உ.

**புகு**- பகுதி; த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ- வினையெச்ச விகுதி.

**வாழ்ந்து** – வாழ் +த்(ந்)+த்+உ

**வாழ்**- பகுதி; த் –சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ-வினையெச்ச விகுதி.

**I. பலவுள் தெரிவு**

1. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது.

கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது.

அ. கூற்று 1-சரி, கூற்று 2- தவறு **ஆ. கூற்று 1, 2 சரி**

இ. கூற்று 1, 2 தவறு ஈ. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

## 4. புறநானூறு

**பெயர்க்காரணம்**

புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறப்பொருள் தொடர்பான நானூறு பாடல்களைக் கொண்ட நூலாதலின், இந்நூல் இப்பெயர் பெற்றது. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டதால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறம், புறப்பாட்டு எனவும் இந்நூல் வழங்கப்பெறும்.

**அகம், புறம்**

அகமாவது, இன்பத்தைப்பற்றிக் கூறுவதாம். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம் உள்ளத்தால் அனுபவிக்கும் இன்பம், அகம் எனப்படும். அஃது எத்தகையதென்று புறத்தார்க்குச் சொல்ல இயலாததாம்.அகத்தால் நுகரப்படுதலின் அகம் எனப்பட்டது. (அகம் – உள்)


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

புறமாவது, அறத்தையும் பொருளையும்பற்றிக் கூறுவது. அஃது ஒத்த அன்புடையாரே அன்றி அனைவராலும் அனுபவிக்கப்பட்டு, இத்தகையதென்று புறத்தார்க்கும் எடுத்து உணர்த்தக்கூடியதாய் நிகழும் ஒழுக்கமாதலின் புறம் எனப்பட்டது. (புறம் – வெளி). இத்தகைய புறப்பொருள் தொடர்பான பாடல்கள் இந்நூலில் உள்ளன.

**நூலின் இயல்புகள்**

இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்களால் பல்வேறு சமயங்களில் பாடப்பட்டனவாகும். அரசன்முதல் பல்வகைத் தொழில் புரிவாரும் புலமை மிக்கவராய்ப் பாடல்கள் இயற்றியுள்ளனர். தொல்காப்பியம் என்னும் மிகப்பழைய தமிழிலக்கணத்திற்கு முற்பட்ட பாட்டுகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. புலவர்கள் தனித்தனியே பாடிய பாடல்களை எல்லாம் அரிதின் முயன்று தேடித் தொகுக்கப்பட்ட தொகைநூல் இது. இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை.

**நூலின் பெருமை**

இந்நூல் தமிழருடைய சிறந்த கருவூலம் என்று கூறத்தக்க பெருமையுடையதாகும். பண்டைக்காலத் தமிழ்மக்களுடைய உயர்ந்த நாகரிகம், அரசியல், போர்த்திறம், சமுதாயப்பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாம் அறிந்துகொள்வதற்குப் பேருதவி புரிவது இந்நூலேயாகும். பண்டைக்காலப் பேரரசர், சிற்றரசர், படைத்தலைவர், வீரர்கள், வள்ளல்கள் ஆகியவர்களின் வரலாறுகளை ஓரளவு அறிய இந்நூலே கருவியாய் உள்ளது. ஆதலால். இந்நூல் வரலாற்றாராய்ச்சிக்குப் பெருந்துணை புரிவதாகும். புலவர்கள் பலரால் இந்நூற்பாடல்கள் மேற்கோள்களாய் எடுத்தாளப்பட்டுள்ளன. ஜி.யு.போப் என்னும் மேல்நாட்டறிஞர் நூலின் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**இன்ன வகை எண்பது**

இந்நூல் சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் மேற்கணக்கு நூல்களுள் எட்டுத்தொகையைச் சார்ந்ததாகும். ஏனையவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பனவாகும்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறமென்(று)
இத்திறந்த எட்டுத் தொகை"

என்னும் பழைய வெபா, எட்டுத்தொகை நூல்கள் இவையென உணர்த்தும்.

**திணை, துறை விளக்கம்**

இந்நூல் தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணத்திற்கு இலக்கியமாய் ஒவ்வொரு பாடலும் புறப்பொருள் திணை, துறைகளைக் கொண்டு விளங்குகிறது.

தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழு புறத்திணைகளையே சுட்டுகிறார்.

புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார், புறத்திணைகள் வெட்சி,கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் பன்னிரண்டென்பார்.

திணை என்பது மக்கள் ஒழுக்கம்.

துறை என்பது மக்களும் விலங்கும் சென்று நீர் உண்ணும் துறை போலப் பல வகைப்பட்ட பொருள்களும் ஒருவகைப்பட்டுச் செல்வதற்குறிய வழியாகும். மக்கள் வாழ்க்கைக்குரிய நெறி என்று சுருக்கமாய்க் கூறலாம். திணை, ஆறு போன்றது; துறை, ஆற்றில் மக்கள் இறங்கும் துறை போன்றது. இந்நூலிலிருந்து ஒரு பாடல் நமக்குப் பாடமாய் அமைந்துள்ளது.

**பாடலை எழுதியவர் வரலாறு**

சங்க காலப் புலவர்களுள் ஒருவரான பிசிராந்தையாரின் இயற்பெயர், ஆந்தையார். பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர். ஆந்தையார் என்னும் பெயர் ஆதன் தந்தை என்னும் பெயர்களின் கூட்டுச்சொல் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. கோப்பெருஞ்சோழன், பாண்டியன் அறிவுடைநம்பி ஆகியோரைப் பாடியுள்ளார். அரசனுக்கு அறிவுரை சொல்லக்கூடிய உயர்நிலையில் இருந்த சான்றோர் இவர். நேரில் காணாமலேயே கோப்பெருஞ்சோழனோடு நட்புப் பூண்டு அவருடன் சேர்ந்து வடக்கிருந்து உயிர் துறந்தார், பிசிராந்தையார்.

**முன்னுரை**

குடிமக்களின் உள்ளப்பாங்கை அறிந்து அதற்கு ஏற்றவாறு ஆட்சி புரிபவனே சிறந்த அரசன். மக்களின் விருப்பத்திற்கு மாறாய் அரசன் செயல்படுவது நாட்டின் வளர்ச்சிக்குக் கேடு விளைவிக்கும். அரசனை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பைச் சங்கப்புலவர்கள் மேற்கொண்டனர். அவ்வாறு அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு பிசிராந்தையார் இப்பாட்டில் தெளிவாய்க் கூறுகின்றனர். உண்ணும் நிலம் போல அரசனும் உண்ணாது அவன் நாடும் கெட்டொழியும் எனப் பாண்டிய மன்னன் அறிவுடை நம்பியிடம் சென்ற பிசிராந்தையார், அரசன் சிறப்படைய இப்பாடல் அடிகளைப் பாடினார்.

இந்தச் செய்யுளில் அமைந்துள்ள திணை, பாடாண்; துறை, செவியறிவுறூஉ.

**பாடாண் திணை:** பாடு + ஆண் +திணை – பாடாண் திணை ஆயிற்று. பாடப்படும் ஆண்மகனது புகழ், வலிமை, கொடை, அருள், கல்வி போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**துறை: செவியறிவுறூஉ :** அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

**பா வகை:** ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, ஈற்று அயலடி மூன்று சீர்களாகவும்(சிந்தடி) ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் (அளவடி) அமைந்து வந்துள்ளதால் இப்பாடல் நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

1. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

   **காய்நெல் –** வினைத்தொகை

   **புக்க –** பெயரெச்சம்

   **அறியா –** ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2. **பிரித்துப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

   **அறிந்து-** அறி +த்(ந்) + த் +உ.

   **அறி-** பகுதி; த்- சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

   **அறுத்து-** அறு + த் +த் +உ

   **அறு –** பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

www.Padasalai.Net

I. **பலவுள் தெரிவு**

1. யானை புக்க புலம்போல – உவமைக்குப் பொருத்தமான தொடர் எது?

அ. தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

**ஆ. தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது.**

இ. பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது.

ஈ. தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்.

2. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள புறநானூற்றுப்பாடலின் வரிசை எண் ____________

அ. 164 ஆ. 174 **இ. 184** ஈ. 154

3. பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக வரலாற்றை விளக்கும் அரிய கருத்துக் கருவூலமாய்த் திகழ்வது _____________

அ. நற்றிணை ஆ. குறுந்தொகை

இ. அகநானூறு **ஈ. புறநானூறு**

II. **கோடிட்ட இடத்தை நிரப்புக.**

புறநானூற்றுப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் _____________ ஆவார்.

**விடை:** ஜார்ஜ் எல் ஹார்ட்.

## 5. சங்க காலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

I. **பலவுள் தெரிவு**

1. புகளூர்க் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலம் __________

அ. கி.பி. 5 ஆம் நூற்றாண்டு ஆ. கி.பி. 4 ஆம் நூற்றாண்டு

இ. கி.பி. 3 ஆம் நூற்றாண்டு **ஈ. கி.பி. 2 ஆம் நூற்றாண்டு**

2. புகளூர்க் கல்வெட்டைப் பொறித்த சேரல் இரும்பொறை மன்னர்களைச் சிறப்பித்துப் பாடும் நூல் _________

**அ. பதிற்றுப்பத்து** ஆ. நற்றிணை

இ. குறுந்தொகை ஈ. பரிபாடல்

3. புகளூர் ஆறுநாட்டான் குன்றின்மீதுள்ள குகைகளுள் ஒன்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு யாரைப் பற்றியது?

அ. களப்பிரர் ஆ. சேரர் இ. சோழர் ஈ. பாண்டியர்

4. சேரல் இரும்பொறை மன்னர்கள் ஆட்சி செய்த இடம் _________

அ. நாமக்கல் ஆ. திண்டுக்கல் இ. கருவூர் ஈ. சேலம்

5. மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுபவன் ___________

**அ. நெடுஞ்செழியன்** ஆ. சேரல் இரும்பொறை

இ. குலோத்துங்கசோழன் ஈ. மகேந்திரவர்மன்

6. தொல்லியல் ஆய்வுக்காக 'ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர்' என்ற விருதினைப் பெற்றவர் ____________


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

அ. மா. இராசமாணிக்கனார் ஆ. வெ. இறையன்பு

**இ. ஐராவதம் மகாதேவன்** ஈ. முகம்மது இராவுத்தர்

## 6. தொன்மம்

I. **இலக்கணத் தேர்ச்சி கொள்**

I. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ. கர்ணன் தோற்றான் போ

**ஆ. வயதில் சிறியவள், ஆனாலும் ஔவையார்!!**

இ. இந்த நாரதரிடம் எச்சரிக்கையாய் இரு

ஈ. இந்தா போறான் தருமன்

II. தொன்மம்பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ. உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்

ஆ. பழங்கதையைக்கொண்டு கருத்தை விளக்குவது

இ. நம்ப முடியாதவைபோல் தோன்றும் நிகழ்ச்சிகள், செய்திகள்

**ஈ. விளங்காத கருத்துகளைப் பழமொழியின்மூலம் விளக்குவது.**

'சாபவிமோசனம்', 'அகலிகை' ஆகிய கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர் __________

அ. கு. அழகிரிசாமி **ஆ. புதுமைப்பித்தன்**

இ. ஜெயமோகன் ஈ. எஸ்.இராமகிருஷ்ணன்

III. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

அ. அறம் 1. கர்ணன்

ஆ. வலிமை 2. மனுநீதிச் சோழன்

இ. நீதி 3. பீமன்

ஈ. வள்ளல் 4. தருமன்

அ. 3, 2, 1, 4 ஆ. 4, 3, 2, 1 இ. 2, 4, 3, 1 **ஈ. 4, 3, 1, 2**

I. **பலவுள் தெரிவு**

1. 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்'- விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் ________

அ. சோழன் நெடுங்கிள்ளியைப் பரணர்

**ஆ. சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார்**

இ, கணைக்கால் இரும்பொறையைக் கபிலர்

ஈ. காரிகாலனை உருத்திரங்கண்ணனார்

2. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் – இத்தொடரில் பெயரெச்சம்

அ. உண்டு ஆ. பிறந்து

www.Padasalai.Net

**இ. வளர்ந்த** ஈ. இடந்தனில்

3. தொன்மத்தை வெளிப்படுத்தும் முதன்மையான கருவியாய் விளங்குவது ________

அ. உரைநடை ஆ. சிறுகதை

இ. கட்டுரை **ஈ. கவிதை**

4. திருவிளையாடற்புராணத்துச்சிவன், நக்கீரன் ஆகியோரைக்கொண்டு அழகிரிசாமி எழுதிய சிறுகதை __________

அ. பத்மவியூகம் **ஆ. விட்ட குறை, வெந்தழலால் வேகாது**

இ. அரவாணன் ஈ. அறத்திற்குத் தருமன்

5. தொன்மங்களைக்கொண்டு ஜெயமோகன் எழுதிய புதினம் _________

அ. விட்ட குறை **ஆ. பத்மவியூகம்**

இ. அரவாணன் ஈ. வெந்தழலால் வேகாது

6. 'அரவாணன்' புதினத்தில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர் ________

**அ. எஸ்.ராமகிருஷ்ணன்** ஆ. ஜெயமோகன்

இ. அழகிரிசாமி ஈ. புதுமைப்பித்தன்

7. 'முருகு உறழ் முன்போடு
கடுஞ்சினம் செருகிப் பொருத யானை'

- தொன்மங்களைக் கொண்ட இப்பாடலடி இடம் பெற்ற நூல் _________

அ. அகநானூறு ஆ. தொல்காப்பியம்

**இ. நற்றினை** ஈ. குறுந்தொகை

II. **மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. **ஆற அமர:** நீ தொழில் தொடங்குவதற்கு முன் **ஆற அமர** யோசிக்க வேண்டும்.
2. **ஆணி அடித்தாற்போல :** என் நண்பன் எழுதிய கவிதை, சமுதாயச் சீர்கேடுகளை **ஆணி அடித்தாற்போல** உணர்த்தின.
3. **அகலக்கால்:** வரவுக்கு மீறிச் செலவு செய்து **அகலக்கால்** வைப்பது ஆபத்தில் கொண்டு விடும்.
4. **வழிவழியாக :** எங்கள் வீட்டில் **வழிவழியாக**க் குலதெய்வ வழிபாடு நடத்தி வருகிறோம்.
5. **கண்துடைப்பு :** வேலை வாய்ப்புக்கான நேர்காணல் இன்று வெறும் **கண்துடைப்பாகி** வருகிறது.

III. **இலக்கிய நயம் பாராட்டுக.**

"பூமிச்சருகாம் பாலையை
முத்துப்பூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவோன்!


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

இரவெரிக்கும் பரிதியை – ஏழை

விறகெரிக்க வீசுவேன்.

- நா. காமராசன்

**இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு :** 'புதியதோர் உலகம்'.

**திரண்ட கருத்து:** காய்ந்து கிடக்கும் பாலைவனப்பூமியை முத்துகள் பிறக்கும் கடல்களாய் ஆக்குவேன். புயலின் வேகத்தைக் குறைத்துப் புதிய தென்றலாய் ஆக்குவேன். பொருள் வேண்டுவோர்க்கு விண்மீன் காசுகளைக் கொடுத்து, அவர்களோடு பேசுவேன். இரவை அழிக்கும் சூரியனை ஏழையர்க்கு விறகெரிக்க வீசுவேன் என்கிறார், கவிஞர்.

**மையக்கருத்து :** சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் சீர்கேடுகளையும், வன்மங்களையும் தம் கவிதைகள் மூலம் குறைத்திடம் ஏழைகளின் நிலையை உயர்த்திடவும் முடியும் என்னும் மையக்கருத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

**தொடைநயம் :** இப்பாடலில், எதுகைத்தொடை, மோனைத்தொடை, இயைபுத்தொடை ஆகியவை அமைந்துள்ளன.

**அ) எதுகைத்தொடை:** அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகையாகும். இப்பாடலில்

இ**ர**வில் இ**ர**வில்

இ**ர**வலரோடு இ**ர**வெரிக்கும்

**ஆ) மோனைத்தொடை**

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது அடிமோனையாகும். சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வருவது சீர்மோனையாகும். இப்பாடலில்,

**பு**யலை **இ**ரவில்

**பு**திய **இ**ரவலரோடு

என அடிமோனைகள் அமைந்துள்ளன எனச் சீர்மோனைகள் அமைந்துள்ளன.

**இ) இயைபுத்தொடை**

பாடலின் கடைசிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத்தொடை ஆகும்.

. . . . . கடல்களாக்குவேன் . . . . . பேசுவேன்

. . . . . தென்றலாக்குவேன் . . . . . வீசுவேன்

என இயைபுத்தொடை அமைந்துள்ளது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**அணிநயம் :** பாலைவனத்தைக் கடல்களாக்கவோ, புயலைத் தென்றலாக்கவோ, சூரியனை விறகெரிக்கவோ முடியாது. தமது கவிதை இச்சமூகத்தில் பல மாற்றங்களை நிகழ்த்தும் என்பதை உணர்த்திட, நடக்க முடியாத நிகழ்வுகளைக்கூட இயற்கைக்கு மாறாய் உயர்த்திக் கூறுவதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி அமைந்துள்ளது.

**கற்பனை நயம் :** இப்பாடலில் பாலைவனத்தைப் பூமிச்சருகாகவும், விண்மீனைக் காசாகவும் பாடியிருக்கும் கவிஞரின் கற்பனை நயம் போற்றுதற்குரியதாகும்.

**IV. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.**

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும்
காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
**விடை:** வாழைத் தோட்டத்தில் குயில்கள் கூவிக்கொண்டும்
காகங்கள் கரைந்துகொண்டும் இருந்தன.
2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
**விடை:** முருகன் சோறு உண்டு, பால் பருகினான்.
3. கோவிந்தன் குடியிருக்கச் சுவர் கட்டிக் கூரை அமைத்தார்.
**விடை:** கோவிந்தன் குடியிருக்கச் சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்தார்.
4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.
**விடை:** வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையையும் யானைக் கன்றையும் கண்டேன்.
5. ஆட்டுத்தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைந்திருந்தன.
**விடை:** ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகள் அமைத்திருந்தன.
6. பனைமட்டையால் கூரை வைத்திருந்தனர்.
**விடை:** பனையோலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

**V. பத்தியைப் படித்துத் தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

இளங்கோ அடிகள் சாத்தனாரிசம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

**விடை:** இளங்கோ அடிகள் சாத்தனாரிசம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக" எனக் கேட்டார்.

## இயல் - 8

## மனிதம், ஆளுமை

### 1. நம் அடையாளங்களை மீட்டவர்

**VI. பலவுள் தெரிவு**

1. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**அ. தனித்தமிழ்த் தந்தை** **1. மு. வரதராசனார்**

ஆ. ஆராய்ச்சிப் பேரறிஞர் 2. மயிலை சீனி. வேங்கடசாமி

இ. தமிழ்த்தென்றல் 3. திரு.வி.க.

ஈ. மொழி ஞாயிறு 4. தேவநேயப்பாவாணர்

2. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ. பௌத்தமும் தமிழும் ஆ. இசுலாமும் தமிழும்

இ. சமணமும் தமிழும் **ஈ. கிறித்தவமும் தமிழும்**

3. தந்தையின் சித்த மருத்துவப் பின்புலமும், தமையனாரின் தமிழ்ப்பின்புலமும் மயிலையாரை எவ்வாறு உருவாக்கியது?

அ. சித்த மருத்துவராய் **ஆ. வரலாற்று ஆய்வாளராய்**

இ. எழுத்தாளராய் ஈ. கவிஞராய்

4. ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளியில் எத்தனை ஆண்டுகள் மயிலை சீனி. வேங்கடசாமி பணியாற்றினார்?

**அ. 25** ஆ. 28 இ. 30 ஈ. 32

5. மயிலையார் எழுதிய முதல் நூலின் பெயர் ___________

அ. பௌத்தமும் தமிழும் ஆ. சமணமும் தமிழும்

**இ. கிறித்தவமும் தமிழும்** ஈ. களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

6. தமிழில் எந்தப் பல்லவ மன்னனைப்பற்றி மயிலையார் முதலில் எழுதிப் பெருமை பெற்றார்?

**அ. நந்திவர்மன்** ஆ. மகேந்திரவர்மன்

இ. நரசிம்மவர்மன் ஈ. கந்தவர்மன்

7. 'தமிழர்களின் வரலாற்றில் இருண்டகாலம்' என்று எவர் ஆட்சிக்காலம் குறிப்பிடப்படுகிறது?

அ. பல்லவர் ஆ. நாயக்கர்

**இ. களப்பிரர்** ஈ. பாளையக்காரர்

8. தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் நூல் _____

அ. நுண்கலைகள்

**ஆ. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்**

இ. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்

ஈ. இசைவாணர் கதைகள்

9. மயிலையாரின் மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாய் அமைந்த நூல் ___________

**அ. தமிழ்நாட்டு வரலாறு** ஆ. கொங்கு நாட்டு வரலாறு

இ. பழங்காலத் தமிழர் வணிகம் ஈ. களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

10. தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் ஊக்கம் அளிப்பதாய் அமைந்த மயிலையாரின் நூல் __________

அ. சாசனச் செய்யுள் மஞ்சரி ஆ. மத்த விலாசம்

இ. அஞ்சிறைத்தும்பி **ஈ. மறைந்துபோன தமிழ் நூல்கள்**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

11. மறைந்துபோன எத்தனை நூல்களின் குறிப்புகளை மயிலையார் நம் முன் நிறுத்துகிறார்?

அ. 111 ஆ. 222 **இ. 333** ஈ. 444

12. மயிலையார் ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கிய நாடக நூலின் பெயர் _________

அ. செந்தமிழ்ச்செல்வன் ஆ. அஞ்சிறைத்தும்பி

இ. மகேந்திரவர்மன் **ஈ. மத்த விலாசம்**

13. மயிலையாருக்குத் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் விருதினை அளித்தது________

**அ. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

ஆ. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

இ. பாரதியார் பல்கலைக்கழகம்

ஈ. அழகப்பா பல்கலைக்கழகம்

14. மயிலையாருக்கு அறிஞர்கள் கூடிச் சென்னை கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்து வழங்கிய பட்டம் __________

அ. தமிழ்ப் பேரவைச் செம்மல்

ஆ. ஆராய்ச்சித் துறையில் முதியவர்

இ. கலையியல் அறிஞர்

**ஈ. ஆராய்ச்சிப் பேரறிஞர்**

15. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் எச்சின்னத்தைக் கொண்டிருந்தான்?

அ. சிங்கம் ஆ. புலி **இ. யானை** ஈ. மீன்

16. 'தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்' என்று கூறியவர் ________

அ. பாரதியார் **ஆ. பாரதிதாசன்**

இ,. திரு.வி.க. ஈ. தெ.பொ.மீ

17. 'செந்தமிழ்ச்செல்வி' என்னும் இதழில் மயிலையார் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் எந்தப் பெயரில் வெளியிடப்பட்டன?

அ. மத்த விலாசம் **ஆ. அஞ்சிறைத்தும்பி**

இ. சாசனச் செய்யுள் மஞ்சரி ஈ. மறைந்துபோன தமிழ்நூல்கள்

## 2. முகம்

1. நான் வெற்றுவெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாய்க் குறிப்பிடுவது __________

அ. தமது வீட்டு முகவரியை

ஆ. தமது குடும்பத்தை

**இ. தமது அடையாளத்தை**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

ஈ. தமது படைப்புகளை

2. “எனக்குள்ளே என்னைத் தொலைத்தபின் எனது முகம் _______ போனது.”

அ. மகிழ்ச்சியற்று **ஆ. முகவரியற்று**

இ. கவலையற்று ஈ. அமைதியற்று

3. எல்லா முகமும் அதனதன் கோணத்தில் __________ இறுகிக் கிடக்கிறது.

**அ. இயல்பற்று** ஆ. இயல்புடன்

இ. கோபமுடன் ஈ. வருத்தமுடன்

4. சுகந்தி சுப்பிரமணியனின் கவிதைத் தொகுப்பின் பெயர் ____________

அ. கோடைமழை ஆ. செந்தமிழ்ச்செல்வி

இ. மத்த விலாசம் **ஈ. புதையுண்ட வாழ்க்கை**

5. ‘மீண்டெழுதலின் ரகசியம்’ என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் _________

அ. சாந்தாதத் ஆ. எச்.ஏ.கிருட்டிணனார்

**இ. சுகந்தி சுப்பிரமணியன்** ஈ. திரு.வி.க.

## 3. இரட்சணிய யாத்திரிகம்

**பெயர்க்காரணம்**

உயிர் தன்னைக் காக்க வேண்டி இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்னும் பொருளில் இந்நூலிற்கு ‘இரட்சணிய யாத்திரிகம்’ என்று பெயரிடப்பட்டது.

**நூலின் பெருமை**

கிறித்துவத் தமிழ்க் காப்பியங்களுள் சிறப்பு வாய்ந்தது இரட்சணிய யாத்திரிகம் ஆகும். ஆங்கில நாட்டவரான ஜான் பன்யன் என்பவர் எழுதிய ‘பில்கிரிம்ஸ் புரோகிரஸ்’ என்னும் நூலைத் தழுவித் தமிழ் பண்பாடு சிறிதளவும் தவறாமல் எழுதப்பட்ட நூல் இதுவாகும். இஃது உருவகக் காப்பியமாய்த் திகழ்கிறது.

**நூலாசிரியர் வரலாறு**

பெயர் : எச்.ஏ.கிருட்டிணனார்

காலம் : 234–1827 முதல் 03-02-1900 வரை.

பெற்றோர் : சங்கர நாராயணர் – தெய்வ நாயகி அம்மாள்.

ஊர் : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு.

பெற்றோர் வாழ்ந்த ஊர் : இரட்டியபட்டி.

கற்றது : மாணிக்கவாசகத் தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார்.

பணி : சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றினார்.

நூல்கள் : போற்றித் திருஅகவல், இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள், இரட்சணிய சரிதம்.

சிறப்புப் பெயர் : கிறித்தவக் கம்பர்.

**நூல் அமைப்பு**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

இந்நூல் 3766 பாடல்களைக் கொண்டதாய் விளங்குகிறது. இது ஆதிபருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என ஐந்து பருவங்களைக் கொண்டது.

## I. பலவுள் தெரிவு

1. ‘இரட்சணிய யாத்திரிகம்’ ஒரு பெரும் _________
   அ. உவமைக் காப்பியம் **ஆ. உருவகக் காப்பியம்**
   இ. இரட்டைக் காப்பியம் ஈ. நாடகக் காப்பியம்
2. இரட்சணிய யாத்திரிகத்தில் நும் பாடப்பகுதியாய் இடம் பெற்றுள்ள பருவம் ________
   அ. ஆதி பருவம் ஆ. நிதான பருவம்
   இ. ஆரணிய பருவம் **ஈ. குமார பருவம்**
3. ‘கிறித்துவக்கம்பர்’ என்று போற்றப்படுபவர் _________
   அ. வீரமாமுனிவர் ஆ. சீனி. வேங்கடசாமி
   இ. ஜான் பன்யன் **ஈ. எச்.ஏ.கிருட்டிணனார்**
4. ‘இரட்சணிய யாத்திரிகம்’ என்னும் காப்பியம் எத்தனை பருவங்களைக் கொண்டது?
   **அ. 5** ஆ. 6 இ. 9 ஈ. 12
5. இரட்சணிய யாத்திரிகம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
   அ. 7636 **ஆ. 3766** இ. 6366 ஈ. 3676
6. ‘நற்போதகம்’ என்னும் ஆன்மிக இதழில் இரட்சணிய யாத்திரிகம், தொடராய் வெளிவந்த ஆண்டுகள்
   **அ. 13** ஆ. 12 இ. 14 ஈ. 11
7. இரட்சணிய யாத்திரிகம் முதல் பதிப்பாய் வெளியிடப்பட்ட ஆண்டு _____
   அ. 1849 ஆ. 1852 **இ. 1894** ஈ. 1896

## II. இலக்கணக்குறிப்பு எழுதுக.

கருந்தடம், வெங்குருதி - பண்புத்தொகைகள்
வெந்து, சினந்து, போந்து - வினையெச்சங்கள்
உன்னலிர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று
ஓர்மின் - ஏவல் பன்மை வினைமுற்று
சொற்ற, திருந்திய - பெயரெச்சங்கள்
பாதகர் - வினையாலணையும் பெயர்
ஊன்ற ஊன்ற - அடுக்குத்தொடர்
நினைந்து, உழந்து, களைந்து - வினையெச்சங்கள்
ஈசன் மகன் - நான்காம் வேற்றுமைத்தொகை
சினந்தோர் - வினையாலணையும் பெயர்
செந்நிறம் - பண்புத்தொகை
முள்முடி - உருவகம்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

தலைமிசை - ஐந்தாம் வேற்றுமைத்தொகை

யூதர்களும் போர்ச்சேவகர் குழுவும் - எண்ணும்மை

வெம்குருதி - பண்புத்தொகை

**III. உறுப்பிலக்கணம் எழுதுக.**

**பகைத்த**- பகை +த் +த்+அ

**பகை** – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அ- பெயரெச்ச விகிதி.

**களைந்து** – களை +த்(ந்)+த் +உ

**களை** – பகுதொ; த் – சந்தி; 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

**பழித்தனர்**- பழி+த்+த்+அன்+அர்.

**பழி**-பகுதி; த்-சந்தி; த் –இறந்தகால இடைநிலை; அன் -சாரியை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**இடிந்து** – இடி+த்(ந்)+த்+உ.

**இடி** – பகுதி; த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

**நினைந்து** –நினை +த்(ந்)+த்+உ.

**நினை**- பகுதி; த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த்- இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

**பொறுத்து** – பொறு+த்+த்+உ

**பொறு** – பகுதி; த் –சந்தி; த்- இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

**நின்றனர்** – நில்(ன்) +ற்+அன்+அர்.

**நில்**- பகுதி, 'ல்', 'ன்' ஆனது விகாரம்; ற் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அர் – பலர்பால வினைமுற்று விகுதி.

**IV. பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

1. **முன்னுடை** – முன் + உடை

   **விதி**: 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – முன்ன்+உடை

   **விதி**: 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றிவது இயல்பே' – முன்னுடை

2. **ஏழையென** – ஏழை + என

   **விதி**: 'இஈ ஐவழி யவ்வும்' – ஏழை+ய்+என

   **விதி**: 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – ஏழையென.

3. **செந்நிறம்** – செம்மை+நிறம்

   **விதி**: ஈறு போதல் – செம் +நிறம்

   **விதி**: முன்நின்ற மெய்திரிதல் – செந்நிறம்

4. **வெம்குருதி** – வெம்மை +குருதி

   **விதி**: ஈறுபோதல் – வெம் +குருதி – வெம்குருதி


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## 4. சிறுபாணாற்றுப்படை

**பெயர்க்காரணம்:**

ஒய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடன் என்பவனைத் தலைவனாய்க் கொண்டு நத்தத்தனார் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நூல், சிறுபாணாற்றுப்படை.

இந்நூல், அம்மன்னனிடம் பரிசு பெற்ற சிறுபாணன் ஒருவன், தான் வழியிற்கண்ட இன்னொரு பாணனை அவனிடம் வழிப்படுத்துவதாய் (ஆற்றுப்படுத்துதல்) அமைந்ததால் இப்பெயர் பெற்றது.

**நூலின் பெருமை:**

இஃது ஓர் ஆற்றுப்படை நூல். பத்துப்பாட்டு நூல்களுள் மூன்றாவதாய் இடம் பெற்றுள்ள நூல். 269 அடிகளைக் கொண்டது. இந்நூல்.

இந்நூலில் சேர நாட்டின் வளம், சோழ நாட்டின் வளம், பாண்டிய நாட்டின் பெருமை, கடையெழு வள்ளல்களின் சிறப்பு யாவும் கூறப்பட்டுள்ளன.

மன்னனை நோக்கிச் செல்லும் வழியில் , அவனுடைய நாட்டில் வெவ்வேறு நிலங்களில் வாழ்பவர்கள் பாணர்க்குச் செய்யும் சிறப்பினைப்பற்றியும் இந்நூல் தெரிவிக்கிறது.

சிறுபாணர், தம் எதிரில் வரும் இன்னொரு சிறுபாணரைச் சந்தித்து, பரிசில் பெறுவது குறித்து ஆற்றுப்படுத்துவதால் சிறுபாணாற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

பத்துப்பாட்டு நூல்கள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியனவாகும்.

**நூலாசிரியர் வரலாறு**

சங்கப்புலவரான நத்தத்தனார் பிறந்த இடைக்கழி நாடு இயற்கைப்பேரெழில் கொஞ்சும் நாடு ஆகும். இந்நாட்டிலுள்ள நல்லூர் என்னும் கிராமத்தில் பிறந்ததால் இவர் 'நல்லூர் நத்தத்தனார்' என்றே வழங்கப்படுகிறார்.

**I. பலவுள் தெரிவு**

1. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி _________

   அ. உதகமண்டலம் ஆ. விழுப்புரம்

   **இ. திண்டிவனம்** ஈ. தருமபுரி

2. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள் ________

   அ. ஆய் அண்டிரனும் **ஆ. நல்லியக்கோடனும் குமணனும்**

   இ. நள்ளியும் ஓரியும் ஈ. பாரியும் காரியும்

3. பேகனின் ஊரான ஆவினன்குடி 'பொதினி' என்று வழங்கப்பட்டுத் தற்போது ________ வழங்கப்படுகிறது.

   அ. திருக்கோவிலூர் ஆ. பாபநாசம்

   இ. குற்றாலம் **ஈ. பழனி**

4. பாரியின் நாடான 'பறம்புமலை'யைச் சூழ்ந்திருந்த ஊர்களின் எண்ணிக்கை ______

   **அ. 300** ஆ. 350 இ. 200 ஈ. 250


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

5. காரியின் மலையமான் நாடு தற்போது அமைந்துள்ள ஊர் ______

அ. தருமபுரி **ஆ. திருக்கோவிலூர்**

**இ.** திண்டிவனம் ஈ. ஊட்டி

6. ஆய் அண்டிரனின் பொதியமலை எனப்படும் மலைநாட்டுப்பகுதிக்குத் தற்போதைய பெயர் ________

அ. மலாடு ஆ. பறம்பு மலை

**இ. அகத்தியர் மலை** ஈ. கொல்லிமலை

7. 'தகடூர்' என்று வழங்கப்பட்ட அதியமான நாட்டின் தற்போதைய பகுதி __

**அ. தருமபுரி** ஆ.திண்டிவனம்

இ. பாபநாசம் ஈ. விழுப்புரம்

8. நள்ளியின் நாடாகிய 'நெடுங்கோடு மலைமுகடு' என்று வழங்கப்பட்ட பகுதி ________

அ. நாமக்கல் ஆ. கொல்லிமலை

இ. பழனி மலை **ஈ. ஊட்டி**

9. வல்வில் ஓரி ஆண்ட பகுதி _______

அ. தகடூர் **ஆ. கொல்லிமலை**

இ. பொதியமலை ஈ. ஊட்டி

10. ஓய்மாநாடு என வழங்கப்பட்ட நிலப்பகுதி __________

**அ. திண்டிவனம்** ஆ. விழுப்புரம்

இ. தருமபுரி ஈ. குற்றாலம்

11. 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறும் நூல் ________

அ. நாலடியார் ஆ. சிறுபஞ்சமூலம்

**இ. பழமொழி நானூறு** ஈ. ஆசாரக்கோவை

12. "தமிழுக்குத் தலை கொடுத்த வள்ளல்" என்று வழங்கப்படுபவன் ________

அ. நல்லியக்கோடன் **ஆ. குமணன்**

இ. ஆய் அண்டிரன் ஈ. வல்வில் ஓரி

13. குமணன் ஆட்சி செய்த நிலப்பகுதி __________

**அ. முதிரமலை** ஆ. கொல்லிமலை

இ. பொதியமலை ஈ. பறம்புமலை

14. சிறுபாணாற்றுப்படை நூலின் அடிகளின் எண்ணிக்கை _______

அ. 296 ஆ. 286 **இ. 269** ஈ. 239

II. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

**அருந்திறாள்< நெடுவழி, வெள்ளருவி, நெடுவேல், நன்மொழி, நன்னாடு –** பண்புத்தொகைகள்

**வாய்த்த, கொடுத்த, ஈந்த –** பெயரெச்சங்கள்

**கவாஅன் –** செய்யுளிசையளபெடை

**நீலம் –** ஆகுபெயர்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**கடல்தானை –** உவமைத்தொகை

**அரவக்கடல் –** இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

**மலைதல் –** தொழிற்பெயர்

**விரிகடல் –** வினைத்தொகை

**வனமலை –** இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**பெருமகன், பெருங்கடல், பெருந்தேர், குறும்பொறை –** பண்புத்தொகைகள்

**வையகம் –** இடவாகுபெயர்

**கமழ் பூஞ்சாரல் –** வினைத்தொகை

**III. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

**ஈந்த-** ஈ+த்(ந்)+த்+அ

**ஈ-** பகுதி; த் – சந்தி. 'ந்' ஆனது விகாரம்; த்- இறந்தகால இடைநிலை; ஆ –பெயரெச்ச விகுதி.

**அமர்ந்தனன் –** அமர்+த்(ந்)+த்+அன்+அன்

**அமர்-** பகுதி; த்-சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

**தாங்கிய-** தாங்கு+இ(ன்)+ய்+அ

**தாங்கு-** பகுதி; இ(ன்)- இடைநிலை; ய்-உடம்படுமெய்; அ-பெயரெச்ச விகுதி

**கொடுத்த-** கொடு+த்+த்+அ

**கொடு-** பகுதி; த்-சந்தி; த்-இறந்தகால இடைநிலை; அ-பெயரெச்ச விகுதி.

**பொழியும்-** பொழி+ய்+உம்

**பொழி-** பகுதி; ய்-உடம்படுமெய் சந்தி; உம்- செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று விகுதி.

**கடந்த –** கட+த்(ந்)+த்+அ

**கட-** பகுதி; த்-சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அ –பெயரெச்ச விகுதி.

**பூண்ட –** பூண்+ட்+அ

**பூண்-**பகுதி; ட்-இறந்தகால இடைநிலை; அ –பெயரெச்ச விகுதி

**திகழ்ந்து –** திகழ்+த்(ந்)+த்+உ

**திகழ்-** பகுதி; த்-சந்தி; 'ந்' ஆனது விகாரம்; த்- இறந்தகால இடைநிலை; உ-வினையெச்ச விகுதி.

**IV. புணர்ச்சி விதி கூறுக.**

**நன்மொழி-** நன்மை +மொழி

**விதி:** 'ஈறுபோதல்' – 'நன்மொழி'

**உரனுடை –** உரன் + உடை

**விதி:** 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – 'உரனுடை'

**அருந்திறல் –** அருமை + திறல்

**விதி:** 'ஈறுபோதல்' – அறு+திறல்; 'இனமிகல்' – அருந்திறல்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**பெருமகன் –** பெருமை+மகன்

**விதி:** "ஈறு போதல்" –பெருமகன்

**பெருங்கடல் –**பெருமை+கடல்

**விதி:** 'ஈறு போதல்' பெரு+கடல், 'இனமிகல்' –பெருங்கடல்

**நெடுவழி –** நெடுமை+வழி

**விதி:** 'ஈறுபோதல்' – நெடுவழி

**பெருந்தேர்-** பெருமை+தேர்

**விதி:** 'ஈறு போதல்'- பெரு+தேர்; 'இனமிகல்' –பெருந்தேர்

**நன்மொழி –** நன்மை+மொழி

**விதி:** 'ஈறுபோதல்' –நன்மொழி

**நெடுவேல் –** நெடுமை + வேல்

**விதி:** 'ஈறு போதல்' –நெடுவேல்

**பூஞ்சாரல்-** பூ+சாரல்

**விதி:** 'பூப்பெயர் முன் இனமென்னையந் தோன்றும்' –பூஞ்சாரல்

## 5. கோடை மழை

## 6. குறியீடு

**I. இலக்கணத் தேர்ச்சிக்கொள்**

1. குறியீடுகளைப் பொருத்துக.

| | |
|---|---|
| அ. பெண் | 1. சமாதானம் |
| ஆ. புறா | 2. வீரம் |
| இ. தராசு | 3. விளக்கு |
| ஈ. சிங்கம் | 4. நீதி |

அ. 2, 4, 1, 3 ஆ. 2, 4, 3, 1 **இ. 3, 1, 4, 2** ஈ. 3, 1, 2, 4

2. கூற்று: 19ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாய் உருப்பெற்றது.

காரணம்: பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்

அ. கூற்று சரி, காரணம் தவறு **ஆ. கூற்று சரி, காரணம் சரி**

இ. கூற்று தவறு, காரணம் தவறு ஈ. கூற்று தவறு, காரணம் சரி

3. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாய் உணர்த்தும் குறியீடுகள் _______

அ. உவமை ஆ. உவமேயம்

இ. உத்தி **ஈ. உள்ளுறை உவமை**

4. 'திட்டம்' என்னும் தலைப்பில் 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?" என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

அ. அமுதசுரபி ஆ. ஆதிரைப்பருக்கை

**இ. திட்டம்** ஈ. பயனற்ற விளைவு

5. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

**அ. குறியீடு** ஆ. படிமம் ஈ. அங்கதம் ஈ. தொன்மம்

6. குறியீட்டின் அடிப்படையாய் விளங்குவது _______

அ, இறைச்சி ஆ. உவமை

**இ. உள்ளுறை உவமம்** ஈ. உருவகம்

7. "உறுபுலி உரு ஏய்ப்பப் பூத்த வேங்கையை" எனத் தொடங்கும் கலித்தொகைப்பாடலில் தலைவனுக்குக் குறியீடாய் இடம் பெறுவது ________

**அ. யானை** ஆ. புலி இ. சிங்கம் ஈ. சிறுத்தை

8. புதுக்கவிதையில் குறியீடாய் அமைந்து கருத்தை அழுத்தமாய் உணர்த்த உதவுவது ________

அ. படிமம் ஆ. அங்கதம் இ. முரண் **ஈ. தொன்மம்**

9. சொல்ல வந்ததை நேரடியாய்ச் சொல்லாமல் இன்னொன்றைக் கூறிக் குறிப்பால் உணர்த்துவது ________

அ. உவமை **ஆ, குறியீடு** இ. உருவகம் ஈ. முரண்

10. அகம், புறம் என எல்லா வகைக் கவிதைகளிலும் குறிப்பாய் உணர்த்தப் பயன்படும் இலக்கிய உத்தி ________

அ. இறைச்சி ஆ. உள்ளுறை உவமம்

இ. உவமை **ஈ. குறியீடு**

**II. தமிழாக்கம் தருக.**

I make sure I have the basic good habits which include respecting mu elders, greeting people when I meet them, wishing them well when departing etc. other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc, are also other good habits of mine. To lead on a peaceful life. I develp other good habits, writing, listening to music, dancing, singing etc, are other such habits which fulfil the needs of my soul.

என்னிடம் உள்ள அடிப்படை நல்ல பழக்கங்களாய் நான் உறுதியிட்டுக் கூறுவது, வயதில் முதியவர்களை மதித்தலும் மக்களைச் சந்திக்கும் போது வாழ்த்துகளைப் பகிர்வதும், விடைபெறும்போது வாழ்கவென வாழ்த்துவதும் ஆகும்.

இவை தவிர, சட்டத்தை மதித்து நடப்பது, ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வது, நோயுற்றோர் மற்றும் தேவை உள்ளவர்களுக்கு உதவி செய்வது, உறைவிடம் இல்லாதவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவி செய்வது போன்றவை என் நற்பண்புகள் ஆகும்.

அமைதியான வாழ்க்கை வாழ, நான் வளர்த்துக்கொண்ட நற்பண்புகளாவன: எழுதுவது , இன்னிசை கேட்பது, நடனம் ஆடுவது, பாடுவது போன்றவையாகும்.

இவை போன்ற பழக்கங்கள் என் ஆன்மாவிற்கு நிறைவைத் தருகின்றன.

**III. விடைக்கேற்ற வினா அமைத்தல்.**

I. குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

**குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

II. நடுவெண் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

**தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை நடுவன் அரசு எப்போது அமைத்தது?**

III. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும், பாதுகாப்பாய் பயணிக்கவும் பயன்படுகின்றன.

**சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் எவற்றிற்குப் பயன்படுகின்றன?**

IV. 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

**தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு எப்போது அமைக்கப்பட்டது?**

V. "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார், கிரியோர்சன்.

**ஆவணப்படம் குறித்து கிரியோர்சன் கூறுவது யாது?**

## VI. இலக்கிய நயம் பாராட்டுதல்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கொஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழுப்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

**முன்னுரை**

தமது கற்பனைத்திறத்தலே, அனைவரும் படித்தறியும் வகையில், எளிய இனிய பாக்களால் 'திருக்குற்றாலக்குறவஞ்சி' என்னும் நூலைத் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றியுள்ளார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் , தென்காசியை அடுத்த மேலகரம் என்னும் ஊரில், 18ஆம் நூற்றாண்டில் பிறந்தவராவார்.

**மையக்கருத்து**

வாழைக்குக் குருத்து அழகு
கவிதைக்குக் கருத்து அழகு

என்பதற்கேற்ப, இப்பாடலில் தான் வாழும் திரிகூடமலையின் பெருமையைக் குறி சொல்லும் குறப்பெண் ஒருத்தி கூறுகிறாள். "அவ்வளவு சிறப்பு வாய்ந்த மலையான குற்றாலமலையில்தான் சிவபெருமான் வீற்றிருக்கிறார். அதுதான் எங்கள் மலையாகும்" என்று கூறுவதாய் இப்பாடலின் மையக்கருத்து அமைந்துள்ளது.

**திரண்ட கருத்து**

சிவபெருமான் வீற்றிருக்கும் குற்றாலமலையில் ஆண்குரங்குகள் பெண் குரங்குகளுக்குப் பழங்களைப் பறித்துக் கொண்டுவந்து தரும். பெண் குரங்குகள் சிந்தும் பழங்களைக் கேட்டுத் தேவர்கள் கெஞ்சி நிற்பார்கள். உயர்ந்த மலையில் உள்ள வேடுவர்கள், வானத்தில் இருக்கும் தேவர்களைக் கண் சிமிட்டி அழைப்பார்கள்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

இறப்பை நீக்கும் மூலிகைகளைச் சித்தர்கள் இங்கே வளர்த்து வருவார்கள். அருவியின் அலை உயர்ந்து எழும்பி வானத்தையே தொடும். அந்த அலைநீரில் கதிரவனின் தேரில் பூட்டிய குதிரைகளின் கால்களும் தேரின் சக்கரங்களும் வழுக்கி விழும்.

**தொடைநயம்**

"தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்"

என்பது போல இப்பாடலில் எதுகைத்தொடை, மோனைத்தொடை, இயைபுத்தொடை ஆகியவை அமைந்துள்ளன.

**அ. எதுகைத்தொடை**

"குளிர்ச்சிக்கு உதகை
கவிதைக்கு எதுகை"

அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகையாகும். அவ்வாறு சிந்தும் பழங்களைக் கேட்டுத் தேவர்கள் கெஞ்சி நிற்பதாகவும், வேடுவர்கள் தேவர்களைக் கண் சிமிட்டி அழைப்பதாகவும் கற்பனை நயத்தோடு திரிகூடராசப்பர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

**பாடலுக்கு ஏற்ற தலைப்பு**

'குற்றாலக்குறவஞ்சி'

**முடிவுரை**

திரிகூடராசப்பக் கவிராயரின் அழகான பாடலைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள இலக்கிய நயங்களை உணர்ந்து எழுதியதில் நான் மகிழ்வுறுகிறேன்.

**VII. அலுவலகப்பொருள்கள்**

Stamp Pad – மை பொதி
Stapler - கம்பி தைப்புக் கருவி
Folder - மடிப்புத்தாள்
File - கோப்பு
Rubber Stamp - இலுவை முத்திரை
Eraser - அழிப்பான்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com